
# நால் வருணம் ஒழிந்ததா?



அசோகனின் கொள்ளுப் பேரன் பிரிகத்ரதன், கி.மு.182இல், புஷ்யமித்திர சுங்கனால் கொல்லப் பட்டான். அரசனான அவனிடமே சேனாதிபதியாக இருந்தவன்தான் புஷ்யமித்திர சுங்கன்.

புஷ்யமித்திர சுங்கன்தான், அதுவரை செவி வழியாக இருந்த மனுநீதியைத் தொகுத்தவன். மனுநீதிதான் இந்துக்கள் பிறவியிலேயே நான்கு வருணத்தாராகப் பிறந்தார்கள் என்று கூறியது. அதன் செல்லுபடிப் பரப்பு இந்தியா முழுவதுக்கும் உண்டு.

தென்னாட்டைப் பொறுத்தவரையில் பராசரஸ்மிருதி, யக்ஞவல்க்கிய ஸ்மிருதி ஆகிய இரண்டும்தான் அதிகச் செல்வாக்கு உள்ளவை. மேலே சொல்லப்பட்ட ஸ்மிருதிகளில் நால் வருணங்கள் கலக்கக் கூடாது என்று கட்டளை விதி இருக்கிறது. ஆனாலும் அதை மீறி நால் வருணத்தார் கலந்தார்கள். அவர் களுக்குப் பிறந்தவர்கள் 6400க்கும் மேற்பட்ட உள்சாதிக்காரர்கள் ஆவார்கள்.

**நால்வருணங்களுக்கிடையே திருமண உறவு கூடாது என்பது 1872ஆம் ஆண்டினுடைய சிறப்புத் திருமணச் சட்டம் மூலம் செல்லுபடி அற்றதாக ஆக்கப்பட்டது. அதாவது வெவ்வேறு வருணத்தைச் சேர்ந்தவர்கள் கலப்புத் திருமணம் செய்து கொள்ளலாம் என்று ஏற்பட்டது. அதற்கு ஒரு நிபந்தனை மட்டும் உண்டு. அதாவது மணமகனும் மணமகளும், "தாங்கள் இந்து மதத்தைப் பின்பற்றுகிறவர்கள்" என்று உறுதி கூற வேண்டும். அது மட்டுமே நிபந்தனை.**

**அதேபோல் 6400 உள்சாதிகளாகப் பிறவியினால் பிரிந்து கிடந்தவர்கள், 1949ஆம் ஆண்டினுடைய திருமணங்கள் செல்லுபடிக்கான 21ஆவது சட்டம் (Hindu Marriage Validity Act, XXI of 1949) வருணங்கள் மாறித் திருமணம் செய்து கொள்ளுவதும்; ஒரே வருணத்தில் உள்சாதி மாறித் திருமணம் செய்து கொள்ளுவதும் செல்லுபடியாகும் என்றும்; 1949-க்கு முன்னர் அப்படி வருணம் மாறியும், உள்சாதி மாறியும் செய்து கொண்ட திருமணங்களும் அம் முன்தேதி முதலே (Retrospective) செல்லும் எனவும் அய்யத்துக்கிடமின்றி வரையறை செய்தது. மேதை அம்பேத்கர் சட்ட அமைச்சராக இருந்த போது நிறைவேற்றப்பட்ட அரிய சட்டங்கள் இவை.**

**ஆனால் மேலே சொல்லப்பட்டபடி, நால்வருணங்கள் கலப்பதற்குத் தடை இருந்ததும் மக்களுக்குத் தெரியாது; அவர்கள் வருணம் மாறித் திருமணம் செய்துகொள்ள 1872இல் சட்டம் வந்ததும் மக்களுக்குத் தெரியாது.**

**உள்சாதி மாறித் திருமணம் செய்துகொள்வது சட்டப்படிக் குற்றம் என்பதும் மக்களுக்குத் தெரியாது.**

**1949ஆம் ஆண்டினுடைய சட்டப்படி உள்சாதி மாறித் திருமணம் செய்துகொள்ள உரிமை உண்டு என்பதும் மக்களுக்குத் தெரியாது.**

சுவடி : 43
ஏடு : 10
ஏப்பிரல் 2019
*
ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
**ஆ. முத்தமிழ்ச்செல்வன்**
*
அனைத்துத் தொடர்புகளுக்கும்
**'சிந்தனையாளன்'**
மனை எண்.277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
அம்பத்தூர், சென்னை - 600 050.

தொடர்புக்கு :
**94448 04980**
**95975 26990**
**94441 05892**

மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

இவையெல்லாம் ஏட்டில் இருக்கின்றன. ஆனால் இவை கல்வி மூலம் மக்களுக்குக் கற்பிக்கப்படவில்லை.

அதனால்தான் புத்தர், மகாத்மா புலே, வடலூர் வள்ளலார், அயோத்திதாசர், பெரியார் ஈ.வெ.ரா., மேதை டாக்டர் அம்பேத்கர் ஆகியோர் கி.மு.500 முதல் கடந்த 2500 ஆண்டுகளாக நால்வருணத்தை எதிர்த்தும், உள்சாதித் தடைகளை எதிர்த்தும் பரப்புரை செய்தும் அக்கொள்கைகள் இன்று வரை வெற்றி பெறவில்லை.

நால்வருணப் பாதுகாப்பு, இந்துச் சட்டம் மூலம் அப்படியே வழக்குரைஞர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது.

அதுமட்டுமன்றி இந்திய அரசமைப்புச் சட்டம் பகுதி-3 (Part III) அடிப்படை உரிமைகள் என்கிற பகுதியில் உள்ள 13ஆம் விதியில் உள்பிரிவு 3ஆ(b) பிரிவின்படி ''செல்லுபடியாகிற சட்டம்'' (Laws in force) என்பது எது?

**''ஏற்கெனவே ஒரு சட்டமன்றத்தாலோ அதிகாரம் வாய்ந்த வேறு ஒரு அமைப்பாலோ இந்தியாவில் இந்த அரசமைப்புச் சட்டம் நடப்புக்கு வருவதற்கு முன்னால் செய்யப்பட்டதாகும். அது ஏற்கெனவே எந்த ஒரு சட்ட அமைப்பாலும் நீக்கப்படாமல் இருந்தால் அந்தப் பழைய சட்டம் இன்றும் செல்லும்'' என்றே பொருளாகும்.**

அத்துடன் நில்லாமல், அரசமைப்புச் சட்டம் 372ஆம் விதியில் 3'ஆ(b)' பிரிவில் விளக்கம்-I என்று வருகிற பகுதியிலும் இதேபோல், சொல்லப்பட்டுள்ளது. இவையெல்லாம் 26.11.1949இல்தான் நிறைவேற்றப்பட்டன.

இந்தப் பாதுகாப்பு இருக்கக்கூடாது என்று கருதிய அம்பேத்கர், 1947இல் அரசமைப்புச் சட்ட அவையில் முன்மொழிந்த ''இந்துச் சட்டத் திருத்த மசோதாவின்'' கடைசிப் பகுதியில் ஒரு விதியைத் தெளிவாக எழுதினார். ''எந்தப் பழைய சட்டமும் வழக்கச் சட்டமும் (Custom), இந்த அரசமைப்புச் சட்டம் நடப்புக்கு வந்த பிறகு செல்லுபடியாகமாட்டா'' என்று எழுதினார்.

அந்தப் பகுதியைப் படித்த உடனே, அரசமைப்புச் சட்ட அவையின் தலைவர் இராசேந்திர பிரசாத், அம்பேத்கரிடம் நேரிடையாக அவையிலேயே, ''நீங்கள் முன்மொழிந்துள்ள இந்தப் பகுதி நிறைவேற்றப்பட நான் இடங்கொடுக்கமாட்டேன்'' என்று சொன்னார்.

**பெரியார், அம்பேத்கர் வழிவந்த நாம் இன்று என்ன செய்ய வேண்டும்? சட்டம் படித்த மேதைகளைக் கூட்டிவைத்து நால் வருணப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரிவுகளை நீக்குவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று விவாதிக்க வேண்டும் என நான் வேண்டுகிறேன்.**

**01.04.2019** **- வே. ஆனைமுத்து**

# கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றக்கோரி தொடர் முழக்கப் போராட்டம்



தமிழ்வழிக் கல்வி இயக்கத்தின் சார்பில் கல்வி உரிமையைப் பொதுப்பட்டியலிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்றக் கோரியும், தமிழ் வழியில் படித்தவர்க்கே வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கக் கோரியும் தமிழ்வழிக் கல்வி இயக்கத்தின் சார்பில் 23.3.2019 காரி காலை 9 மணிமுதல் 1 மணிவரை சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே தொடர் முழக்க ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அ.சி.சின்னப்பா தமிழர் தலைமை தாங்கினார். நா.நந்தன் வரவேற்புரையாற்றினார். செந்தமிழ்வாணன் அறிமுக உரையாற்றினார். இலக்குவனார் திருவள்ளுவன் தொடக்கவுரையாற்றினார். கல்வியாளர் பிரின்ஸ் கசேந்திரபாபு, பொழிலன், தமிழ்நேயன், குமரன், வெ.சேகர், ப.வேலுமணி, செள.சுந்தரமூர்த்தி, கதிர்முத்தையன், இறை பொற்கொடி, முனைவர் இளமாறன், வாலாசா வல்லவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு உரையாற்றினர். நண்பகல் 1 மணிக்கு ஆர்ப்பாட்டம் முடிவுற்றது.

# இரட்டையர் பிறப்பு

என் தோழர் திருச்சி, உறையூர் மு. வெங்கடேசன்-கௌசல்யா இணையர் மகள் வெற்றிச்செல்வி புதுச்சேரி முத்தியால்பேட்டை சங்கர் என்பவருக்கு வாழ்க்கைப் பட்டார்.

இவ்விணையருக்கு, 14.10.2018 அன்று இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்ததன் மகிழ்வாக, ''சிந்தனையாளன்'' வளர்ச்சி நிதியாக, மு. வெங்கடேசன் ரூ.500/- (அய்நூறு) அளித்தார். நன்றி.

**- வே. ஆனைமுத்து**

# இந்திய ஒன்றியத்தின் பொருளாதார வளர்ச்சி வெகுமக்களின் உண்மையான வளர்ச்சியா?

(நாட்டின் மனிதவள மேம்பாடு குறியீட்டு அளவுதான் வெகுமக்களின் உண்மையான வளர்ச்சியை உணர்த்தும்)

**இரா. பச்சமலை**

நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் கணக்கிடுவதற்கு உள்நாட்டு ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பு (Gross Domestic Product - GDP) அளவீடாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. இக்கருத்தியல் 1933இல் அமெரிக்காவில் உருப்பெற்று, 1944-லிருந்து உலக வங்கியால் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி அந்நாடுகளின் உள்நாட்டு ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்புகளின் (உ.உ.ம.) அடிப்படையில் கணித்து வரப்படுகின்றது.

வளர்ந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மக்களிடையே பரவலாக வெளிப்படுகின்றது. ஆனால் வளரும் நாடுகளில் குறிப்பாக இந்திய ஒன்றியத்தில் சமூகம், பொருளாதாரம், கல்வி, மருத்துவம் போன்றவற்றில் பெரும் மேடு பள்ளங்கள் நிலவும் சூழலில் பொத்தாம் பொதுவாக நாட்டின் பொருளாதார வளர்ச்சி எனக் குறிப்பிடுவது முற்றிலும் பொருத்தப்பாடற்றது என்பதை உணர முடியும். அதாவது இது வெகு மக்களின் உண்மையான வளர்ச்சியைக் காட்டாது. இது ஒரு போலியான தன்மையைத்தான் வெளிப்படுத்தும்.

ஆனால், அண்மைக் காலங்களில் நாட்டின் மனித வள மேம்பாட்டை அடிப்படையாகக் கொண்டுதான் அந்நாட்டு மக்களின் மேம்பட்ட தன்மையைக் காண முடியும். இதிலிருந்து பொருளாதார வளர்ச்சி ஒவ்வொரு தனிக் குடிமகனின் வெளித்தோற்றமான புற வளர்ச்சியை வெளிப்படுத்தும். இது ஒவ்வொரு மனிதனையும் வேறுபடுத்திக் காட்டும். ஆனால் மனித வள மேம்பாடு தனி மனிதனின் அக வளர்ச்சியை மட்டுமின்றி சமூகத்தின் அக வளர்ச்சியையும் வெளிப்படுத்தும்.

மனிதவள மேம்பாட்டுக்கு அடிப்படை இடுபொருள்கள் கல்வியும், மருத்துவமும், மதிக்கத்தக்க வேலை வாய்ப்புகள், நல் மதிப்புடனான ஊதியமும் போன்றவையாகும். இதை மக்கள் நாயகக் கோட்பாட்டின் அடிப்படைக் கூறுகளாக வளர்ந்த அய்ரோப்பிய நாடுகள், கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற மக்கள் நாயக அரசுகள் மேற்சொன்னவற்றை மக்கள் நல அரசின் கடமையாகத் தம் மக்களுக்கு அளித்து வருகின்றன.

ஆனால் உலகின் மிகப் பெரிய மக்கள் நாயக அரசு எனச் சொல்லிக் கொள்ளும் இந்தியா மக்கள் நாயகப் பொதுக்கோட்பாடான மக்கள் நல அரசு கோட்பாட்டை காற்றில் விட்டுவிட்டதுடன் நம் நாட்டின் அரசமைப்புச் சட்ட அடிப்படை உரிமைகள் பகுதியில் இடம் பெறும் விதி 21A-இன்படி சட்டம் நடைமுறைக்கு வந்த 1950-லிருந்து பத்து ஆண்டுகளுக்குள் 14 அகவைக்கு உட்பட்ட அனைவருக்கும் இலவயக் கல்வி அளித்திட வேண்டுமென்ற கட்டளைக் கோட்பாட்டையும் கருத்தில் கொள்ளாது 70 ஆண்டுகள் கடந்த நிலையிலும் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராகச் செயல்பட்டுக் கல்வி அளிக்கும் பொறுப்பைக் கைகழுவி விட்டுக் கடைச்சரக்காக மாற்றித் தனியாரின் முற்றுரிமை பெற்ற வணிகத் தொழிலாக ஆக்கிக் கொண்டு வருகிறது-இந்த இந்திய ஒன்றிய அரசு.

இதனைச் செயல்படுத்துவதில் அரசின் மூன்று பெரும் அலகுகளான சட்டமன்றம் (Legislature), நிருவாகத் துறை (Executive), அறமன்றம் (Judiciary) கூட்டணியாகச் செயல்பட்டு அரசு இலவய நடுநிலைப் பள்ளிக் கல்வியைத் தன் மக்களுக்கு மறுத்துவிட்டன என்பது இந்நாட்டிற்கு அவமானம்; பெரும் தலைக்குனிவு.

இவ்வாறான இழிவுக்கு அடிப்படைக் காரணம், இங்குள்ள பார்ப்பனிய இந்துச் சமயக் கோட்பாடான வருணாசிரமம், சனாதனக் கொள்கைப்படி தம் சமய வெகுமக்களுக்கு, உழைக்கும் மக்களுக்குக் கல்வி அளிக்கப்படாது என்பதுடன் மறுக்கப்பட வேண்டும் என்பதுதான். அதை அடிபிசகாமல் பின்பற்றி வருவது ஒன்றிய அரசின் கயமைத்தனம்.

இதேபோன்று இந்திய ஒன்றிய அரசமைப்புச் சட்டம் மக்கள் நல்வாழ்வு பெறும் வகையில் அரசே அவர்களுக்கு மருத்துவம் அளிக்க வேண்டுமென்று வழிகாட்டு நெறி விதி வலியுறுத்துகின்றது. ஆனால் அரசமைப்புச் சட்ட அடிப்படை விதிப்படியான இலவயக் கல்வியையே மறுத்துவிட்ட இந்திய அரசு, இதை எப்படிக் கருத்தில் கொள்ளும்? மேலும் கல்வியைத் தனியாருக்குத் தாரை வார்த்து விட்டது போன்று, ஒன்றிய அரசு மருத்துவத்தையும் தன் பொறுப்பிற்குட்பட்டது என்றெண்ணாமல் தனியாரிடமே முற்றிலும் விட்டுவிட்டு விலகிவிட்டது.

இவ்வாறு மக்கள் மேம்பாட்டைப் புறக்கணித்த ஒன்றிய அரசு, நாடு பொருளாதார வளர்ச்சியடைந்து வருகின்றது எனப் பீற்றிக்கொண்டு வருகின்றது. ஆனால் இந்திய ஒன்றிய மக்களின் கீழான மேம்பாட்டு நிலையை

உலக வங்கி, அய்க்கிய நாடுகள் அவை மற்றும் பல உலகளாவிய பொது நிறுவனங்கள், தனியார் நிறு வனங்கள் விரிவான ஆய்வுகள் நிகழ்த்தி இந்திய ஒன்றிய அரசின் கீழ்மைத் தரத்தையும் இவர்கள் சொல்லும் பொருளாதார வளர்ச்சி யாருக்கு என்ற வினாவை எழுப்புவதற்கும் இவையெல்லாம் மக்கள் உண்மை யான வளர்ச்சியைக் காட்டுவதாக இல்லை என்றும், இது போலித்தனமான பொய்யானவை என கீழ்க் காணும் விவரங்கள் எண்பிப்பதாக உள்ளன.

| | நாடுகள் | இந்திய ஒன்றியத்தின் இடம் |
|---|---|---|
| மனிதவள மேம்பாட்டு குறியீடு | 163 | 136 |
| சராசரி வாழ்நாள் காலம் | 224 | 164 |
| மொத்த இறப்பில் காலரா வினால் பாதிக்கப்பட்டு 5 அகவைக்குள் உள்ள குழந்தைகள் இறப்பு : | | இந்தியா 40% சிரியாவும் 40% |
| உலகிலுள்ள தொழு நோயாளி களில் இந்தியாவில் உள்ளோர் | | 60% |
| பசிக்கொடுமைக் குறியீடு | 119 | 103 |
| வளர்ச்சி குன்றிய குழந்தைகள் அளவு | 101 | 90 |
| சுற்றுப்புறச் சூழல் மாசு அளவு | 180 | 177 |
| தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி | 176 | 134 |
| ஊடகவியலாளர்கள் மிகவும் வதைபடுத்தப்படுதல் | 14 | 14 (போர் நாடாக உள்ள ஆப்கானி-சுத்தான் 13ஆம் இடம்) |
| சட்டத்தின் ஆட்சி | 132 | 62 |
| மனித மூலதனக் குறியீடு | 115 | 105 (2017-லிருந்து 13 இடங்கள் சறுக்கியுள்ளது) |

இந்தப் பின்னணியில் உலக நாடுகளின் உண்மை யான உள்நாட்டு மதிப்புடன் இந்திய ஒன்றியத்தின் உற்பத்தி மதிப்பை ஒப்பீடு செய்தால் நாட்டின் இரங்கத்தக்க நிலை வெளிப்படும். இருப்பினும் உ.உ.ம. அளவு நம்மைப் போன்றும் அதிகமாகவும் உள்ள 10 நாடுகளின் விவரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது. அதனையும் விரிவாக விளக்கியுள்ளோம் (Interpretation).

உலக வங்கி கீழேயுள்ள இந்தியா உள்ளிட்ட நாடுகளின் பொருளாதார நிலை 2017 குறித்து வெளியிட்ட தகவல்கள்

'அ' - உள்நாட்டு மொத்த உற்பத்தி மதிப்பு (உ.உ.ம. - GDP - Gross Domestic Product) (டிரில்லியன் டாலரில்)

'ஆ' - தனிமனித ஆண்டு வருமானம் (டாலரில்)

'இ' - உ.உ.ம. ஆண்டு வளர்ச்சி - விழுக்காட்டில் (1 டாலர் ரூ.70/-)

| நாடு | அ | ஆ | இ |
|---|---|---|---|
| அமெரிக்கா | 19.39 | 59532 | 2.3 |
| சீனா | 12.24 | 8827 | 6.9 |
| சப்பான் | 4.87 | 38428 | 1.7 |
| செர்மனி | 3.68 | 44470 | 2.5 |
| இங்கிலாந்து | 2.62 | 39720 | 1.8 |
| இந்தியா | 2.60 (ரூ.182 இலக்கம் கோடி) | 1940 (ரூ.135800) | 6.7 |
| பிரான்சு | 2.58 | 38477 | 1.8 |
| பிரேசில் | 2.06 | 9821 | 1.0 |
| இத்தாலி | 1.93 | 31953 | 1.5 |
| கனடா | 1.65 | 45032 | 3.0 |

குறிப்பு : அடிப்படைப் புரிதலுக்காக.

ஆயிரம் ஆயிரம்
(1000 x 1000) -1 மில்லியன் (10, இலக்கம்)

ஆயிரம் மில்லியன்
(1000 x மில்லியன்) - 1 பில்லியன் (100 கோடி)

ஆயிரம் பில்லியன்
(1000 x பில்லியன்) - 1 டிரில்லியன் (ஒரு இலக்கம் கோடி)

இந்தியாவின் உள்நாட்டு மொத்த உற்பத்தி மதிப்பு பாரதிய சனதா ஆட்சிக்கு வந்த 2014-15-லிருந்து மிகைப்படுத்தப்பட்டுத்தான் கணக்கிடப்படுகின்றது என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது உ.உ.ம. ஆண்டுக்கு ஆண்டு கணக்கிடப்படும் போது, அந்தந்த ஆண்டுக்குக் குறைந்தது அய்ந்து முந்தைய உ.உ.ம.-ஐ அடிப்படையாகக் கொண்டு சென்ற ஆண்டுகளின் பணவீக்கத்தைக் கணக்கில் கொள்ளாமல்தான் நிலைத்த உ.உ.ம. (GDP at constant prices) அளவிடப்படும் அல்லது அது உண்மையான உ.உ.ம. (Real GDP) வளர்ச்சி என்று சொல்லப்படும். ஆனால் சென்ற நான் கைந்து ஆண்டுகளாக முன்பு அடிப்படை ஆண்டாகக் கொண்டு கணக்கிட்ட உ.உ.மதிப்பை அடிப்படையாகக் கொள்ளாமல் கணக்கிடப்படும் ஆண்டுக்கு ஓரிரு

ஆண்டுகளுக்கு முந்தைய உ.உ. மதிப்பை அதாவது பணவீக்கத்தை (inflation)யும் கணக்கில் கொண்டு அவ்வப்போதைய நிலையின் அடிப்படையில் (at concurrent prices) உ.உ.ம. (வீக்கத்துடன்) (Inflated GDP) வெளியிடப்பட்டு வருகின்றது.

இன்னும் இவர்கள் இதில் செய்யும் தில்லுமுல்லு முறைகேடானது. உ.உ. மதிப்பு கணக்கிடுவதற்கு முதன் மைத் துறை (Primary Sector), இரண்டாம் துறை (Secondary Sector), மூன்றாம் துறை (Tertiary Sector) ஆகிய மூன்றின் கீழ்வரும் துணைத் துறைகள் ஒவ் வொன்றிலும் உற்பத்திக்கு உரிய மதிப்பீடு அளவுகளை (imputed values) ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பை அதிகப்படுத்திக் காட்டும் வகையில் மிகவும் அதிகப்படுத்திக் கணக்கிட்டும் மிகவும் நம்பகத் தன்மையற்ற உ.உ.மதிப்பை வெளியிடுகின்றனர்.

எனவே உண்மையான உ.உ.ம. இப்போது - வெளியிடப்படும் அளவில் இல்லாமல் மிகவும் குறை வாகவே இருக்கும், மேலும் இதன் அடிப்படையில் கணக் கிடப்படும் வளர்ச்சி விழுக்காடும் உண்மை நிலையைக் காட்டாது. அதிகரிக்கப்பட்ட விழுக்காட்டைத்தான் காட்டும்.

முன்பக்கத்திலுள்ள அட்டவணையைச் சற்று கூர்ந்து கவனிக்கவும். இதில் இந்திய ஒன்றியத்தின் பொருளா தாரத்தை நான்கு வகைகளில் பிற நாடுகளின் பொரு ளாதாரங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். (அ) ஒத்த அளவு உ.உ.ம. கொண்ட நாடுகள். ஆனால் மக்கள் தொகை நம்மிலும் குறைவானவை. (ஆ) நம்மிலும் குறைவான மக்கள் தொகையும், சற்றுக் குறைவான உ.உ.ம. உடைய நாடுகள். (இ) குறைவான மக்கள் தொகை கொண்ட நாடு நம்மிலும் பல மடங்கு அதிகமான உ.ம.ம. உள்ளது. (ஈ) நம் போன்றே மக்கள் தொகை யுள்ள நாடும் நம்மைக் காட்டிலும் பல மடங்கு பெரிய உ.உ.ம. உடைய சீனாவை ஒப்பிடலாம்.

அ. பொதுவாக நம் நாட்டுப் பொருளியல் வல்லு நர்கள் எனப்படும் மன்மோகன் சிங், ப.சிதம்பரம், அருண்ஜெட்லி இவர்களுடன் மோடியும் அமித்சாவும் போன்றோர் இந்தியாவின் பொருளாதாரம் 2.5 டிரில்லி யன் டாலர் அளவையும் விஞ்சி வல்லரசு நாடுகளான பிரான்சையும் (இன்னும் ஓராண்டில் இங்கிலாந் தையும். பின்னுக்குத்தள்ளி வளர்ந்து முன்னேறி வந்துள்ளது என்பர் (ஆனால். இந்தப் பொருளாதார வளர்ச்சி யாருக்கானது என்பதை முன்பார்த்தோம்). உண்மைதான். ஆனால், இவர்களின் கூற்று எவ்வளவு பிதற்றல், பீற்றல் என்பதைக் கீழே விவரிக்கலாம்.

**இந்தியாவின் பொருளாதார அளவுக்கு ஒப்ப உள்ள நாடுகளான பிரான்சு, இங்கிலாந்து நாடு களின் மக்கள் தொகை நம்மிலும் கிட்டத்தட்ட 15 மடங்கு சிறியவை. இவ்வளவு குறைவான மக்கள் தொகை கொண்ட நாடுகளின் உ.ம.ம. இந்த அளவுக்கு இருப்பதற்குக் காரணம், அந்நாடு களின் மக்கள் அனைவரும் நாட்டின் பொருள் உற்பத்தியில் பரவலாக ஈடுபடுத்தப்படுகிறார்கள் என்பதுடன் மதிப்புடன் கூடிய உற்பத்தியைச் செய்பவர்களாகவும் உள்ளனர். ஆனால் இந்தியா வின் உற்பத்திச் சக்தியான பெரும் திரளான மக்கள் பெரும் பகுதி வேலை வாய்ப்பு அளிக்கப்படாத வர்களாகவும், வேலை வாய்ப்பு உள்ளவர் களும் மதிப்புடன் கூடிய பொருள் உற்பத்தியில் ஈடுபடுத் தப்படுவதில்லை. எனவேதான் அந்நாடுகளின் தனிமனித சராசரி ஆண்டு வருமானம் நம்நாட்டைக் காட்டிலும் 20 மடங்கு அதிகமாக உள்ளதை முன்பக்கத்திலுள்ள அட்டவணையிலிருந்து காணலாம்.**

ஆ. இத்தாலி, கனடா நாடுகளின் பொருளாதாரம் நம்மிலும் சற்றுக் குறைவான போதிலும் அந்நாடுகளின் தனிமனித வருமானமும், நம்மைப் போன்று 20 மடங்கு அளவில் அதிகம் என்பதைக் காணமுடிகிறது. அந்நாடுகளில் உள்ள நம்மைக் காட்டிலும் பல மடங்குகள் குறைந்த அளவுள்ள மக்கள் அனைவரும் பெருமளவு உற்பத்தி சக்திகளாக உயர்த்தி உற்பத்தியையும், அதன் மதிப்பையும் மேலே விவரித்த தன்மையில் பெருமளவுக்குப் பெருக்கி நம் நாட்டு உ.ம.ம. அளவுக்கு உயர்த்தியுள்ளனர். அதனால்தான் அந்நாடுகளின் தனிமனித உற்பத்தி மதிப்பும் நம்மைவிட 30 மடங்குக்கு மேல் உயர்வாக உள்ளது.

இ. நம் நாட்டின் மக்கள் தொகையைக் காட்டிலும் 10 மடங்குக்கு மேல் குறைவாக உள்ள சப்பான், இத்தாலி நாடுகளின் உ.ம.ம. முறையே 2, 1½ மடங்கு அளவுக்குப் பெரியதாக உள்ளது. குறைவான மக்கள் தொகை யுடன் தம் நாடுகளின் பொருள் உற்பத்தியைப் பெரு மளவுக்குப் பெருக்கிடும் வகையில் தம் மக்களுக்கு உற்பத்தித் திறன் மிக்க வேலை வாய்ப்புக்களையும் அவ்வழி உற்பத்தியாகும் பொருள்களுக்கு உயர் மதிப்பும் தந்து அவர்களின் தனிமனித வருமானத்தை இந்தியாவோடு ஒப்பிடும் போது முறையே 20, 23 மடங்கு அளவுக்கு உயர்த்தியுள்ளதைக் காணலாம். இதேபோன்று அமெரிக்கா, நம்மைக் காட்டிலும் 4 மடங்குக்கு மேல் குறைவான மக்கள் தொகையுடன் உலகிலேயே மிகப் பெரிய பொருளாதாரமாக 20 டிரில்லியன் டாலர் உ.உ.ம. என்ற அளவில் நம்மைப் போன்று ஏறத்தாழ 7½ மடங்கு பெரியதாக உள்ளது. அந்நாட்டின் தனிமனித சராசரி ஆண்டு வருமானம் நம்மைப் போன்று 30 மடங்குக்கும் மேலாக உள்ளது. இதேபோன்று பல நாடுகள் குறிப்பாக அய்ரோப்பிய நாடுகளின் மக்கள் தொகை நம்மைக் காட்டிலும் மிகக்

குறைவாக இருப்பினும் அவர்களின் உ.உ. மதிப்பு நம் நாட்டைக் காட்டிலும் சற்றே குறைவாகக் காணப்பட் டாலும் அந்நாடுகளின் தனிமனித ஆண்டு வருமானம் நம்மைப் போன்று 10 மடங்குக்கும் மேல் பெரியதாக உள்ளது.

மேற்சொன்ன நாடுகளெல்லாம் பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளிலேயே தொழில் வளர்ச்சி யடைந்த நாடுகளாகவே பல பத்தாண்டுகள் நிலைத்த வளர்ச்சி பெற்று வளர்ந்த நாடுகளாகவே இருந்து வருகின்றன. எனவே அந்நாடுகளின் தனிமனித சராசரி உ.உ. மதிப்பும், தனிமனித ஆண்டு வருமானமும் ஒப்பீட்டளவில் இந்தியாவைக் காட்டிலும் பல மடங்குகள் அதிகமாகவே இருந்து வருகின்றன.

ஈ) ஆனால் நம் நாட்டை ஒப்ப 130 கோடிக்கும் மேலாக பெரும் மக்கள் தொகை கொண்ட சீனாவை நேரடி ஒப்பீட்டுக்கு எடுத்துக் கொள்வோம். இந்தியா, இங்கிலாந்தின் குடியேற்ற நாடாக இருந்து 1947இல் விடுதலை பெற்ற தன்னாட்சி கொண்ட நாடாக ஆன அதே காலக்கட்டத்தில், சீனா 1949இல் பொதுவுடைமை நாடானது. அக்காலக்கட்டத்தில் சீனப் பொருளாதாரம் இந்தியாவைக் காட்டிலும் சற்றுக் குறைவான அளவில் தான் இருந்தது. ஆனால் அந்நாடு தன் பெருந்திரள் மக்களையும் நாட்டு உற்பத்தியில் பங்களிப்பவர்களாக ஈடுபடுத்தி அந்நாட்டின் பொருளாதாரம் சீரான, நிலைத்த வளர்ச்சி பெற்ற நாடாகியுள்ளது. இப்போது அதன் உ.உ.ம. 12.24 டிரில்லியன் என்ற அளவில் உள்ளது. இதே காலக்கட்டத்தில் இந்தியா 2.60 டிரில்லியன் உ.உ.மதிப்பு கொண்ட நாடாகத்தான் இருந்து வரு கின்றது. அதாவது இந்தியாவைப் போன்று சீனா ஏறத்தாழ அய்ந்து மடங்கு பெரிய பொருளாதாரமாக வளர்ந்துள்ளது. அதே தன்மையில் சீனாவின் தனிமனித சராசரி ஆண்டு வருமானம் இந்தியாவைக் காட்டிலும் 4½ மடங்கு அதிகம்.

இந்திய ஒன்றியம் புதிய பொருளாதாரக் கொள்கையை ஏறத்தாழ 30 ஆண்டுகள் பின்பற்றியதை அடுத்து பொரு ளாதார வளர்ச்சி 7, 8, 9 விழுக்காடு என்று பெருகி 2007-இல் உலகின் 12-ஆம் டிரில்லியன் நாடாகப் பறைசாற்றிக் கொண்டது. ஆனால் 80-85 விழுக்காடு பெருந்திரள் மக்களின் வாழ்நிலை தாழ்வாகவே வைக் கப்பட்டுள்ளது. அதே நேரம் 10 விழுக்காடு மக்கள் வளர்ச்சி பெருகி ஏழை மேலும் ஏழையாகவும், வசதி படைத்தோர் பெரும் வளர்ச்சி பெற்று பெரும் பணக் காரர்களாகி இவர்களுக்கிடையே மலைக்கும் மடுவுக்கும் இடையிலான பெரும் இடைவெளி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்தன்மையில் தனியொருவரின் சராசரி வருமானம் 100 வகைகளுக்கு மேற்பட்ட படிநிலை ஊதியம் உடை யோர் அமைப்புச்சார் அரசு மற்றும் தனியார் துறைப் பணிகளில் உள்ளனர். வேளாண், நெசவுத் தொழில் போன்று அமைப்பு சாரா தனியார் துறையில் பணி புரிவோர் தற்சார்புச் சிறு வணிகம், தொழில் மேற் கொண்டுள்ளோர் என 80-90 விழுக்காடு மக்கள் உள்ளோர். இதில் ஒருவேளை மட்டும் உணவு கிடைக்கும் கொடிய வறுமை நிலையில் துவளும் 15 கோடி மக்களின் இழி வருமானம், இரவு உணவின்றி உறங்கச் செல்லும் 25 கோடி மக்களின் மிகக் குறைவான வருமானம் (காட்டாக மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் நாள் கூலி ரூ.200 மட்டுமே பெற்றுப் பணிபுரியும் 20-25 கோடி மக்களுள் சிலர்) மேலும் நடுத்தரமாக உள்ள 60 விழுக்காடு மக்களின் குறைவான வருமானம், வெறும் 7.8 விழுக்காடு மக்களின் உயர் வருமானம் எஞ்சியுள்ள 3 விழுக்காட்டுப் பேரின் கொழுத்த வருமானம் (ஒரு விழுக்காடு மக்கள் நாட்டின் 57 விழுக்காட்டு சொத்துக்களைக் குவித்துள்ளோர்) என ஒரே நிரையில் மொத்தமாகக் கணக்கிடப்பட்டு தனிமனித வருமானம் சற்றொப்ப ஆண்டுக்கு ரூ.1,36,000 எனவும் நாளுக்கு ரூ.370 என்றும் காட்டப்பட்டுள்ளது. அதாவது இந்தக் கணக்குப்படி அற்றாடங்காய்ச்சிகளாக, அரை வயிற்றுச் சோற்றுக்கே இல்லாதவர்களாக உள்ள பெரும் தொகுப்பு மக்களின் நாள் கூலி ரூ.370 என்று ஏற்றிக் காட்டுவது எவ்வளவு பெரிய கயமைத் தனம்; எவ்வளவு பெரிய மோசடி, பொய்மை. இவற் றையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு இவர்கள் உற்பத்திக்கு இழி மதிப்பளித்து உயர்மதிப்புடைய பொருள் களுடன் ஒருசேரச் சேர்த்துக் கொண்டு உலகின் ஆறாம், ஐந்தாம் பொருளாதாரம் இந்தியா எனப் பீற்றிக் கொள்வது மிகப்பெரிய தலைக்குனிவு.

இக்கட்டுரையின் தொடக்கத்தில் இந்திய ஒன்றியத்தில் உள்ள உழைக்கும் மக்களாக உள்ள பெரும்திரளான 85-90 விழுக்காட்டு மக்களின் இழிநிலையைத் தான் உலகளவில் உள்ள நாடுகளுள் மக்கள் மேம்பாட்டைக் குறிப்பது நாட்டின் வளர்ச்சி எனச் சொல்லப்படும் பொய்மையும் கயமையும் அல்ல; கல்வி, மருத்துவம் போன்ற பல்வகைத் தளங்களில் இந்தியாவின் தரம் தாழ்ந்த நிலையை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. அதாவது உண்மையில் வளர்ச்சியும், மேம்பாடும் ஒருங்கே பெற்று வளமுடன் வாழ்பவர்களாக நாட்டில் 10 விழுக்காடு மக்கள் தான் உள்ளனர். அதாவது இந்தப் பத்து விழுக்காட்டு மக்களின் வளமைக்காக 90 விழுக்காட்டு உழைக்கும் மக்கள் எல்லா வழிகளிலும் வகைகளிலும் சுரண்டப்படுபவர்களாக ஆனால் அதே நேரத்தில் உணர்வற்ற, தன்மானம், தன்மதிப்பு அற்ற வர்களாக வைக்கப்பட்டுள்ளனர் என்பதுதான் நாட்டின் உண்மையான அவல நிலை. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் நாட்டின் ஒன்றிய அரசும், மாநில அரசுகளும்

மக்கள் நாயகத்தின் கோட்பாட்டுத் தத்துவமான 'மக்கள் நல அரசு' என்ற உணர்வே அற்ற நிலையில் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இதில் கொடுமை என்னவென்றால், நாட்டில் அரசின் மூன்று பெரும் அலகுகளான சட்டமன்றம், நிருவாகம் மற்றும் அறமன்றம் (Legislature, Executive and Judiciary) மூன்றின் உயர்நிலை வகிக்கும் நாட்டின் முதன்மை அமைச்சர், பிற ஒன்றிய அமைச்சர்கள், மன்றத் தலைவர்கள், ஒன்றிய அரசு அலுவலர்கள், உச்ச, உயர்நீதி, அறமன்ற நடுவர்கள் உலகெங்கிலும் குறிப்பாக அய்ரோப்பிய நாடுகள், அமெரிக்கா, கனடா, ஆசுத்திரேலியா போன்ற நாடுகளுக்குப் பலப்பல ஆண்டு களாக, பல தடவைகள் சுற்றுப்பயணம் மேற்கொள் கின்றனர். அப்போதெல்லாம் அந்நாடுகளில் நிலவும் மக்கள் மேம்பாட்டு நிலை, தன்மானம், தன்மதிப்பு கொண்ட தன்மை, தரமான கல்வியும் மருத்துவமும் பாகுபாடின்றி ஒரே தன்மையில், ஒரே தரத்தின் ஒருங்கே அனைவருக்கும் வழங்கப்படுதல் இவற்றை யெல்லாம் கண்ணுறாமல் கவனத்தில் கொள்ளாமல் மரக்கட்டைகள் போன்று மக்கள் பற்று அற்றவர்களாகத் தான் உலாசென்று வருகின்றார்களா என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஏனெனில், இவர்கள் மக்கள் மேம்பாட்டுக்கான கல்வி, மருத்துவத்தை முழுவதுமாக வணிக விற்பனைப் பொருள்களாக்கத் திட்டமிட்டுத் தீவிரமாக மாற்றிக் கொண்டு வருகின்றனர். மேலும் மக்களை மேம்படுத்த முற்படாத அரசுகள் மாடுகளைக் காப்போம் என்ற பெயரில் நூற்றுக்கணக்கான மக்களைப் பலிவாங்கு கின்ற ஈனத்தனமான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படுவதை ஊக்குவித்து வருகின்றன. இராமன் கோயில் கட்டுவோம் என ஓலமிடுகின்றனர்.

இவற்றிற்கெல்லாம் காரணம் பார்ப்பனியத்தின் கொடூரப் பிடியில் அரசுகளும், பார்ப்பனர்கள், உயர் சாதியினர் மட்டுமின்றி அனைத்து மக்களும் சிக்குண்டு இருப்பதுடன், அதற்கு மண்டியிட்டு வருணாசிரம சனா தனத்தை கடைப்பிடிப்பவர்களாக உள்ளனர். அதனால் தான் உரிமை உணர்வு அற்றவர்களாக, மனித மேம்பாட்டுச் சிந்தனை இல்லாதவர்களாக சமூகமே உள்ளது. பார்ப்பனியம் ஒழிந்தால்தான் வெகுமக்கள் நலம் பேணும் எண்ணம் துளிர்க்கும். இது ஏதோ மேலோட்டமாகப் பேசிவிட்டு நின்றுவிடாமல் தீர்வை நோக்கி நகர்ந்திடவும், செயல் திட்டங்கள் வகுத்து நடை முறைப்படுத்தப்பட வேண்டும். அவை :

* முதலில் வெறும் 10 விழுக்காடு அளவில் மட்டுமே யுள்ள அமைப்புச்சார் பணிகளைப் படிப்படியாக உயர்த்தி 90 விழுக்காடாக உள்ள அமைப்புச் சாராப் பணியமைப்பைப் பெருமளவில் அமைப்புச்சார் பணி களாகக் கட்டமைத்து பெருந்திரளான மக்களுக்குத் தன்மானம், தன்மதிப்பை உணர்பவர்களாகவும், பெருக்குமளவுக்கான பணிகளையும் மதிப்பும் பெருமைக்கு முரிய முறையான நிலைத்த ஊதியமும் அளிக்கப்பட வேண்டும்.

* குறிப்பாக அரசுப் பணிகளிலும் இந்துச் சமூகத்தின் இழிவான பல படிநிலைகள் உள்ளன. இவற்றை அடியோடு ஒழித்திடும் வகையில் ஏவல் பணி (Meanial Service), கடைநிலைப் பணி என்பவையெல்லாம் ஒழிக் கப்பட்டு, 60, 70 வகையாக உள்ள சம்பள வேறு பாடுகள், படிப்படியாக 20-30 வகைகள் எனவும் 10-20 எனவும் 5-10 வகைகளாகக் குறைக்கப்பட்டு, கடை நிலை ஊதியத்திற்கும் உயர்நிலை ஊதியத்திற்குமுள்ள 100 மடங்கு வேறுபாடு அடியோடு ஒழிக்கப்பட வேண்டும்.

இந்நிலையை எட்ட, ஏவல் பணி, எடுப்புப் பணி என்பவற்றை ஒழித்து, அனைவரும் மதிப்பு மிக்க மேலும் சில பணிகளை மேற்கொள்ளுமாறு திட்டமிட்டு இழி சம்பளத்தை ஒழித்து அனைவருக்கும் அரச மைப்புச் சட்ட விதி 21 வழங்கிடும் உரிமையைப் பெற்றிடும் வகையில் தன்மதிப்பும், தன்மானமும், பெருமைக்குரிய வாழ்க்கையை உறுதி செய்திடும் வகையில் தரமான ஊதியம் அளிக்கப்பட வேண்டும்.

* முதல் கட்டமாக அரசமைப்புச் சட்ட விதி 21-A படி 14 அகவைக்குட்பட்ட அனைவருக்கும் இலவயக் கல்வி அளிக்கப்பட வேண்டுமென்ற கட்டளையை இதுகாறும் காற்றில் பறக்க விட்டுவிட்டு வந்துள்ள ஒன்றிய அரசு வெட்கப்பட வேண்டும். குறிப்பாக அறமன்றங்கள் இந்த இழிநிலை கண்டு வெட்கித் தலைகுனிய வேண்டும். ஆனால் மிகுந்த வியப்புக்குரியது என்னவென்றால், விதி 44 சொல்லும் நாட்டு முழுமைக்கான ஒரு பொதுக் குடிமையியல் வகுத்திட அரசு வழிகாண வேண்டும் என வழிகாட்டு நெறி விதியுள்ளதை உச்ச அறமன்ற நடுவர்கள் பல நேரங்களில் சுட்டி, அரசு இதுகுறித்து ஏதும் நடவடிக்கை எடுத்துள்ளதா? ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என தன்னெழுச்சியான வினாக்களைத் தொடுத்து வருகின்றனர்.

ஆனால் வழிகாட்டு நெறிகளைச் செயல்படுத்துவது குறித்து அறமன்றங்கள் வழி தீர்வு தேடிட இயலாது என்பதுதான் சட்டப்படியான நிலை. ஆனால் இதுகுறித்து தன்னெழுச்சியான வினா தொடுக்கும் அறமன்றம், முன்னைய விதி 45-இன்படி அதாவது தற்போதைய விதி 21-A-இன்படி அரசுகள் ஏன் 14 அகவைக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவயக் கல்வி கொடுக்கவில்லை என்ற வினாவையோ, அரசு இதற்கு முற்றிலும் முரணாகக் கல்வி வழங்குவதிலிருந்து முற்றிலும் விலகிக் கொண்டு விற்பனைக்குரிய வணிகப் பொருளாகத் தனியாரிடம்

தாரைவார்த்து வருவதையோ கேள்விக்குள்ளாக்கிய தாக வரலாறு இல்லை.

இந்த அவலங்கள் தொடர்வதை அரசுகள் கை விட்டுவிட்டு, உண்மையிலேயே மக்கள் பற்றுள்ள அரசு எனில் படிப்படியாக அரசு நடுநிலைப் பள்ளிக் கல்வியை 14 அகவைக்குட்பட்டோர் அனைவருக்கும் வழங்க உடன் நடவடிக்கை மேற்கொண்டு, ஒரு காலவரையறைக்குள் முழுப் பொறுப்பையும் அரசு எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தக் கட்டத்தில் இந்த விதியைப் பொறுத்தமட்டில் அரசமைப்புச் சட்டமோசடி நடந்துவிட்டது எப்படி எனப் பார்ப்போம். அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின்வழி விதி 21-A சேர்க்கப்படும் போது விதி 45-ஐ சீரழித்து,சிதைத்து (It was a rape on the Constitution) மாற்றியமைக்கப்பட்டுவிட்டது.

முன்னைய விதி 45-இன்படி 14 அகவைக்குள் ளான அனைவருக்கும் அரசமைப்புச் சட்டம் நடை முறைக்கு வந்து 10 ஆண்டுகளுக்குள் இலவயக் கல்வி வழங்கப்பட வேண்டுமென காலவரை விதிக்கப்பட்டி ருந்தது. கல்வியின் அடிப்படையையும் மேன்மையை யும் உணர்ந்தவர்களாக அம்பேத்கர் தலைமையிலான அரசமைப்புச் சட்ட வரைவுக்குழுவினர், காலக்கெடுவுடன் இந்த விதியை வகுத்தெடுத்திருந்தனர். ஆனால் வழி காட்டு நெறிப் பகுதியில் இருக்கும் 45-ஆம் விதியை அடிப்படை உரிமைகள் பகுதிக்குள் கொண்டு சேர்த்து அதற்கு வலுச்சேர்க்க வேண்டுமென்ற பெயரில் அரச மைப்புச் சட்டத் திருத்தத்தின் படி விதி 21-A சேர்த்து ஓசையின்றிக் காலவரையறையைக் காயடித்து நீக்கி விட்டது. இது அரசமைப்புச் சட்டத்தின் மீதான மிகப் பெரும் மோசடி. இதற்கு நாடு வெட்கித் தலைகுனிய வேண்டும். இந்தத் தலைகுனிவைக் களைந்திடும் வகையில் இந்தக் காலவரையறை முன்பிருந்தபடியே அடிக்குறிப்பிலாவது அரசமைப்புச் சட்டத்தில் சேர்த்திடல் வேண்டும்.

தரமான கல்வி வழங்கப்படாததின் விளைவு சமூகம், அரசியல் என எல்லாத் தளங்களிலும் மக்களுக் கான மேம்பாட்டு நடவடிக்கை காலம் தொட்டு இன்றும் நாளையும் மக்களை அடிமை நிலையில் தன் மதிப் பற்றவர்களாக வைக்கப்பட்டிருப்பது பற்றிய உணர்வே சுரணையே இல்லாமல் நாடே மௌனம் சாதித்து வருகின்றது.

* விதி 21 வலியுறுத்துவது போல், தனியொரு வரின் வாழ்வை மறுக்கக் கூடாது என்பதில் வெறும் பிழைப்பு மட்டும் நடத்தும் மனிதனாக வைத்திடுவதாக மட்டும் கொள்ளக்கூடாது. நல்ல உடல் நலத்துடன் தரமான வாழ்க்கையைத்தான் இவ்விதி வலியுறுத்து கிறது எனப் பல நிகழ்வுகளின் உயர், உச்ச அற மன்றங்கள் வலிந்து சொல்லியுள்ளன. ஆனால் கல்வி யைப் போன்றே மக்கள் மருத்துவமும் வழங்கும் பொறுப்பைக் கைகழுவி விட்டு விலைப் பொருளாக மாற்றி, தனியார் வணிகமாக்கி ஏழை, எளியவரை அதற்காகப் பெரும் செலவைச் செய்திட வைத்து அவர்கள் வாழ்வைச் சூறையாடிவிட்டது. இனியும் இந்தப் பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல் ஒரு மக்கள் நாயக அரசு எனச் சொல்லிக் கொள்ளும் வகையில் அரசு அனைத்து மக்களுக்கும் தரமான மருத்துவம் அளித்திட வேண்டும்.

கல்வியும் மருத்துவமும் மக்களுக்குத் தரமான முறையில் அரசு வழங்கிட வேண்டுமென்று முன்பு சொன்னோம். இவை இரண்டும் மனித மேம்பாட்டுக்கு அடிப்படைத் தேவை. இதுவன்றி இன்னும் முதன்மை யானது தன்மதிப்புடன் கூடிய வேலை வாய்ப்புடன் தரமான வாழ்க்கையை உறுதி செய்திடும் வகையில் தன்மானம் அளிக்கத்தக்க ஊதியத்தையும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அளித்திட அரசு முதன்மைக் கடமையாகக் கொள்ள வேண்டும். ஆனால் இருப்பு நிலை எவ்வளவு இழிவாக வைக்கப்பட்டு மக்களின் சராசரி வருமானமும், நாட்டின் பொருளாதார வளர்ச்சி யைக் காட்டும் உள்நாட்டு ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பும் கணக்கிடப்பட்டுள்ளன என்பதைக் கட்டுரையின் தொடக்கத்தில் பார்த்தோம். இத்தன்மை அடியோடு மாற்றப்பட்டு நாட்டு மக்களின் மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டளவு மேலை நாடுகளை ஒப்ப உண்மையாக உயர்வடைய (இதைத்தான் பெரியார் சுருக்கமாக நம் மக்கள் தன்மானமுடைய மக்களாக மேம்பாடடைய வேண்டும் எனச் சொன்னார்) அமைப்புசாரா பணிகளை, குறிப்பாக வேளாண், நெசவு போன்றவற்றில் சில தொகுப்புகளாக வகுத்தெடுத்து மூன்று, நான்கு வகைப் பட்ட ஊதியங்களை மட்டும் வரையறுத்திட வேண்டும். ஒவ்வொருவருக்கும் நாள் ஊதியம் ரூ.500/-க்குக் குறையாமலும், திங்கள் ஊதியம் ரூ.15,000/-க்குக் குறையாமலும் இவர்களின் தரமான வாழ்க்கையை உறுதிபடுத்தும் வகையில் இருக்க வேண்டும். இவர்களின் விளைபொருள்கள், உற்பத்திப் பொருள்களின் விலை மேற்சொன்ன ஊதியம் அளித்திடும் வகையில் நிர்ண யித்து பொது மக்களுக்கு நியாயமான விலையில் கிடைத்திடச் செய்ய வேண்டும், இதில் இழப்பு ஏற்படு மெனில் அரசு முன்வந்து ஈடுகட்ட வேண்டும், இவ்வா றான நம்பிக்கையூட்டும் ஊதிய முறைகள் வகுக்கப் பட்டு செயல்படுத்தப்படுமெனில் பாட்டாளி மக்களின் உற்பத்தித் திறன் பல மடங்கு பெருகி உண்மையில் உற்பத்தியின் அளவும் பெருகும்.

மேலும் மதிப்பளிக்கும் ஊதிய முறை மக்களுக்கு ஊக்கமூட்டுவதாக இருப்பதால் பெருமளவு மக்கள் பெரும்

பொருள் உற்பத்தியில் ஈடுபாட்டுடன் செயல்படுவர். இது நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பை உயர்த் தியும், மக்கள் மேம்பாட்டையும் ஒருசேர உறுதி செய்யும்.

வேலை வாய்ப்புகளைப் பெருக்கிட தற்போது ஏதுவான துறை வேளாண்மைத் துறையும் நெசவுத் துறையும்தான். (அளவோடு தொழில்நுட்பங்கள் கடைப் பிடிக்கப்பட்டால்) பொருளியல் கோட்பாடு இரண்டாம் நிலைப் பொருளாதாரப் பிரிவாக (Secondary Sector) உள்ள தொழில் துறையில் நிகழ் காலங்களில் பாய்ச்சல் வேகத்தில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் கையாளப்படுவதால் முன்பு போன்று பெருமளவுக்கு வேலை வாய்ப்புகள் உருவாகுவது போன்ற நிலை யின்றி மிகவும் சிறிய அளவு வேலை வாய்ப்புத்தான் உருவாகுகின்றது. காட்டாக ஆயிரம் கோடிகளில் முதலீடு செய்யும் தொழில்களில் முன்பு 1000 பேர்களுக்கும் மேல் வேலை வாய்ப்பு என்பது தற்போது வெறும் 100, 200 என்ற அளவில் குறைந்துவிட்டது. எனவே வேளாண்மைத் துறையின் வளர்ச்சி உ.உ.மதிப்பில் எட்டு விழுக்காடு என்ற அளவில் குறைந்துவிட்ட நிலையில் அதைப் படிப்படியாக உயர்த்தி இரு அல்லது மூன்று மடங்குப் பெருக்கி மேலும் பல கோடி மக்களுக் குத் தரமான ஊதியத்துடன் கூடிய, உயர் மதிப்பு வாய்ந்த உற்பத்தியையும் பெருக்கி நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பை உண்மையாக உயர்த்திடலாம்.

வேளாண்மைத் துறை விரிவடையவும், பெருகிடவும், வேளாண் உற்பத்தி பல மடங்கு உயர்ந்திடவும், வேளாண் சார் 70, 80 கோடி பேர்களுக்கு இனியேனும் மதிப் பான வாழ்வை உறுதி செய்யும் வகையில் அரசே இவர்களின் ஒட்டுமொத்த உற்பத்தியையும் மதிப்புடன் கூடிய நல்ல விலையுடன் கொள்முதல் செய்திட வேண்டும். இதற்கான வழிவகைகளை வகுத்திட வேளாண் மக்கள் பற்றாளர்களாக உள்ள பொருளாதார வல்லுநர்கள், வேளாண் அறிவியலாளர்கள், வேளாண் மக்கள், தொழிலாளிகள், பொது பொருளியலாளர்கள் எனப் பல துறை சான்றோர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து அவர்களின் பரிந்துரைகளை ஒரு காலவரையறைக் குள் பெற்றுச் செயல்படுத்தப்பட வேண்டும்.

இந்நாட்டின் 135 கோடி மக்களில் மிகப் பெரும் பாலோர் வேளாண்மை சார்ந்துள்ள நிலையில் மக்கள் பற்றாளர்களாக விளங்கி வரும் பொதுவுடைமை வாதிகள், அமைப்புகள், பொதுவுடைமைக் கட்சிகள், ஒத்த கருத்துடைய பிற அமைப்புகள், கட்சிகள் ஒருசேர ஒருங்கிணைத்து களம் கண்டு அரசுக்குக் கடுமை யான நெருக்கடி தந்து வேளாண்மை வளர்ச்சிக்கும், வேளாண் மக்கள் மேம்பாட்டுக்கும் வழிகோலும் ஒரு குழுவை விரைவில் அமைத்திட வழிகாண வேண்டும். இதே தன்மையில் நெசவுத் தொழில் துறையிலும் நடவடிக்கை எடுத்திட மேற்சொன்ன மக்கள் பற்றுக் கொண்ட அமைப்புகள், கட்சிகள் இதற்கான குழு அமைத்திட உற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இக்குழுக்கள் விரைவில் செயல்பட்டு மேலான பரிந் துரைகளைத் தந்து அவை செயல்வடிவம் பெறும் வரையில் ஆவனவெல்லாம் செய்திடல் வேண்டும்.

நெடுங்காலமாகச் சமூகத்தை எல்லா நிலையிலும் பிணித்துள்ள பார்ப்பனியம் கடுமையான விமர்சனத் திற்கு உள்ளாக்கப்பட்டு வருவது வெளிப்படையாகத் தெரிகின்றது. ஆனால் வெறும் விமர்சனம் விடிவுக்கு இட்டுச் செல்லாது. அதனால் உண்மையில் அது ஒழிந்த நிலையில்தான் இந்திய நாட்டு மக்களின் மேம்பாடு அடங்கியுள்ளது என்பதுதான் தெளிவு. ஆனால் மாறாக, நாடே பார்ப்பனியத்தின் பிடிக்குள் விழுந்துவிட்டதோ எனத் தோன்றுகிறது. இந்நிலை மேலும் சீரழிவுக்கு உள்ளாகாது காக்கப்பட வேண்டிய இக்கட்டான காலக் கட்டத்தில் உள்ளோம். இதனை உணர்ந்து மக்கள் பற்றாளர்கள் மேற்சொன்ன வழிகளின்றி மேலும் பல வழிகளில் மக்கள் மேம்பாட்டை முன்னிறுத்தி சமூக, பொருளாதார, அரசியல், குறிப்பாகக் கல்வி, மருத்துவம் வேலை வாய்ப்புத் தளங்களில் தீர்வை நோக்கி நகர்ந்து செயல்பட வேண்டும்; தொடர் போராட்டம் வேண்டும். ●

## திருச்சி து.மா. பெரியசாமியின் மகன் ஆசிரியர் தமிழ்மணி மறைந்தார்!

திருச்சி சிந்தனையாளர் கழக நிறுவனர்களுள் ஒருவரும், திருச்சி மாவட்ட தி.க. செயலாளராக 1967 முதல் செயல்பட்டவருமான மறைந்த து.மா. பெரியசாமி அவர்களின் மூத்த மகன் - ஓய்வுபெற்ற ஆசிரியர் பெ.தமிழ்மணி அவர்கள் தம் 68ஆம் அகவையில் 6.2.2019 புதன் மதியம் 1 மணிக்கு இயற்கை எய்தினார்.

அவர் து.மா. பெரியசாமியின் மூத்த மனைவி அன்புமணி அவர்களின் வழித்தோன்றல் ஆவார். தமிழ்மணி அவர்களின் உடல் 7.2.2019 திருச்சி ஓயாமரி இடுகாட்டில் எரியூட்டப்பட்டது. து.மா. பெரிய சாமி அவர்களின் இளைய மனைவி பத்மா அவர்களுக் கும், மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கும் மா.பெ.பொ.க. சார்பில் இரங்கலை உரித்தாக்குகிறோம்.

மா.பெ.பொ.க. சார்பில் இறுதிவரை மாவட்டச் செயலாளர் கலியபெருமாளும் மற்ற தோழர்களும் உடன் இருந்து உதவினர்.

**வாழ்க பெ.தமிழ்மணி புகழ்!**

**- வே. ஆனைமுத்து**

# பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை

**- க. முகிலன்**

**பொ**ள்ளாச்சியில் நிகழ்ந்துள்ள பாலியல் வன் கொடுமை பற்றிய செய்திகள் குருதியை உறையச் செய்வனவாக உள்ளன. "உன்னை நம்பித்தானே வந்தேன்... இப்படி பண்ணிட்டியே", "பெல்டால் அடிக்கா தீங்கண்ணா... வலிக்குது... நானே கழட்டிடுறேன்" என்று வீடியோ பதிவுகளில் ஒலித்த இளம் பெண்களின் ஓலம் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. குரல் ஒலி வழியிலான அக்கொடிய காட்சியை நேரில் பார்த்தது போல் நெஞ்சம் நடுங்குகிறது.

தனிநபர் நிலையில் பெண்கள் மீது நிகழ்த்தும் பாலியல் துன்புறுத்தல்கள், வல்லுறவுகள், கொலைகள் பற்றிய செய்திகள் நாள்தோறும் ஏடுகளில் வெளியா கின்றன. மூன்று அகவை, ஆறு அகவை, பத்து அகவை என்று பெண் குழந்தைகளும் சிறுமிகளும் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகின்றனர். சிறுமியர் மீதான பாலியல் தடுப்புச் சட்டமும் இயற்றப்பட்டுள்ளது.

பெண்கள் மீது ஆண்கள் கூட்டாகப் பாலியல் வன் கொடுமையை நிகழ்த்துவதும் நடக்கிறது. 2012 திசம்பர் 12 இரவில் தில்லியில் ஓடும் பேருந்தில் மருத்துவ மாணவி கூட்டு வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்ட கொடுமை இந்தியா முழுவதும் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தியது. இதுபோன்ற பாலியல் குற்றங்களைத் தடுப்பதற்காக நீதிபதி வர்மா தலைமையில் ஒரு குழு அமைக்கப் பட்டது. 2013இல் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டன. ஆயினும் சிறுமிகள் - பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகள் தொடர்கின்றன. ஏனெனில் இது சட்டம் - தண்டனை என்கிற வட்டத்திற்குள் மட்டும் அடங்கிவிடும் சிக்கல் அல்ல. சமூகத்தில் பெண்கள் மீது - பெண்ணின் உடல் குறித்து ஆண்கள் கொண்டுள்ள ஆதிக்க - அனுபவிப்பு உரிமை சார்ந்த மனப்போக்கே பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைக்கு மூல காரணமாக இருக்கிறது.

பொள்ளாச்சி பாலியல் பயங்கரவாதம் தனிநபர், கூட்டுப் பாலியல் வன்கொடுமை என்கிற எல்லையைத் தாண்டி, புதிய பரிமாணம் எடுத்துள்ளது. தகவல் தொழில் நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் - 'ஸ்மார்ட் போன்களில்' உள்ள முகநூல், வாட்ஸ்அப், புகைப்படம் - வீடியோ எடுக்கும் வசதிகள் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமைகளை நிகழ்த்துவதற்குத் தூண்டுதலா கவும் துணையாகவும் இருந்திருக்கின்றன. முகநூல் மூலம் இளம் பெண்களுடன் நயவஞ்சகமாகப் பேசி நட்பை ஏற்படுத்திக் கொள்வது; அவர்களை ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வரச்செய்து, கடத்திச் சென்று, கூட்டாக வல்லுறவு கொள்வது, அதை வீடியோவில் படம் பிடிப்பது, இதைக்காட்டி மிரட்டிப் பணம் பறிப்பது,



வசந்தகுமார் சதீஷ்குமார் சபரிராஜன் திருநாவுக்கரசு

மீண்டும் மீண்டும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துவது என்கிற தன்மையில் இக்கொடுஞ்செயல் நிகழ்த்தப்பட்டு வந்துள்ளது.

கடந்த ஏழு ஆண்டுகளில் இருநூறு பெண்களுக்கு மேல் இதுபோன்று வஞ்சிக்கப்பட்டுள்ளனர். இதுதொடர் பாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடியோ பதிவுகள் எடுக் கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இளம் பெண்கள் மட்டு மின்றி, சமூக ஊடகங்களில் தீவிரமாக இயங்கி வந்த திருமணமான-குழந்தைகள் பெற்ற-படித்த-பணக்கார வீட்டுப் பெண்களும் இக்கொடுமைக்கு இலக்காகி உள்ளனர். வீடியோ பதிவைக் காட்டி மிரட்டி வைத்திருப்பதால், இக்கொடுமைக்கு உள்ளான பெண்கள் தங்கள் குடும் பத்தினரிடமும், காவல்துறையிடமும் கூறிட அஞ்சினர்.

**ஏழாண்டுகள் இது தொடர்ந்து நடந்து வந் துள்ளது. இது காவல்துறைக்கும் புலனாய்வுத் துறைக்கும் தெரியாமல் நடந்திருக்காது. சில இளைஞர்கள் மட்டுமே இக்கொடிய செயலைத் தொடர்ந்து செய்ய முடியாது. இக்குற்றச் செயல் களுக்குப் பின்னால் அதிகார மய்யங்களின் துணை இருந்திருக்க வேண்டும். அரசியல்வாதி களுக்கும் உயர் அதிகார வர்க்கத்திற்கும் தொடர்பு இருக்க வேண்டும் என்று பரவலாகக் கருதப் படுகிறது.**

பொள்ளாச்சியில் தனியார் பெண்கள் கல்லூரியில் இரண்டாமாண்டு படிக்கும் ஒரு மாணவி தனக்கு நேர்ந்த பாலியல் துன்புறுத்தலைத் துணிந்து தன் குடும்பத்தினரிடம் கூறியதாலும், அக்குடும்பத்தினரும் 'குடும்ப கவுரவம்' என்கிற கூட்டுக்குள் முடங்கிவிடாமல், இக்கயவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று முடிவு செய்து, காவல் துறையில் புகார் அளித்ததால்தான் பொள் ளாச்சியின் பாலியல் பயங்கரம் வெளி உலகிற்குத் தெரிய வந்தது.

முகநூல் வழியாக நட்பான சபரிராஜன் 12.2.2019 அன்று கல்லூரி இடைவேளையின் போது அப்பெண்ணை ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு வரச்சொன்னான். அப்பெண் அங்குச் சென்றதும் சபரிராஜன் அப்பெண்ணை ஒரு மகிழுந்தில் அழைத்துச் சென்றான். மகிழுந்தில் அவனுடைய நண்பன் திருநாவுக்கரசு இருந்தான். வழியில் மற்ற இரு நண்பர்கள் வசந்தகுமார், சதீஷ்குமார் மகிழுந்தில் ஏறினர். அப்பெண்ணின் மேலாடையைக் கழற்றி வீடியோ எடுக்க முயன்ற போது அப்பெண் போராடி அவர்களிடமிருந்து தப்பினாள்.

பத்து நாள்கள் மனப்போராட்டத்துக்குப்பின் தன் அண்ணனிடம் நடந்ததைக் கூறினாள். 24.2.2019 அன்று அக்குடும்பத்தினர் பொள்ளாச்சி காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். சபரிராஜன், வசந்தகுமார், சதீஷ்குமார் ஆகிய மூவர் 25.3.2018 அன்று கைது செய்யப்பட்டனர். திருநாவுக்கரசு தலைமறைவானார். இதற்கிடையில் திருநாவுக்கரசின் அ.தி.மு.க. நண்பன் நாகராசன் என்பவர் தன் மூன்று நண்பர்களுடன் சென்று புகார் அளித்த அப்பெண்ணின் அண்ணனைத் தாக்கினார். இவர்கள் மீது புகார் அளித்ததன் பேரில் நாகராசன் உள்ளிட்ட நால்வர் கைது செய்யப்பட்டு அடுத்த நாளே பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். அ.தி.மு.க. விலிருந்து நாகராசன் நீக்கப்பட்டதாக அக்கட்சி அறிக்கை வெளியிட்டது.

இந்நிலையில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான போது எடுக்கப்பட்ட வீடியோ பதிவின் இரண்டு காட்சிகள் சமூக வலைதளங்களில் வெளியாயின. அவற்றில் தான் இரண்டு பெண்களின் அவலக் குரல்கள் ஒலித்தன. இது தமிழகம் முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இளம்பெண்களைக் கொண்டுள்ள குடும்பங்கள் அஞ்சி நடுங்கின. எதிர்க்கட்சிகள் குற்றவாளிகள் மீதும் அவர்களுக்குத் தொடர்புடைய அதிகாரம் படைத்தவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கக் கோரின. 5.3.2019 அன்று திருநாவுக்கரசு கைது செய்யப்பட்டான். தமிழகம் முழுவதும் பொள்ளாச்சி வன்கொடுமையைக் கண்டித்தும், குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கக் கோரியும் கல்லூரிகளில் மாணவர்கள் பலவகையான போராட்டங்களை நடத்தினர். தமிழ்நாட்டு அரசின் காவல்துறை இப்போராட்டங்களை ஒடுக்க முனைந்தது.

**கோவை மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர், உச்சநீதிமன்றத்தின் நெறிமுறைகளுக்கு மாறாக, கல்லூரி மாணவியின் பெயரை வெளியிட்டார். இதன்நோக்கம் பாதிக்கப்பட்ட மற்ற பெண்கள் புகார் அளிக்க முன்வரக்கூடாது என்பதே ஆகும். மேலும் புலனாய்வும் விசாரணையும் தொடங்குவதற்கு முன்பே, குற்றம் சாட்டப்பட்ட நால்வருக்கும் அரசியல்வாதிகளுக்கும் தொடர்பு இல்லை என்று கூறினார். இந்த வழக்கு 13.3.2019 அன்று சி.பி.சி.ஐ.டிக்கு மாற்றப்பட்டது. அதே நாளில் சில மணிநேரத்துக்குள் மத்திய புலனாய்வுத் துறைக்கு மாற்றுவதாக அறிவிக்கப் பட்டது. ஏழாண்டுகளாக நடைபெற்று வந்த பாலியல் வன்கொடுமையில் தொடர்புடையவர்கள் அனைவரும் தண்டிக்கப்படுவார்களா என்பது பெரிய கேள்விக்குறியாக உள்ளது. ஆர்.எஸ்.எஸ். காரரான ஆசீமானந்தா குண்டு வெடிப்புக் குற்ற வழக்கிலிருந்து 2019 மார்ச்சு மாதம் விடுதலையாகியிருப்பது ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் சட்டத்தை எப்படியும் வளைக்கலாம் என்பதையே காட்டுகிறது.**



மார்ச்சு 15 அன்று கிருட்டிணகிரி பொறியியல் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

**27.3.2019 நாளிட்ட 'துக்ளக்' இதழில் அதன் ஆசிரியர் பார்ப்பனக் குருமூர்த்தி, பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமைகள் நிகழ்வதற்கு, பெரியார் பெண்களுக்குக் கற்பு தேவையில்லை என்று கூறி கலாச்சாரச் சீரழிவை ஏற்படுத்தியதே காரணம் என்று நஞ்சை உமிழ்ந்துள்ளார். பெண்ணுக்குக் கற்பு வற்புறுத்தப்படுவது போல் ஆணுக்கும் கற்பு வற்புறுத்தப்பட வேண்டும் என்று பெரியார் வலியுறுத்தினார் என்பது அனைவரும் அறிந்ததாகும். கற்பு என்கிற கற்பிதத்தைக் கொண்டு மிரட்டியே பொள்ளாச்சியில் பெண்கள் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.**

**இந்துமத இதிகாசகங்கள், புராணங்கள், சாதி-மதச் சடங்குகள் பெயரால் பெண்கள் மீதான கருத்தியல் வன்முறை நிகழ்த்தப்படு கிறது. பெண்ணுக்குத் தன் உடல் மீதான உரிமை மறுக்கப்பட்டுள்ளது. பெண்ணின் உடல் ஆணின் ஆளுகைக்கு-அனுபவிப்புக்கு உரியது என்கிற ஆதிக்க மனநிலை ஒழிந்து, ஆணும் பெண்ணும் எல்லா வகையிலும் சமம் என்கிற நிலையை உருவாக்குதே பொள்ளாச்சி பாலியல் பயங்கர வாதம் போன்றவை நிகழாமல் தடுப்பதற்கான வழியாகும்.**

# வடக்கா? தெற்கா?

- குட்டுவன்

இந்தியா விடுதலை பெற்ற காலத்தில் இருந்தே காங்கி ரசுக் கட்சி ஆட்சி அசைக்க முடியாத ஆட்சியாக இருந்தது. விடுதலைக்காகப் போராடிய காங்கிரசில் பல தலைவர்கள் அரும் பெரும் தியாகங்களைச் செய் திருந்தனர். மாநிலங்கள் அளவிலும் கட்சியை வழி நடத்தியவர்கள் பெரும் தலைவர் களாகத் திகழ்ந்தனர். காங்கிரசினுடைய பெரும் தலைவரும் முதல் பிரதமரு மான சவகர்லால் நேரு மக்களின் தலைவராகவே இருந்தார். காங்கிரசு தொடக்கக் காலத்திலிருந்து முற் போக்குச் சிந்தனை உடையவர்களைப் பெருமளவில் அணைத்துச் செல்லவில்லை. இதன் காரணமாகப் பல மாநிலங்களில் காங்கிரசு ஆட்சியமைத்தாலும் அந்தந்த மாநிலங்களில் உள்ள உயர் சாதி உயர் வர்க்கத்தினர்தான் முதலமைச்சராக இருந்தனர். சமூக நீதிக் கொள்கையை இவர்கள் பின்பற்ற விரும்பவில்லை. இதற்கு மாறான நிலை தென்னகத்தில் மட்டும்தான் இருந்தது. சாதாரணக் குடும்பத்தில் பிறந்த தலைவர்கள் தான் காங்கிரசு முதல்வர்களாகத் திகழ்ந்தனர்.

1954இல் தமிழ்நாட்டில் முதலமைச்சராகப் பொறுப் பேற்ற காமராசர் ஏழைகளின் தலைவராகவே வாழ்ந்தார். ஆந்திராவில் சஞ்சீவ ரெட்டி, சஞ்சீவய்யா; பிரம்மானந்த ரெட்டி போன்றவர்கள் விடுதலைப் போராட்டக் காலத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு மக்களின்பிரச்சினைகளை உணர்ந்து தீர்ப்பதில் முன்னிலை வகித்தனர். கர்நாடகத்தில் நிசலிங்கப்பா பெரும் தியாகி யாகவும் நேர்மையான முதலமைச்சராகவும் இருந்தார். கேரளாவில் 1957ஆம் ஆண்டிலேயே கம்யுனிஸ்ட் கட்சி இ.எம்.எஸ். தலைமையில் ஆட்சியமைத்தது. மிக எளிமையாக வாழ்ந்த இ.எம்.எஸ். 1957இல் முதல்வராக இருந்த போது தலைமைச் செயல கத்திற்கு மிதி வண்டியில் சென்றவர். இதன் தாக்கம் கேரளாவில் எல்லாக் கட்சியினரிடமும் இன்றளவும் நீடிக்கிறது. தேர்தலில் பண விளையாட்டுகள் முன்னிலை வகிக்கவில்லை.

கேரள மாநிலத்தில் காங்கிரசின் சார்பாகப் பல முறை முதல்வராக இருந்த ஏ.கே. அந்தோணி மிக மிக எளிமையாக வாழ்ந்தவர். சான்றாக 1982ஆம் ஆண்டு சென்னையில் நடந்த தென் மாநில முதல மைச்சர்கள் மாநாட்டிற்கு வந்திருந்தார். இக்கட்டுரை யாசிரியர் காலை 9.30 மணிக்கு சென்னைப் பல்கலைக் கழக நூலகத்தில் ஒரு நூலைத் தேடி எடுக்கச் சென்றார். அப்போது ஏ.கே.அந்தோணி அரசு விருந்தினர் மாளிகையில் இருந்து நடந்து வந்து சென்னைப் பல்கலைக்கழக நூலகத்தின் பதிவேட்டில் கையொப்ப மிட்டுப் படிக்கத் தொடங்கினார். எனக்கு இவர்தான் எ.கே.அந்தோணியாக இருக்குமோ என்ற சந்தேகம் வந்தது. அவரிடமே போய்க் கேட்டேன். ஆம் நான் கேரள மாநில முதல்வர் என்று சொன்னார். 10.30 மணி அளவில் நான் நூலகத்தை விட்டு வெளியே வந்த போது காவல்துறையின் உயர் அதிகாரிகள் கேரள முதல்வர் உள்ளே இருக்கிறாரா என்று என்னிடம் கேட்டார்கள். அப்போது உள்ளே சென்று அவரை அழைத்தார்கள். 11.30 மணிக்குதானே கூட்டம். நான் வந்து சேர்ந்து விடுகிறேன். நீங்கள் போங்கள் என்று கூறி நூலைப் படித்து முடித்து நடந்தே விருந்தினர் மாளி கைக்குச் சென்று பின்பு தலைமைச் செயலகக் கூட்டத் திற்கு அரசு மகிழுந்தில் சென்றார். இந்தியாவின் பாது காப்பு அமைச்சராக இருந்த போதும் அவர் காலத்தில் எந்தவித ஊழலும் நடைபெறவில்லை. ஏழை எளியோரின் நிலையை உணர்ந்து கேரள முதல்வர்கள் கட்சிக்கு அப்பாற்பட்டு கல்வி வளர்ச்சிக்காகச் செயலாற்றினர். இதன் காரணமாகத்தான் கேரளா கல்வி வளர்ச்சியில் முதல் இடத்தைப் பெற்றது.

பெருந்தலைவர் காமராசர் தந்தை பெரியாரின் வழி களைப் பின்பற்றி ஏழை எளிய மாணவர்கள் பள்ளிக் கல்வியைப் பெறுவதற்குப் பெரும் தொண்டாற்றினார். சத்துணவுத் திட்டத்தைப் பள்ளிகளில் செயல்படுத்தி இந்திய மாநிலங்களுக்கே வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

மேற்கு வங்கம் உட்பட வட மாநிலங்களில் பிற் படுத்தப்பட்டவர்கள், மிகப் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப் பட்டோர், பழங்குடியினர் பள்ளிக் கல்வியில் தொடங்கிக் கல்லூரிக் கல்வி வரை இன்றளவும் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளனர். இந்த மாநிலங்களின் முதல்வர்கள் உயர் சாதி ஆதிக்க மனப்பான்மையோடு செயல்பட்டு இடஒதுக்கீடு சார்ந்த சமூக நீதிக் கொள்கை யைப் பின்பற்றாததே இதற்குக் காரணமாக அமைகிறது.

தமிழ்நாட்டில் நீதிக்கட்சிக் காலத்திலிருந்து இட ஒதுக்கீடு கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்ட காரணத் தினாலேயே மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில் கல்வி வளர்ச்சியில்-குறிப்பாக உயர் கல்வியில் இந்திய அளவில் முதல் மாநிலமாக இன்று திகழ்கிறது. சமூகம் சார்ந்த அரசியல் விழிப்புணர்ச்சி வட மாநிலங்களில் 1980களுக்குப் பின்தான் ஏற்பட்டது. இவற்றையெல் லாம் தெரிந்தோ தெரியாமலோ கன்னியாகுமரி காங்கிரசுத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் தமிழ்நாடு வட மாநிலங்களைவிட முற்போக்கானது கல்வியில்

வளர்ச்சியடைந்துள்ளது என்று ராகுல் குறிப்பிட்டார். இக்கருத்தினை பாசகவின் தமிழகத் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் வடக்கு தெற்கு என்று பிரித்து நாட்டின் ஒருமைப்பாட்டை ராகுல் சிதைக்கிறார் என்று கூறியுள் ளார்.

வடக்கு, தெற்குப் பிரச்சினை விடுதலைப் போராட்டக் காலத்திலேயே காங்கிரசுத் தலைவர்களாலேயே விவா திக்கப்பட்டது. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் தமிழ்நாட்டில் பார்ப்பனர்-பார்ப்பனரால்லாதார் பிரச்சினை போன்று வட நாட்டில் இந்துக்களுக்கும் முசுலிம் களுக்கும் ஒரு மோதல் போக்கு இருந்துள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளார். தந்தை பெரியார் காங்கிரசுத் தலைவராக இருந்தபோது பார்ப்பனரின் ஆதிக்கத்தை எதிர்த்தும் சமூக நீதிக் கொள்கைக்கு ஆதர வாகவும் பணியாற்றினார்; இடஒதுக்கீடு கொள்கையை ஏற்காத காரணத்தினால் காங்கிரசு இயக்கத்தைவிட்டு 1925இல் வெளியேறினார். இம்மாதிரியான பிரச்சினைகள் இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் அங்கு நிலவும் புவிசார் அரசியல் தன்மைகளுக்கு ஏற்ப நிலவி வருகின்றன. வடகிழக்கு மாநில மக்கள் பெரும்பாலும் பண்பாட்டால் / இனத்தால் தாங்கள் தனித்தன்மை யானவர்கள் என்பதை மெய்ப்பிப்பதற்காகத் தொடர் பேராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்திய அரசி னுடைய மேலாதிக்கத்தை அவர்கள் ஏற்றுக்கொள் வதே இல்லை. தென்னகத்தில் இதுபோன்ற பிரச்சி னைகள் தொடர்ந்து வெவ்வேறு வடிவங்களில் பல வரலாற்றுக் காரணங்களால் நிலவி வருகின்றன. தென்னக மண்ணில் பசவண்ணா, வள்ளலார், நாராயண குரு போன்றோர் சாதியத்திற்கு எதிராகவும் வர்ணாசிர மத்திற்கு எதிராகவும் களம் அமைத்துப் போராடினர்.

இந்தியா எப்போதும் ஒரே நாடாக இருந்ததில்லை என் பதைப் பல வரலாற்றுத் தொல்லியல் ஆய்வு முடிவுகள் மெய்ப்பித்து வருகின்றன. அரியானா மாநிலத்தில் ராகிகர்கியில் நடந்த அகழ்வாராய்ச்சியில் பல உண்மைகள் தற்போது வெளிப்பட்டுள்ளன. ஹரப்பா, மொகஞ்சதாரோ அகழ்வாராய்ச்சியைவிட பல ஆயிரம் ஏக்கர் நிலத்தில் மேற் கொள்ளப்பட்டது தான் அரியானா அகழ்வாராய்ச்சியாகும். புதிய அறிவியல் தரவுகள், உடற்கூறுகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்ந்ததில் ஏறக்குறைய எட்டாயிரம் ஆண்டு களுக்கு முன்பே இப்பகுதியில் மக்கள் வாழ்ந்துள்ளார்கள். இவர்களின் மரபணுக்கள் தென்னகத்தில் வாழ்ந்த மக்களின் மரபணுக்களில் இருந்து வந்தது என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். வடக்கு, தெற்கு என்கிற கருத்து தொன்மைக்காலம் தொட்டு இருந்து வருகிறது என்பதற்கு மேற் கூறிய அகழ்வாராய்ச்சி முடிவுகள் சான்று பகர்கின்றன.

1956இல் மொழிவழி மாநிலங்கள் அமைக்கப் பட்டபோது, அறிஞர் அம்பேத்கர் சிறந்த ஆய்வுகளை மேற்கொண்டு தனது கருத்துகளைக் கட்டுரை வடிவில் பதிவு செய்துள்ளார். இக்கட்டுரைகள் மராட்டிய மாநில அரசு வெளியிட்ட அம்பேத்கரின் பேச்சுகளும் எழுத்து களும் என்ற நூலின் முதல் தொகுதியில் இடம் பெற் றுள்ளன. தொடக்கக் காலத்தில் அம்பேத்கர் மொழிவழி மாநிலங்கள் அமைவதை எதிர்த்தவர். பின்பு மொழிவழி மாநில மறுசீரமைப்பு ஆணைய அறிக் கையைப் படித்துவிட்டு 1955ஆம் ஆண்டு தனது கருத்தை மாற்றிக்கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அம்பேத்கருக்கே உரிய தனித்தன்மையான அறிவாண் மையின்படி மேற்கத்திய அறிஞர் எமர்சனின் கருத் தையும் தனது கருத்துக்கு ஆதரவாகப் பதிவு செய்துள் ளார். ஒரே கொள்கை நிலைப்பாட்டில் இருப்பது ஒரு கழுதையின் குணமாகும். சிந்திக்கின்ற மனிதன் ஒரே சிந்தனை என்ற கூட்டுக்குள் விலங்கிடப்பட்டு இருக்க மாட்டான். ஒரே நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதை விடப் பொறுப்புதான் உயர்ந்தது. மனிதன் ஏற்கெனவே கற்றதை விட்டுப் புதிதாகக் கற்றதை ஏற்பதுதான் ஒரு பொறுப்புள்ள மனிதனின் கடமையாகும். பொறுப்புள்ள மனிதனுக்கு மறுசிந்தனைக்கு உட்பட்டு பழைய கருத்துகளை மாற்றும் வீரம் தேவை.... இதுதான் சிந்தனைக்கு இறுதியானது என்று ஏதும் இல்லை.

தற்போது அம்பேத்கரைப் போற்றுகிறவர்கள் அம்பேத் கர் கூறிய கருத்துகளை-ஆழமான சிந்தனைகளைப் படித்து விட்டு தான் பேசுகிறார்களா? என்று அச்சம் எழுகிறது. இதே நூலில்தான் அம்பேத்கர் வடக்கு, தெற்குப் பிரச்சினை, இந்திப் பிரச்சினை பற்றி மிக விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். அரசமைப்புச் சட்ட அவையில் இந்தியைத் தேசிய மொழியாக ஆக்கும் பிரிவுக்கு அவையில் ஏற்பட்ட எதிர்ப்பினையும் சுட்டி யுள்ளார். 115ஆவது விதியைப் பற்றி விவாதம் செய்யும் போது ஏற்படுத்திய கருத்து வேறுபாடுகள் வேறு எந்த விதியைப் பற்றிப் பேசும் போதும் ஏற்படவில்லை. எந்த விதிக்கும் இது போன்ற எதிர்ப்பு உருவாகவில்லை. எந்த விதிக்கும் இது போன்ற சூடான விவாதம் நடைபெற வில்லை. **நீண்ட விவாதத்திற்குப் பின்னர் வாக்கெடுப்பு மேற்கொண்ட போது, இந்தி வேண்டும் என்று 78 வாக்குகளும் இந்தி வேண்டாம் என்று 78 வாக்கு களும் சம அளவில் கிடைத்தன. சம வாக்குகள் வந்ததால் இப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடிய வில்லை. பின் காங்கிரசுக் கட்சியின் உள்கூட்டத் தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அப்போது இந்திக்கு ஆதரவாக 78 வாக்குகளும், எதிராக 77 வாக்குகளும் கிடைத்தன. இந்திய அரசமைப்புச்**

**சட்டத்தின் வரைவுக் குழுவின் தலைவராக நான் இருந்த காரணத்தால் இந்த உண்மையை அறிந்து கொள்ள முடிந்தது என்றார் அம்பேத்கர். மற்றொரு நிகழ்வையும் இந்நூலில் அறிஞர் அம்பேத்கர் பதிவு செய்துள்ளார். இந்த விவரங் கள் எந்த அளவிற்குத் தெற்கு, வடக்கை விரும்ப வில்லை என்பதை வெளிப்படுத்துகின்றன.** வடக்கு இதில் உறுதியாக இருப்பின் இந்த விருப்பமின்மை வெறுப்பாகவும் வளரலாம். வடக்கு அளவுக்கு மீறிய செல்வாக்கை இந்திய அரசியல் மீது திணிப்பது தொடர்ந் தால் தெற்கு பிரிந்துவிடும் என்றும் பதிவு செய்துள்ளார்.

அறிஞர் அம்பேத்கர் மொழிவாரி மாநிலங்கள் அமைக் கப்பட்டபோது தனது ஆய்வில் வடக்கு, தெற்கு மாநிலங்களின் நிலைமைகளைத் தெளிவாகச் சுட்டியுள் ளார். வடக்கிற்கும், தெற்கிற்கும் பெருமளவிலான வேறுபாடுகள் உள்ளன. வடக்கு பிற்போக்கானது, தெற்கு முற்போக்கானது. வடக்கு மூடநம்பிக் கையில் உள்ளது. தெற்கு பகுத்தறிவைப் போற்றக்கூடியது. தெற்கு, கல்வியில் முன்னிலையில் உள்ளது, வடக்கு கல்வி யில் பின்தங்கியுள்ளது. தெற்கின் பண்பாடு புதுமை நிறைந்தது வடக்கின் பண்பாடு பழமையில் உள்ளது. நான் இராசகோபாலாச்சாரியை வரைவுச் சட்டத்தின் தலைவர் என்ற முறையில் சந்திப்பேன். அரசமைப்புச் சட்டம் உருவாகும் நிலையில்-நீங்கள் பெரும் தவறைச் செய்கிறீர்கள். எல்லாப் பகுதிகளுக் கும் சம அளவில் பிரதிநிதித்துவம் அளிக்கும் ஒரு கூட்டாட்சி அமைப்பு இங்குப் பொருந்தாது என்று குறிப்பிட்டார். அப்படிப்பட்ட கூட்டாட்சி அமைப்பில் பிரதமரும் குடியரசுத் தலைவரும் இந்தி பேசும் பகுதிகளில் இருந்துதான் வருவார்கள்.... இரண்டு கூட்டரசுகள் இருக்க வேண்டும். ஒன்று வடக்குக் கூட்டரசு, மற்றொன்று தெற்குக் கூட்டரசு. இந்திய பெரும் கூட்டமைப்பு அரசு சமமான அளவில் மூன்று துறைகளில் (சட்டமன்றம், நீதி, நிர்வாகம்) சட்டம் இயற்றும் அதிகாரத்தைப் பெற்றிருக்க வேண்டும். இவைகள்தான் இராசகோபாலாச்சாரியாரின் உண்மைச் சிந்தனையாக இருந்தன. இந்தக் கருத்தியல் உண்மை யான காங்கிரசுகாரரின் ஆழ்மனதின் வெளிப்பாடாகும். திரு.இராசகோபாலாச்சாரியை ஒரு தொலைநோக்குப் பார்வை கொண்டவர் என்று நான் மதிக்கிறேன்.

வடக்கு, தெற்கு என இந்தியா பிரிந்து போகலாம் என்கிற அவரின் கருத்து வெற்றி பெறக்கூடாது என்பதற் காக நாம் ஒவ்வொருவரும் பணியாற்றிட வேண்டும். அமெரிக்காவில் வடக்கிற்கும் தெற்கிற்கும் நடந்த உள் நாட்டுச் சண்டையை மறக்கக் கூடாது. இந்தியாவில் வடக்கிற்கும் தெற்கிற்கும் உள்நாட்டுச் சண்டைகூட ஏற்பட லாம். பெருமளவில் பண்பாட்டு வேறுபாடுகள் வடக் கிற்கும் தெற்கிற்கும் இருப்பதை மறந்து விடக்கூடாது. இந்த வேறுபாடுகள் தீப்பற்றும் நிலையை ஒத்தவை.

இத்தகைய கருத்துகளை இன்றைய நிலையில் ஒப்பிட்டுப் பார்த்தால் வேறுபாடுகளும் மாறுபாடுகளும் ஒன்றிய அரசின் ஆதிக்க மனப்பான்மையால் மேலும் பெருகி வருகின்றன. குறிப்பாகப் பிரதமர் மோடி ஒன்றிய அரசின் பிரதமரான பிறகு என்றுமில்லா அளவிற்கு இந்தித் திணிப்பும், செத்துப் போன சமஸ்கிருத மொழிக்கு முன்னுரிமை அளிப்பதும் மற்ற தேசிய மொழிகளை அவமதிப்பதும், சிறுபான்மையும், தலித் இன மக்களின் மீது தொடரும் தாக்குதல்களும் வட மாநிலங்களிலேயே பெரும் வெறுப்பையும் பிளவு களையும் ஏற்படுத்தியுள்ளது. பசுப் பாதுகாவலர்கள் என்ற போர்வையில் இந்துத்துவ அமைப்பினர் அடிக்கும் கொட்டம் எண்ணிலடங்காது. கல்வி நிலையங்களில் உயர் கல்வி அமைப்புகளில் பாசிசத்தை வளர்க்கும் போக்கு தொடர்ந்து பெருகி வருகிறது. மராட்டிய மாநிலத்தில் பகுத்தறிவாளர்கள் நரேந்திர தபோல்கர் பன்சாரே கர்நாடக மாநிலத்தில் கல்பர்கி, திருமதி. லங்கேஷ்வர் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே வரி போன்ற முழக்கங்கள் அம்பேத்கரின் சுதந்தர சமத்துவ சகோதரத்துவக் கருத்துகளை முழுமையாக சமுதா யத்திலும் நாட்டிலும் சிதைத்து வருகின்றன. மேலும் வடமாநிலங்கள், தென் மாநிலங் களின் வரி வருவாயை எடுத்துக்கொண்டு மிகக் குறைந்த அளவான நிதி ஒதுக்கீட்டைத் தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங் களுக்கு அளிப்பதும், இந்தி பேசும் வட மாநிலங் களுக்கு நிதியை வாரி வழங்குவதும் ஏற்கெனவே வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையே பெருகி வருகின்ற ஏற்றத்தாழ்வைக் குறைக்குமா? பெருக்குமா? என்பதை உணர வேண்டியவர்கள் உணரும் காலம் நெருங்கி விட்டது.

**இதையெல்லாம் புரிந்துதான் ராகுல் வடக்கு-தெற்கு பற்றிப் பேசினாரா? என்பதும் ஒரு புதிர்தான். இக்கருத்தைத் தமிழ்நாடு பாஜக தலைவர் பிரிவினைவாதம் என்று சொல்வது அறியாமையின் வெளிப்பாடே. வடக்கு-தெற்கு பிரச்சினைகளுக்கு இராஜகோபாலாச் சாரியார் அம்பேத்கரிடம் குறிப்பிட்ட வடக்கு-தெற்கு உறவைச் செம்மைப்படுத்தும் புதிய பெருங்கூட்ட மைப்பு உருவாகுமா? அல்லது வடக்கு-தெற்கு பிரிவினை யில் முடியுமா? காலம்தான் பதில் சொல்லும்.**

●

# பாபர் மசூதி - இராம ஜென்ம பூமி வழக்கு சமரச முயற்சி வெற்றி பெறுமா?

# என்ன செய்யப் போகிறது உச்சநீதிமன்றம்?

- க. முகிலன்

“இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்ந்த இடத்து” குறள் (879)


“முள்மரத்தை இளையதாக இருக்கும்போதே வெட்ட வேண்டும்; காழ்ப்பு ஏறி, முதிர்ந்த போது வெட்டுகின்ற வரின் கையையே அது வருத்தும்.”

**முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும் எனும் சொலவடையாக இக்குறள் மக்கள் பேச்சுவழக்கில் வாழ்கிறது.**

அயோத்தியில் பாபர் மசூதி - இராம ஜென்ம பூமி சிக்கல் இக்குறளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறது. பாபர் மசூதி, பாபரின் தளபதி மீர் பாகியால் 1528இல் கட்டப்பட்டது. 19ஆம் நூற்றாண்டு முதல் பாபர் மசூதி வளாகத்தில் ஒரு மூலையில் இருந்த ஒரு மேடையை (சபுத்ரா) இராமர் பிறந்த இடமாகக் கருதி இந்துக்கள் வழிபட்டு வந்தனர். இந்த மேடை ‘ஜென்மஸ்தான்’ எனப் பட்டது. ஜென்மஸ்தானின் பூசாரி ரகுபர்தாஸ் என்பவர். 29-1-1885-இல் இராமர் பிறந்த மேடை மீது கோயில் கட்ட அனுமதி கோரி பைசாபாத் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். 24-12-1885 அன்று அவ்வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது.

1947-இல் இந்தியா, பாக்கித்தான் என இரண்டு நாடுகள் அமைந்த போது, வடஇந்தியாவில் இந்து-முசுலீம் பகை கொழுந்துவிட்டு எரிந்தது. பல இலட்சம் பேர் கொல்லப்பட்டனர். இந்தச் சூழலில் இந்துமகா சபையைச் சேர்ந்த தீவிர இந்து உணர்ச்சியினர் பாபர் மசூதியைக் கையகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் திட்டமிட்டு 1949 திசம்பர் 22 நள்ளிரவில் மசூதிக்குள் புகுந்து, மசூதியின் கவிகையின்கீழ் குழந்தை இராமன் சிலையை நாட்டினர். சுயம்புவாக இராமன் தோன்றியதாக 23-12-1949 காலையே ஆயிரக்கணக்கில் இந்துக்கள் மசூதியில் வைக்கப்பட்ட இராமனை வழிபடுமாறு செய்தனர். உடனே இசுலாமியர்கள் காவல் துறையில் புகார் அளித்தனர். முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யப்பட்டது.

முசுலீம்கள் இராமன் சிலையை உடனடியாக அகற்றுமாறு கோரினர். பைசாபாத் மாவட்ட ஆட்சியராக இருந்த கே.கே.கே. நாயர் இந்து மகாசபையினருக்கு ஆதுரவாகச் செயல்பட்டார். அயோத்தியில் இருந்த காந்தியவாதியான அக்சய பிரம்மச்சாரி என்பவர் உத்திரப்



பிரதேச அரசு மசூதியில் வைக்கப்பட்ட இராமர் சிலையை அகற்ற வேண்டும்; சிலை வைக்கப்பட்டது காந்தியின் -காங்கிரசின் மதச்சார்பின்மைக் கோட்பாட்டுக்கு எதிரானது என்று போராடினார். பிரதமராக இருந்த நேருவும் சிலையை அகற்றுமாறு உத்தரப்பிரதேச அரசுக்கு அறிவுறுத்தினார். உ.பி.யில் உள்துறை அமைச்சராக இருந்த லால் பகதூர் சாஸ்திரி இதில் உறுதியான நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டார். பைசாபாத் மாவட்ட ஆட்சியர் நாயர், இராமர் சிலையை அகற்றினால் பெரும் கலவரம் ஏற்படும் என்று கூறியதையே உ.பி. அரசும் வழிமொழிந்தது.

**மசூதியில் இராமன் சிலை வைக்கப்பட்ட மறு நாள் காலையே மாவட்ட நிர்வாகம் அச்சிலையை அகற்றியிருந்தால், இன்றளவும் தீர்க்கப்படாத பிரச்சனையாக-இந்திய அரசியலையே ஆட்டிப் படைக்கும் ஆற்றல் கொண்டதாக பாபர் மசூதி-இராமஜென்ம பூமி சிக்கல் உருவெடுத்திருக்காது. மாவட்ட ஆட்சியர் நாயர் விரைவில் விருப்ப ஓய்வில் சென்றார். அவருடைய மனைவி 1952 தேர்தலில் சனசங்கத்தின் (பா.ச.க.வின் அப்போதைய பெயர்) சார்பில் நாடாளுமன்ற உறுப்பினரானார். 1967-இல் நாயர் சனசங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினரானார். உயர் அதிகார வர்க்கம் இந்துத்துவ உணர்வுடனே செயல்படுகிறது என்பதற்கு நாயர் நல்லதோர் எடுத்துக்காட்டு.**

இராமர் சிலையை அகற்றுவதற்கு மாறாக, உ.பி. அரசு 29-12-1949 அன்று பாபர் மசூதியைக் கையகப்

படுத்தியது. பாபர் மசூதியின் முதன்மையான நுழை வாயில் கதவு பூட்டப்பட்டது. இதையடுத்து 1950 சனவரியில் இராமச்சந்திரதாஸ் பர மஹன்ஸ் என்பவர் பாபர் மசூதி நிலத்தின் உரிமைகோரி வழக்குத் தொடுத் தார். 1959-இல் நிர்மோகி அகாரா என்கிற இந்து உட்பிரிவு இதேபோன்று ஒரு வழக்கைத் தொடுத் தது. பாபர் மசூதி இடத்துக்கான முழு உரிமை கோரி சன்னி மத்திய வக்ஃபு வாரியம் நீதிமன்றத் தில் 1961இல் ஒரு எதிர் வழக்கைத் தொடுத்தது.

பிரித்தானிய ஆட்சியில் பாபர் மசூதி இடத்தில் இராமர் கோயில் கட்ட வேண்டும் என்று 1885இல் தொடுக்கப்பட்ட வழக்கு ஓராண்டிற்குள் தள்ளுபடி செய்யப் பட்டு முசுலீம்களின் உரிமை நிலைநாட்டப்பட்டது. சுதந்தர இந்தியாவில் ஆட்சி அதிகாரம், மேல் சாதி-ஆதிக்க இந்துக்களிடம் சென்றதால் பாபர் மசூதியில் அநீதி இழைக் கப்பட்டது. சுதந்தரம் பெற்று எழுபது ஆண்டுகளுக்குப் பின்னும் இந்திய மக்கள் தொகையில் 17 விழுக்காட்டினராக உள்ள இசுலாமியர்கள் ஆட்சியா ளர்களாலும் அதிகார வர்க்கத்தாலும்-ஏன் நீதித்துறை யாலும் கூட இரண்டாம்தரக் குடிமக்களாகவே பார்க்கப் படுகின்றனர். எனவே இவர்கள் பாபர் மசூதி வழக்கில் இசுலாமியர்களுக்கு உரிய நியாயத்தை வழங்கும் பொறுப் பினைத் தட்டிக்கழித்துக் கொண்டே வந்துள்ளனர்.

ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோவ்வால்கரின் ஆலோச னைப்படி தீவிரமான இந்துத்துவத்தை முன்னெடுப் பதற்காக 1964-இல் விசுவ இந்து பரிசத் என்கிற அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்திராகாந்தி கொலையுண்ட பின், 1984இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பா.ச.க. இரண்டே இடங்களைப் பெற்றது. இந்து என்கிற உணர் வை அரசியல் முதலீடாக மாற்றி, இந்துக்களின் வாக்கு களைத் திரட்டுவதற்காக விசுவ இந்து பரிசத் 1984இல் பாபர் மசூதி உள்ள இடத்தில்தான் இராமர் பிறந்தார் என்பதால் அவ்விடத்தில் இராமருக்குக் கோயில் கட்ட வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பியது. இதை முன்வைத்து இந்தியா முழுவதும் பரப்புரை செய்தது. இராமர் கோயிலை இடித்துவிட்டு பாபர் மசூதியைக் கட்டியது இந்துக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகும். எனவே இந்துக்களின் பெருமையை நிலைநாட்ட பாபர் மசூதியிடத்தில் இராமருக்குக் கோயில் கட்ட வேண்டும் என்கிற கருத்துக்கு வடஇந்தியாவில் ஆதரவு பெருகியது.

விசுவ இந்து பரிசத்தின் இந்துத்து வப்பரப்புரையை எதிர்ப்பதற்கு உண்மையான மதச்சார்பின்மையை முன் னெடுத்து முறியடிப்பதற்குப் பதிலாக இளம் பிரதமர் இராசிவ் காந்தி மென்மையான இந்துத்துவப் போக்கைப் பின்பற்றினார். இராசிவ் காந்தியின் அறிவுறுத்தலின்



அயோத்தியில் 221 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட உள்ள இராமர் சிலையின் தோற்றம்

பேரில் 1986 பிப்பிரவரி 1 அன்று பாபர் மசூதியின் வாயிற் கதவின் பூட்டுகள் அகற்றப்பட்டு, இந்துக்கள் பாபர் மசூதிக்குள் சென்று இராமரை வழிபடுவதற்கு அனுமதிக்கப்பட்டனர். தாழியில் அடைத்து வைத்திருந்த பூதத்தைத் திறந்துவிட்ட பெருங்கேட்டை இராசிவ் காந்தி செய்தார்.

அதன்பின் ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிசத், பஜ்ரங்தள், பா.ச.க. உள்ளிட்ட சங்பரிவாரங்கள் அயோத் தியில் பாபர் மசூதி உள்ள இடத்தில்தான் இராமர் பிறந்தார் என்று இந்துக்கள் நம்புகிறார் கள்; எனவே அங்கு இராமருக்குக் கோயில் கட்ட வேண்டும் என்கிற பரப்பு ரையை இந்தியா முழுவதும் செய்தனர். இராமர் கோயில் கட்டுவதற்காக 1989 அக்டோபர், நவம்பர் மாதங்களில் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் செங்கற்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன. இந்த ஊர்வலங் களில் இசுலாமியருக்கு எதிரான முழக்கங்கள் எழுப்பப் பட்டு, சாதாரண இந்துக்களிடம், இசுலாமியர்கள் அந்நியர் கள்-ஆக்கிரமிப்பாளர்கள்-பகைவர்கள் என்கிற சிந்தனை ஊன்றப்பட்டது. 9-11-1989 அன்று மசூதிக்கு வெளியில் இராமர் கோயில் கட்டுவதற்கான “சிலன்யா பூசை” பிரதமர் இராசிவ் காந்தியின் ஆதரவுடனும் உச்சநீதி மன்றத்தின் துணையுடனும் நடந்தது. 1989இல் இராசிவ் காந்தி நாடாளுமன்றத்திற்கான தேர்தல் பரப்பு ரையை அயோத்தியிலிருந்து தொடங்கினார். 1989 தேர்தல் அறிக்கையில் பா.ச.க. அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவோம் என அறிவித்தது.

அதன்பின், சங்பரிவாரங்கள் பாபர் மசூதியை இடிப்பதற்குத் திட்டமிட்டனர். 1990இல் எல்.கே. அத்வானி வடஇந்தியாவில் மேற்கொண்ட இராம இரத யாத்திரை அதற்கான அடித்தளத்தை அமைத்தது. **பி.வி. நரசிம்மராவ் பிரதமராக இருந்த போது - உ.பி.யில் கல்யாண்சிங் தலைமையிலான பா.ச.க. ஆட்சி இருந்த போது, 6-12-1992 அன்று சங்பரிவாரங்களால் பாபர் மசூதி இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. பாபர் மசூதி இடிக்கப்படும் என்று எல்லோரும் அறிந் திருந்த நிலையில் காங்கிரசின் தலைமையிலான நடுவண் அரசும், உ.பி.யின் பா.ச.க. அரசும், உச்சநீதிமன்றமும் இதைத் தடுக்கத் தவறிவிட்டன. பாபர் மசூதிக்கு அருகில் இந்தியப் படைகள் நிறுத்தப்பட்டிருந்த நிலையிலும் பாபர் மசூதி இடிக்கப்பட்டது என்பது இந்திய ஆளும் வர்க்கத்தின் இந்துத்துவ மனச்சாய்வையே காட்டுகிறது.**

1949 திசம்பர் 22 நள்ளிரவில் பாபர் மசூதியில் இராமர் சிலை வைக்கப்பட்டதை அடுத்த நாளே அகற்றாமல் ஆட்சி நிர்வாகம் துணை நின்றது. அதேபோல் 1992 திசம்பர் 6 அன்று பாபர் மசூதி இடிக்கப்பட்டதும் அங்கிருந்த சங் பரிவார குண்டர் படையைக் காவல் துறையும், இராணுவமும் விரட்டியடித்திருக்க வேண்டும். மாறாக, பாபர் மசூதி தகர்க்கப்பட்ட பின், அதன் இடிபாடுகளை அகற்றி, மசூதியின் கவிகை இருந்த இடத்தில் இராமர் சிலையை நாட்டி, தற்காலிகக் கோயில் அமைக்கும் வரையில் இந்திய அரசும் அதன் படைகளும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது எவ்வளவு வெட்கக்கேடு. உலகில் இந்தோனேசியாவுக்கு அடுத்து அதிக எண்ணிக் கையில் முசுலீம்கள் வாழும் நாடு இந்தியா. ஆனால் இவர்களின் மத உணர்வுகளை, உரிமைகளைக் காப்பாற்றாமல் இந்திய அரசு வஞ்சித்துவிட்டது.

பாபர் மசூதியை இடித்ததற்காக இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. ஒன்று பெயர் தெரியாத எண் ணற்ற கரசேவர்கள்மீது; மற்றொன்று அத்வானி, உமாபாரதி உள்ளிட்டோர் மீது. வாஜ்பாய் ஆட்சியில், அத்வானி உள்ளிட்டோர் வழக்கிலிருந்து விடுவிக்கப் பட்டனர். மீண்டும் காங்கிரசு ஆட்சி ஏற்பட்ட போது அவர்களை வழக்கிலிருந்து விடுவித்தது செல்லாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்த வழக்குகள் என்னவாயின என்று கேட்பதற்குக்கூட ஆள் இல்லாத அவலநிலை இப்போது ஏற்பட்டுவிட்டது. 500 ஆண்டு களாக அயோத்தியில் இருந்த பாபர் மசூதியை இடித்த வர்கள் தண்டனையில்லாமல் தப்பிப்பது என்பது சட்டத்தின் ஆட்சிக்கும் சனநாயகத்திற்கும் மதச்சார்பின் மைக்கும் மாபெரும் இழுக்காகும்.

குதிரை வெளியேறிய பின் இலாயத்தைப் பூட்டியது போல், பாபர் மசூதி இடத்தின் 2.77 ஏக்கர் நிலத்தைச் சுற்றிலும் உள்ள 67.7 ஏக்கர் நிலத்தை 1993இல் நடுவண் அரசு ஒரு அவசரச் சட்டத்தின் மூலம் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டது. இதன் நோக்கம், பாபர் மசூதியைச் சுற்றியுள்ள நிலப்பகுதியில் இராமர் கோயில் கட்டாமல் தடுப்பதே ஆகும். பாபர் மசூதி இடிக் கப்படுவதற்குமுன் கல்யாண் சிங் தலைமையிலான உ.பி. அரசு, 1992இல் 42 ஏக்கர் நிலத்தை நீண்டகாலக் குத்தகையில் இராமஜென்ம பூமி அறக்கட்டளைக்குக் கொடுத்தது. இந்துத்துவத்தை நிலைநாட்ட பா.ச.க. ஆட்சி என்னவெல்லாம் செய்யும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

பாபர் மசூதி-இராமஜென்ம பூமி வழக்கில் அலகாபாத் உயர்நீதிமன்றம் 2010 செப்டம்பர் 30 அன்று தீர்ப்பு வழங்கியது. பாபர் மசூதி இருந்த 2.77 ஏக்கர் நிலத்தை இராம் லல்லா, (குழந்தை இராமன் சார்பாக வழக்குத் தொடுத்தவர்), நிர்மோகி அகாரா, சன்னி வக்பு வாரியம் ஆகிய மூன்று தரப்பினருக்கும் சமமாகப் பிரித்தளிக்க வேண்டும் என்று அத்தீர்ப்பு கூறியது.

இத்தீர்ப்பை எதிர்த்து 14 மேல் முறையீட்டு வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்டன.

எட்டு ஆண்டுகள் கழித்து இம்மேல்முறையீடு களை 2018 செப்டம்பர் 27 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, அசோக் பூஷண், அப்துல் நாசர் ஆகியோ ரைக் கொண்ட அமர்வு, 2018 அக்டோபர் 29 முதல் இந்த வழக்கின் மீதான விசாரணை தொடர்ந்து நடை பெறும் என்று அறிவித்தது. அதனால் சங்பரிவாரங்கள் 2019 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் அயோத்தி வழக்கின் தீர்ப்பு வெளியாகும் என்று ஆவலுடன் எதிர்பார்த்தன.

ஆனால் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா ஓய்வு பெற்றதால் புதிய தலைமை நீதிபதியாகப் பதவியேற்ற ரஞ்சன் கோகோய் தலைமையிலான அமர்வு 2018 அக்டோபர் 29 அன்று கூடிய போது, 2019 சனவரி முதல் கிழமையில் அயோத்தி வழக்கை விசாரிப்பதற் கான புதிய அமர்வு அறிவிக்கப்படும்; அது விசாரணையை நடத்தும் என்று அறிவித்தது. நாடாளுமன்றத் தேர்த லுக்கு முன்-மோடி பிரதமராக உள்ள போதே அயோத்தி வழக்கில் தீர்ப்பைப் பெற்று விடலாம் என்று எதிர் பார்த்திருந்த சங்பரிவாரங்களுக்கு இந்த அறிவிப்புப் பேரிடியாய் அமைந்தது.

அதனால் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நோக்கத் துடன் உடனடியாக ஆர்.எஸ்.எஸ்.-இன் தேசிய செயற் குழுவின் மூன்று நாள் கூட்டம் மும்பையில் கூட்டப் பட்டது. இக்கூட்டத்திற்குப்பின் நவம்பர் 2 அன்று ஆர்.எஸ்.எஸ்.-இன் பொதுச் செயலாளர் சுரேஷ் பய்யாஜி ஜோதி, ‘‘நீண்டகாலம் காத்திருந்துவிட்டோம்; இனியும் கால வரம்பின்றிக் காத்திருக்க முடியாது. 1992இல் மேற்கொள்ளப்பட்டது போன்று மிகப் பெரிய போராட்டம் நடக்கும். இராமர் கோயில் போன்ற உணர்வுபூர்வமான விடயங்களுக்கு நீதிமன்றங்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும். இந்த விவகாரத்தில் சட்டப்படியான தடைகள் விரைவில் அகற்றப்படும். இராமர் கோயில் கட்டுவதற் குச் சட்டம் இயற்றுவது அல்லது அவசரச் சட்டம் இயற்று வது குறித்து நடுவண் அரசு ஆராய வேண்டும்’’ என்று கூறினார்.

தில்லியில் 127 உட்பிரிவுகளைச் சார்ந்த 3000 இந்து சாமியார்களின் கூட்டம் 4.11.18 அன்று நடை பெற்றது. இக்கூட்டத்தில் நடுவண் அரசு அயோத்தியில் இராமர் கோயில் கட்ட அவசரச் சட்டம் இயற்ற வேண்டும் என்று தீர்மானம் இயற்றியது.

விசுவ இந்து பரிசத் தில்லியில் 5 இலட்சம் பேர் கொண்ட பேரணியை நடத்தியது. அப்போது விசுவ இந்து பரிசத் தலைவர் விஷ்ணு கோக்ஜே, ‘‘சனநாய கத்தில் நாட்டு மக்களின் விருப்பங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். நாட்டு மக்களே அனைவரையும்விட உயர்ந்த வர்கள்; நீதிமன்றம் அல்ல. மசூதி இருந்த இடத்தில் இராமர் கோயில் கட்ட விரும்புவதாகத் தவறான கருத்து நிலவுகிறது. கோயில் இடிக்கப்பட்ட இடத்தில்தான் மசூதி கட்டப்பட்டது’’ என்று பேசினார். மேலும் அப்பேரணி யில் 2019 சனவரி 31 மற்றும் பிப்பிரவரி 1 அன்று பிரயாகையில் கும்பமேளாவின்போது நடைபெறும் இந்து சாமியார்களின் நாடாளுமன்றத்தில், அயோத்தியில் கோயில் கட்டுவதற்கான நாள் அறிவிக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

2019 சனவரி 4 அன்று உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் தலைமையிலான அமர்வு கூடியது. அயோத்தி வழக்கை நிலவுரிமை சார்ந்ததாக மட்டுமே 2010இல் அலகாபாத் உயர்நீதிமன்றமும், 2018 செப்டம்பரில் தலைமை நீதிபதியாக இருந்த தீபக் மிஸ்ரா அமர்வும் கருதின; ஆனால் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் இது வெறும் நிலவுரிமை மட்டும் சார்ந்த வழக்கு அல்ல; மதம் சார்பான மக்களின் உணர்வுபூர்வமானதாகவும் இருப்பதால் அய்ந்து நீதிபதிகள் கொண்ட அரசமைப்புச் சட்ட அமர்வு இதை விசாரிக்க வேண்டும் என்று கருத்துரைத்தார்.

சனவரி 8 அன்று இதற்கான அமர்வு அறிவிக்கப் பட்டது. தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய், நீதி பதிகள் எஸ்.ஏ. பாப்டே, என்.வி. ரமணா, யு.யு. லலித், டி.ஒய். சந்திரசூட் ஆகியோர் இந்த அமர்வில் இடம் பெற்றிருந்தனர். இவர்களில் நீதிபதி யு.யு. லலித், அயோத்தி வழக்கில் கல்யாண் சிங்கிற்காக வழக்குரைஞராக வாதாடியது சுட்டிக்காட்டப்பட்டதாலும், நீதிபதி என்.வி. ரமணா வேறு காரணத்திற்காகவும் இந்த அமர்வி லிருந்து விலகினர். இவர்களுக்குப் பதிலாக நீதிபதிகள் அசோக் பூஷண், அப்துல் நசீர் ஆகியோர் சேர்க்கப் பட்டனர். இதனால் வழக்கு விசாரணை தள்ளிப் போயிற்று.

கும்பமேளாவில் சாமியார்கள் நாடாளுமன்றம் கூடவிருந்த நிலையில், சங்பரிவாரங்களின் அழுத்தத்தை மடைமாற்றும் வகையில், 29.1.2019 அன்று நடுவண் அரசு, 1993இல் அயோத்தியில் கையகப்படுத்திய 67.7 ஏக்கர் நிலத்தை உரியவர்களிடம் திருப்பி அளித்திட உச்சநீதிமன்றத்தின் அனுமதியைக் கோரியது. இஸ்மாயில் பரூக்கி தொடுத்த வழக்கில் 1994இல் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில், 2.77 ஏக்கர் நிலம் தொடர்பான வழக்கில் தீர்ப்பு வழங்கப்படும் போது, அந்நிலத்துக்கு உரியவர் அதைப் பயன்படுத்தவிடாமல் முடக்கக் கூடிய சூழ்நிலையைத் தடுப்பதற்காகவே 67.7 ஏக்கர் நிலம் அரசின் பொறுப்பில் அளிக்கப்



இப்ராகிம் கலிபுல்லா   ஸ்ரீரவிசங்கர்   ஸ்ரீராம் பஞ்சு

குறிப்பு : அயோத்தி சமரசக் குழுவில் இடம் பெற்றுள்ளவர்கள்

பட்டுள்ளது என்று தெளிவுபடுத்தப்பட்டது. 2003இல் உச்சநீதிமன்ற அமர்வு இதே கருத்தை மீண்டும் உறுதி செய்தது.

இதையெல்லாம் மூடி மறைத்துவிட்டு, நாடாளு மன்றத் தேர்தலுக்குமுன் சங்பரிவாரங்களை மகிழ்விப் பதற்காக நரேந்திர மோடி அரசு 67.7 ஏக்கர் நிலத்தைத் திருப்பி அளிக்கும் முயற்சியில் ஈடுபட்டது. இதற்கு உச்சநீதிமன்றம் அனுமதி அளித்துவிட்டால், இராம ஜென்ம பூமி அறக்கட்டளைக்குச் சொந்தமான 42 ஏக்கரில் இராமர் கோயில் கட்டும் பணியைத் தொடங்கி விடலாம் என்பதே இத்திட்டத்தின் சூழ்ச்சியாகும். ஆனால் உச்சநீதிமன்றம் நிலத்தைத் திருப்பித் தரக்கூடாது என்று கூறிவிட்டது.

2019 பிப்பிரவரி 26 அன்று உச்சநீதிமன்றத்தின் அய்ந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு, நீதிமன்றத்தின் மேற்பார்வையின்கீழ் சமரச முயற்சியை மேற்கொள்ள விரும்புவதாக அறிவித்தது. வழக்கை மார்ச்சு 6ஆம் நாளுக்கு ஒத்தி வைத்தது. 6.3.2019 அன்று ராம்லல் லாவின் சார்பாளர்களும், மேல்முறையீடு செய்திருந்த மற்ற இந்து அமைப்புகளும் நீதிமன்றத்தின் சமரச முயற்சியை எதிர்த்தன. நிர்மோகி அகாராவும் சன்னி வக்பு வாரியமும் சமரச முயற்சியை ஏற்பதாகத் தெரி வித்தன. பாபர் மசூதி இருந்த இடத்தில்தான் இராமர் பிறந்தார் என்பது இந்துக்களின் நம்பிக்கை; இது எந்தவொரு நீதிமன்றத்தின் அதிகாரத்துக்கும் அப்பாற் பட்டது என்று சங்பரிவாரங்களின் தலைவர்கள் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து சொல்லி வருகின்றனர்.

**ஆயினும் உச்சநீதிமன்ற அமர்வு குடிமை யியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 89-இன்படி சமரசக் குழுவை 8.3.2019 அன்று அறிவித்தது.** உச்சநீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி இப்ராகிம் கலிபுல்லா இக்குழுவின் தலைவர். உயர்நீதித் துறையில் சமரச முயற்சிகளில் திறம்படப் பங்காற்றிய மூத்த வழக்குரைஞர் ஸ்ரீராம் பஞ்சும், வாழுங்கலை அமைப்பின் நிறுவனர் ஸ்ரீரவிசங்கரும் இக்குழுவின் மற்ற இரண்டு உறுப்பினர்களாவர். சமரசக் குழு எட்டு கிழமைகளுக் குள் சமரச முயற்சியை முடிக்க வேண்டும். இக்குழு செயல்படத் தொடங்கிய நான்கு கிழமைகள் கழித்து, சமரச முயற்சியின் முன்னேற்ற அறிக்கையை உச்ச நீதிமன்றத்தில் அளிக்க வேண்டும். சமரச முயற்சியின் நடவடிக்கைகள் குறித்து ஊடகங்கள் செய்தியை வெளி யிடக்கூடாது என்று உச்சநீதிமன்றம் கூறியது. உச்சநீதி மன்றத்தின் சமரச முயற்சி குறித்து பல்வேறு கருத்துகள் நிலவிய போதிலும், நாடாளுமன்றத் தேர்தலின் போது பாபர் மசூதி-இராம ஜென்ம பூமி சிக்கல் முதன்மையான விவாதமாக உருவாகாமல் தடுப்பதும் இதன் நோக்க மாகப் பார்க்கப்படுகிறது.

இதற்குமுன், நீதிமன்றத்துக்கு வெளியில் மூன்று தடவை அயோத்தி சிக்கலைத் தீர்ப்பதற்கான சமரச முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இவை தோல்வியில் முடிந்தன. காஞ்சி சங்கராச்சாரி 2003இல் மேற்கொண்ட சமரச முயற்சியின் போது, இசுலாமியப் பிரதிநிதிகளிடம், இசுலாமியர்கள் அயோத்தி, காசி, மதுரா ஆகிய மூன்று இடங்களில் உள்ள மசூதிகள் மீதான உரிமையை விட்டுக்கொடுத்தால், இந்தியாவில் உள்ள மற்ற மசூதிகள் மீது இந்துக்கள் உரிமை கோரமாட்டார்கள் என்று சொன்னார்.

இப்போது சமரசக் குழுவில் இடம்பெற்றுள்ள ஸ்ரீரவிசங்கர் இதற்குமுன் சமரச முயற்சியில் ஈடுபட்ட போது, இசுலாமியர்கள் பாபர் மசூதி இடத்தை இந்துக் களுக்கு விட்டுக்கொடுக்காவிட்டால் உள்நாட்டுப் போர் மூளும் என்று கூறினார். ஓராண்டுக்குமுன் அகில இந்திய முசுலீம் தனிநபர் சட்ட வாரியத்துக்கு ஸ்ரீரவிசங்கர் எழுதிய மடலில், ‘‘பாபர் மசூதி இடத்தின் உரிமையை முசுலீம்கள் விட்டுக்கொடுப்பது என்பது, பாபர் மசூதியை இடித்தவர்களிடமே மண்டியிடுவதாகாது. மாறாக, இந்திய நாட்டுக்கே நன்கொடையாக அளித்தது போன்றதாகும்’’ என்று குறிப்பிட்டிருந்தார். ஸ்ரீரவிசங்கர் கண்ணோட் டத்தில் இந்திய நாடு என்பது இந்துக்களுக்கானது மட்டுமே ஆகும். இத்தகைய ஒருவரை உச்சநீதிமன்றம் சமரசக் குழுவில் சேர்த்திருப்பது குறித்துப் பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

சமரசக் குழு தன் பணியை 13.3.19 அன்று தொடங் கியது. எட்டுக் கிழமைக்குள் அதாவது 8.5.2019-க்குள் இக்குழு தன் பணியை முடிக்க வேண்டும். எட்டுக் கிழமைக்குள் இக்குழு அதன் பணியை முடிக்குமா? மேலும் காலநீட்டிப்புக் கேட்குமா? என்பது தெரியவில்லை. அரசு அமைக்கும் விசாரணை ஆணையங்கள் மூன்று



அயோத்தியில் கரசவேபுரத்தில் இராமர் கோயில் கட்டுவதற்காக தயாராக உள்ள கல்தூண்கள்

மாதங்களுக்குள் அதன் பணியை முடிக்க வேண்டும் என்று கூறப்பட்டாலும், மூன்று ஆண்டுகளுக்கு மேலும் கால நீட்டிப்புப் பெறுவதைப் பார்க்கிறோம். ஆனால் உச்சநீதிமன்றம் அமைத்துள்ள சமரசக்குழுவிற்குக் கால நீட்டிப்பு வழங்கப்பட்டாலும், அது மிகவும் குறுகிய காலத்திற்கே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சமரசக் குழு உறுப்பினர்களிடையே ஒத்த கருத்து எட்டப்படுமா? என்பது பெரிய வினாவாக இருக்கிறது. ஏனெனில் ஸ்ரீரவிசங்கர் பாபர் மசூதி இடத்தை இசுலா மியர்கள் இந்துக்களுக்கு விட்டுக்கொடுக்க வேண்டும் என்கிற கருத்தில் உறுதியாக இருப்பவர். கருத்து வேறு பாடு கொண்ட பரிந்துரையைச் சமரசக் குழு அளிக்கும் நிலையில்-அதாவது சமரச முயற்சி தோல்வியடைந்த நிலையில் உச்சநீதிமன்றமே விசாரித்துத் தீர்ப்பு வழங்க வேண்டிய நிலை ஏற்படும்.

பாபர் மசூதி நிலவுரிமை குறித்த வழக்கு 1950 முதல் நீதிமன்றத்தில் இருந்துவருகிறது. கிட்டத்தட்ட எழுபது ஆண்டுகளாக இதன்மீது தீர்ப்பு வழங்காமல் நீதித்துறை இழுத்தடித்துக் கொண்டே வந்திருப்பது அது தன் பொறுப்பைத் தட்டிக்கழித்து வந்திருக்கிறது என்ப தையே காட்டுகிறது. இப்போது உச்சநீதிமன்றத்தின் அய்ந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு இந்த வழக்கை விரைந்து விசாரணை செய்து ஒரு தீர்ப்பை அளிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது.

நீதித்துறையின் காலத்தாழ்ச்சியால் இந்தியாவின் அரசியல், சமூக நிலைகளில் பெரும் கேடுகள் நிகழ்ந் துள்ளன. அயோத்தியில் இராமர் கோயில் கட்டுதல் என்ற முழக்கத்தை முன்வைத்து இந்திய அரசியல் இந்துத்துவ மயமாக்கப்பட்டுவிட்டது. இதனால் சனநாயக நெறிமுறைகளை வளர்த்தெடுப்பதற்கான பொதுவெளி அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது. மக்களுக்கான அரசியல் என்பது மதத்திற்கான அரசியலாக மாற்றப்பட்டுவிட்டது. இருபது கோடி மக்களாக இருக்கும் இசுலாமியர்கள் இந்து மதத்தின் பகைவர்களாக - இந்திய நாட்டின் பாதுகாப்புக்கே அச்சுறுத்தலானவர்களாகச் சித்தரிக்கப் பட்டு, வெறுப்பு அரசியல் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது. இதனால் பாபர் மசூதி இடிப்புக்குப்பின் முசுலீம்கள் மீதான கொடிய தாக்குதல்களும், கொலைகளும் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன.

வாஜ்பாய் ஆட்சிக் காலத்திலும் (1998-2004), நரேந்திர மோடியின் ஆட்சியிலும் (2014-2019) இந்துத் துவ ஏகாதிபத்தியம் அரச அதிகாரத்தின் துணையுடன் ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே கலாச்சாரம் என்கிற பாசிசக் கோட்பாட்டைச் செயல்படுத்தி வருகிறது. இந்துத்துவத்துக்கு எதிராகப் பேசுவோரைத் தேசத் துரோகிகள், நகர நக்சலைட்டுகள் என்று முத்திரை குத்தி ஒடுக்கி வருகிறது. பாபர் மசூதி இடத்தில் இராமருக்குக் கோயில் கட்டுதல் என்கிற வலிமையான அடித்தளத்தின் மீது நின்று கொண்டுதான் இந்த அட்டூழியங்கள் செய்யப்படுகின்றன.

**எனவே இந்துத்துவப் பாசிசத்திடமிருந்து இந்திய நாட்டைக் காப்பாற்றிட அயோத்தி வழக்கில் சட்டத்தின் அடிப்படையில் உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கிட வேண்டும். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்பதாக இசுலாமியர்கள் தொடர்ந்து கூறிவரு கின்றனர். ஆனால் சங்பரிவாரங்கள் பாபர் மசூதி இடத்தில் இராமர் கோயில் கட்டுவதைத் தடுக்கும் அதிகாரம் உலகில் யாருக்கும் இல்லை என்று சொல்லி வருகின்றனர்.**

**அறுவை செய்து உயிரைக் காப்பாற்ற வேண்டிய நிலை இருக்கிறது. உச்சநீதிமன்றம் மேலும் தன் பொறுப்பைத் தட்டிக்கழிக்காமல் துணிவுடன் செயல்பட்டு பாபர் மசூதி - இராம ஜென்ம பூமி வழக்கில் தீர்ப்பு அளிக்க வேண்டும்.**

**பாபர் மசூதி நிலம் இசுலாமியருக்கு உரிமை யானது என்று தீர்ப்பு வருமாயின், பெருந்தன் மையுடன் இசுலாமியர்கள் அவ்விடத்தை இராமர் கோயில் கட்டுவதற்காக விட்டுத்தருவது நாட்டிற்கே நலம் பயப்பதாக அமையும்.**

●

# நம் நாட்டின் உண்மை நிலை என்ன?

காண்டி பாஜ்பாய்

**(உலகிலேயே இந்தியாவில் மிக உயரமான சிலை. ஆனால் நாடு வளருவதாகச் சொல்லப்படும் இந்தியாவின் பிற துயரக் கதைகள்)**

மேலோட்டமாகப் பார்த்தால் அமெரிக்கா, சீனா நாடுகளில் உள்ளவற்றைக் காட்டிலும் உலகிலேயே மிக உயரமான சிலை இந்தியாவில் உள்ளது எனப் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். பாவம் சர்தார் பட்டேல் - பள்ளிக் குழந்தைகள் நினைவுகூர்வதைப் போன்று வழிபடப்படுகிறார். ஆனால் வளரும் இந்தியாவின் உருமுரணான இரும்பு உரம் மிக்க, அவருக்கே உரிய உறுதியும், வலுக்குறைந்த சின்னமாக எண்ணத்தக்க மாபெரும் தலைவர்.

உலகில் மிக உயரமான இச்சிலையைப் பற்றி எண்ணும் அதே நேரத்தில், உலக நாடுகளுள் பல்வேறு மனிதவள மேம்பாடு குறியீடு (Human Development Indexes-HDI)களில் என்ன தரவரிசையில் உள்ளோம் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நாட்டு மக்களின் மருத்துவ நிலை பற்றிய சில நிழற்படங்களைப் பார்க்கலாம். மக்களின் சராசரி வாழ் நாள் காலம் தொடர்பான கணக்கெடுப்பில் இந்தியா மிகவும் தாழ்ந்த கீழ்நிலையில் 224 நாடுகளுள் 164ஆம் இடத்தில் உள்ளது. பாக்கித்தான் இன்னும் கீழ்நிலை யில் என்று ஆறுதல்பட்டுக் கொள்ளலாம். 2016-இல் எலும்புறுக்கி நோய் இந்தியாவைப் பெருமளவுக்குப் பாதித்துள்ளது என்பதுடன் இந்நோய்வாய்ப்பட்ட பெரும் திரளான மக்களுக்கு அந்நோய்க்கான பல்நோக்கு மருந்துகள் எதிர்விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

**சென்ற மூன்றாண்டுகளில், காலராவினால் பாதிக்கப்பட்டு அய்ந்து அகவைக்குக் குறைவான குழந்தைகளின் இறப்பு அளவு இந்தியாவிலும் சிரியாவிலும் 40 விழுக்காடாக இருந்தது. இன்னும் கூடுதலாக 60 விழுக்காடு தொழுதுநோயாளிகள் இந்தியாவில் உள்ளனர்.**

சென்ற இருபது ஆண்டுகளுக்கும் மேலாக விண் ணளவு வளர்ந்து வரும் பொருளாதாரம் என இந்தியா பீற்றிக் கொண்டாலும், உலகப் பசிக் கொடுமை குறி யீட்டில் இந்தியா 119 நாடுகளுள் 103ஆம் இடத்தில் தான் உள்ளது. 2017-இல் நாம்தான் மிகவும் சத்துணவுக் குறைபாடுடைய மக்கள் எண்ணிக்கையைக் கொண்ட வர்களாக இருக்கிறோம். உலகில் மிகப்பெரிய எண்ணிக் கையிலான நலிந்து நறுங்கிப் போன குழந்தைகளைக் கொண்டதாகவும் இந்தியா உள்ளது. **2016-இல் வெளியிடப்பட்டுள்ள புள்ளிவிவரப்படி, இந்திய மக்கள்தான் மிகக் குறைந்த அளவு வளர்ச்சி நிலை உள்ளவர்களாக 101 நாடுகளுள் 90ஆம் இடத்தில் உள்ளோம்.**

இந்தியா ஒரு சுற்றுப்புறச்சூழல் பேரழிவுக்கு உள்ளாகும் நாடாக உள்ளது. உலகில் கடும் மாசடைந்த 15 நகரங் களுள் 14 நகரங்கள் நம் இந்தியாவில்தான் உள்ளன. 2016இல் மாசுக்கேட்டால் உலகின் முதிராச் சாவுகளுள் கால் பங்கு அளவில் 20 இலட்சம் இந்திய மக்கள் முதிராச்சாவடைந்துள்ளனர். மிகுதியான மாசுக்கேட்டின் விளைவால் இந்தியாவில்தான் மிகப்பெரும் எண்ணிக் கையில் அய்ந்து அகவைக்குட்பட்ட குழந்தைகள் இறக் கின்றனர். சுற்றுப்புறச்சூழல் செயல்பாடு குறியீட்டளவில், இந்தியா 180 நாடுகளுள் 177ஆம் இடத்தில் தான் உள்ளது.

நம் நாட்டில் நீர் இருப்பு நிலைமை இரங்கத்தக்க இழிநிலையில் உள்ளது. உலகில் நாம்தான் மிகப்பெரு மளவில் பயன்படுத்திவிட்டோம். 2050-க்குள் ஒருவருக்கான சராசரி நீர் இருப்பு அளவு அச்சுறுத்தும் வகையில் 1140 கன மீட்டர் அளவுதான் இருக்கும். அதாவது நீர் நெருக்கடி விளிம்பு அளவான 1000 க.மீ. அளவுக்குச் சற்றுக் கூடுதல் என்ற நிலையில்தான் இருப்போம். ஆனால் 1950-இல் இந்தியாவில் ஒருவருக்கான நீர் இருப்பு அளவு 5000 க.மீ. அளவில் இருந்தது.

ஒரு சிறப்பான-பொறுப்பான கல்வி முறையை இந்தியா கடைப்பிடிக்குமெனில் அதன் மொத்த நல்விளை வாக நாடு இழிநிலைக்குச் செல்லாது காப்பாற்றிவிட லாம். ஆனால் 2018-இல் நல்வாய்ப்பின்றி இந்தியா மனித மூலதனக் குறியீட்டளவில் 115 நாடுகளுள் 105ஆம் இடத்தில் உள்ளது (இந்தக் கணிப்பை நிலை தடுமாற்றத்திலுள்ள அரசு உடனே மறுதலிக்குமென எதிர்பார்க்கலாம்).

2017இல் 103ஆம் இடத்தில் இருந்த நாம் ஓராண்டில் 12 இடங்கள் சரிவடைந்து நேப்பாளம், இலங்கை நாடுகளுக்கும் கீழ் வந்துவிட்டோம். இருப்பினும் பாக்கித் தான், ஆப்கானித்தான் நாடுகளுக்கு மேலே உள்ளோம் என சற்று ஆறுதல்பட்டுக் கொள்ளலாம்.

நாம், நம் நாட்டுக் கணினி மற்றும் தகவல் தொழில் நுட்பம் துறைகள் குறித்து மீண்டும், மீண்டும் தம்பட்ட

மடித்துக் கொள்கிறோம். ஆனால் தகவல் தொடர்பு (Communication) தொழில்நுட்பம் வளர்ச்சிக் குறியீட்டில் அண்மையில் 176 நாடுகளுள் 134ஆம் இடத்தில்தான் உள்ளோம் என்பதுதான் உண்மை நிலை.

இன்னும் இரு அரசியல் தரவரிசையில் நாட்டின் நிலைமை என்ன என்பதைக் குறிப்பிட்டுவிட்டு இந்த ஓலக் கதையை முடிப்போம். ஊடகவியலாளர்கள் இன்னலுக்குள்ளாக்கப்படுவதை அளவிட்டு வெளியிடும் காப்புறுதிக் குறியீடு உலகின் மிக இழிநிலையிலுள்ள 14 நாடுகளில் மிகவும் மோசமான பதிவுகளுடன் கடை நிலையில்தான் இந்தியா உள்ளது எனச் சுட்டுகின்றது. போர் நிலவும் வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள இராக், ஆப்கானித்தான், பாக்கித்தான் ஆகிய நாடுகளை ஒத்த கீழ்நிலையில் தான் இந்தியா உள்ளது.

சட்டத்தின் ஆட்சிக் குறியீட்டு அளவில் இன்னும் சிறுமையான நிலையில் சனநாயக இந்தியா 132 நாடுகளுள் 62ஆம் இடத்தில் புத்துருப்பெற்ற சனநாயக நேப்பாளம் நாட்டிற்கும் கீழ் நிலையில்தான் உள்ளது.

ஒரு சராசரி இந்தியனின் தரமான வாழ்நிலையை அளவிட சில பொருண்மையான அளவீடுகள் உள்ளன. உண்மை நிலை மிகவும் இழிவாக உள்ளது. பொதுவாக மக்கள் உண்மையாக என்ன நிலையில் உள்ளனர் என்பதை அடுத்த முறை மக்களுக்கான வானொலி உரையில் முதன்மை அமைச்சர் சொல்வதுதான் மெய்யான நல் ஆட்சி முறையையும், அரசியல் நயத்திறத்தையும் வெளிப்படுத்தும் செயலாக அமையும்.

இந்த அரசும், முந்தைய அரசுகளும் ஆண்டுக்கு ஆண்டு பொது மக்களை ஏமாற்றிவிட்டனர். நம்மை ஆண்டவர்கள், நம்மிடம் நம் உண்மையான நிலை குறித்துச் சொல்லாமல் விட்டதுடன், வெற்றுச் சட்டங்களை இயற்றியும், சபரிமலைகள் போன்றவற்றினால் நம்மைத் திசைதிருப்பி விட்டனர்.

நம்மைத் துயரமான, கேடான நிலையில் வைத்துக் கொண்டு, இந்தியா வளருகிறது என மனமறிய பொய் யுரைப்பது மிகவும் நகைப்புக்குரியதாகும். நாட்டின் தற்போதைய நிலைகண்டு நாட்டை ஒருங்கிணைப் பதற்கு அரும்பாடுபட்ட சர்தார் பட்டேல் இப்போது மகிழ்ச்சியுறமாட்டார். அவர் மறைந்து 68 ஆண்டு காலத்திற்குப் பின் உள்ள இன்றைய இந்தியா அவரைத் திகைக்க வைத்துவிடும்.

நன்றி : Times of India

தமிழில் : **இரா. பச்சமலை**

# சமூக நல்லிணக்க முன்னணி



சமூகப் பிரச்சினைகளைத் தட்டிக் கேட்டால் வன் முறை, தாக்குதல், வழக்கு, சிறை, காணாமல் ஆக்கப் படுவது ஆகியவை பரிசாகக் கிடைக்கின்றன. இந்த இழிநிலைகளுக்குத் தீர்வுகாணக் களம் நோக்கிப் பய ணிக்கும் நிகழ்ச்சிதான் சமூக நல்லிணக்கத்திற்கான 100 இளைஞர்களின் சங்கமம், இந்த நிகழ்ச்சி தமிழ் நாட்டின் பலப் பகுதிகளிலும் அந்தந்தப் பகுதி இளை ஞர்கள் 100 பேர் பங்கு பெறும் நிகழ்ச்சியாக நடை பெறுகிறது. இதன் ஒருங்கிணைப்பாளர் தோழர் இனாமுல் அசன் எனும் இளைஞர்.

சமூக மாற்றத்திற்கான 100 இளைஞர்களின் சங்கமம் நிகழ்ச்சி 16.3.2019 காலை 9.30 மணி முதல் மாலை 5 மணிவரை சென்னை எழும்பூரில் உள்ள இக்சா அரங்கில் நடைபெற்றது. இதன் தொடக்க அமர்வில் அருட்தந்தை ஆல்பர்ட் தம்பிதுரை, தியாகி கொடிக்கால் ஷேக் அப்துல்லா, ஓய்வுபெற்ற தேவேந்திர ஓஷா அய்,ஏ.எஸ், ஆகியோர் உரையாற்றினர். இதில் மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் சி.பெரிய சாமி சிறப்புரையாற்றினார்.

# புலவர் தங்க.சங்கரபாண்டியன் இல்ல மணவிழா

அரக்கோணம் தங்கவேலனார்-கண்ணம்மா இணையரின் பெயரனும் தங்க.சங்கரபாண்டியன் சி.மல்லிகா இணையரின் மகனுமான ச.சுரதா அவர்களுக்கும் சென்னை அனகாபுதூர் ஆர்.செய பாலன்-முத்துமாரி இணையரின் மகள் செ.இராகவி அவர்களுக்கும் சென்னை குன்றத்தூர் சுமதி மகாலில் 13.3.2019 புதன் காலை 6 மணிக்குத் திருமண விழா இனிதே நடைபெற்றது.

# தந்தை பெரியாரின் தீவிரப்பற்றாளர்
# அந்தூர் கி. இராமசாமி (வயது 99) நேர்காணல்

பூலாம்பாடி கு. வரதராசன்
கைப்பேசி : 94886 02994

நாள் : 12.12.2018



கு.வரதராசன் : அய்யா, வணக்கம்!

அந்தூர் கி. இராமசாமி : வணக்கம், வாங்க!

கு.வ. : அய்யா, தங்கள் வயது என்ன?

அ.கி.இரா. : என் வயது 99. என் பிறந்த நாள் 07.09.1919.

கு.வ. : அய்யா, தங்கள் குடும்பத்தைப் பற்றிக் கூறுங்கள்.

அ.கி.இரா. : நான் பிறந்த ஊர் பெரம்பலூர் மாவட்டம், அந்தூர் என்னும் சிற்றூராகும். என் தந்தை கிருஷ்ணசாமி. தாய் அலமேலு அம்மாள். விவசாயக் குடும்பம். என் வாழ்க்கைத் துணைவியார் அலமேலு 1999ஆம் ஆண்டு சூன் திங்களில் மறைந்துவிட்டார். என் மக்களின் நல்லாதரவில் வாழ்ந்து வருகிறேன்.

கு.வ. : தங்களுக்கு எத்தனை மக்கள்?

அ.கி.இரா. : மகன்கள் 3 பேர், மகள்கள் 2 பேர், வெற்றி வீரன், சித்தார்த்தன், மதியழகன், அருமைக்கண்ணு, அன்புமணி ஆவர். என் மக்கள் அனைவருக்கும் தந்தை பெரியார் அவர்களே பெயரிட்டார்கள். இவர்கள் அனைவரது திருமணங்களும் சீர்திருத்தத் திருமணங்களாக நடைபெற்றன.

கு.வ. : தாங்கள் எந்த ஆண்டிலிருந்து தந்தை பெரியாரின் சுயமரியாதைக் கருத்துகளில் ஈடுபாடு கொண்டீர்கள்?

அ.கி.இரா. : 1941-இல் திராவிடர் கழகத்தில் இணைந்தேன். நான் 8ஆம் வகுப்பு வரைதான் படித்தேன். 1952 முதல் பெரம்பலூர் வட்டத் திராவிடர் கழகத் தலைவராகச் செயல்பட்டேன். 25 கிளைக் கழகங்களை அமைத்து கிராமந்தோறும் மைக்செட்டும், பெட்ரோமாக்ஸ் விளக்கும் கொண்டு பிரச்சாரம் செய்வோம். ஒரு நாள் வாடகை ரூ.5/- தான். பெரம்பலூர் வட்டத்தில் ஒரு ஆண்டில் சில கூட்டங்களுக்குத் தந்தை பெரியார் அவர்களை அழைத்து நடத்துவோம்.

கு.வ. : தங்களுக்கு உறுதுணையாகக் கூட்டங்கள் நடத்துவதற்கு இருந்தவர்கள் யார்?

அ.கி.இரா. : பெரம்பலூர் வட்டச் செயலாளர் கூடலூர் தி.க. சுப்பையா, இலந்தங்குழி ஆ.செ. தங்கவேலு, கூத்தூர் து. பெரியசாமி ஆகியோர். முருக்கன்குடி தோழர் வே. ஆனைமுத்து அவர்களைத் தலைமைப் பேச்சாளராக வைத்துக் கொண்டு கிராமங்களுக்குச் செல்வோம். மூடநம்பிக்கையொழிப்பு, பார்ப்பனப் புரோகித எதிர்ப்பு சுயமரியாதைத் திருமணம், தீண்டாமை ஒழிப்பு இவற்றை முன்னிலைப்படுத்துவோம்.

கு.வ. : அக்காலத்தில் உங்களுக்கு எதிர்ப்புகள் அதிகமாக இருந்திருக்குமே?

அ.கி.இரா. : தந்தை பெரியாரைக் கொண்டு கூட்டம் நடத்த கிராமங்களுக்குச் செல்லும் போது வழித்தடங்களில் பாறை களையும், மரங்களையும் வெட்டி, சாலையின் குறுக்கே வைத்து ஊருக்கு வரவிடாமல் செய்வார்கள். கழகத் தோழர் களைக் கொண்டு தடைகளை நீக்கி வழித்தடங்களைச் சரிசெய்து வெற்றிகரமாகக் கூட்டம் நடத்துவோம்.

கு.வ. : தந்தை பெரியாரைக் கொண்டு நடத்திய மாநாடுகளைப் பற்றிக் கூறுங்கள்?

அ.கி.இரா. : குன்னத்தில் திராவிடர் கழகப் பற்றாளர் ஆசிரியர் ந. கணபதி பணியாற்றினார். இவர் தோழர் வே. ஆனைமுத்துவின் கொள்கை ஆசிரியருமாவார். இவர்களின் முயற்சியால் தந்தை பெரியார் அவர்களைக் கொண்டு பெரம்பலூர் வட்ட திராவிடர் கழக மாநாடு 1950 ஏப்பிரல் 2இல் நடத்தினோம். இம்மாநாட்டில் பென்னக்குணம் சின்ன அண்ணாமலை, குன்னம் கோ. அம்பாயிரம், சுப்பராயன், இரா. நீலமேகம், ரெங்கசாமி, ஆ.செ. தங்கவேலு, வரகூர் மா. நாராயணசாமி, அகரம் மு. அழகப்பன், அ.மேட்டூர் மே.இரா. சின்னசாமி இப்படி எண்ணற்றோர் இணைந்து இம்மாநாட்டை நடத்தினோம். மாநாட்டில் பங்கேற்றோர் 700 பேர் இருக்கும். அனைவருக்கும் மதியம் கறிப்புலவே உணவு. இங்கு தான் முதல்முதலாகத் தந்தை பெரியார் முன்பு தோழர் வே. ஆனைமுத்து உரை நிகழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. குன்னம் ந. கணபதி

ஆசிரியர், குன்னத்தில் இம்மாநாட்டைச் சிறப்பாக நடத்தியமையால் தந்தை பெரியார் அவர்கள் ஆசிரியரை "வாங்க குன்னம்" என்றே அழைப்பார்கள். 1950-இல் குன்னத்தில் எங்களால் ஊன்றப்பட்ட விதை முளைத்து, தழைத்து, பணைத்து 1962-க்குள் பெரம்பலூர் வட்டம் தி.க. கோட்டை என்கிற அளவுக்குப் பெயர் பெற்றுவிட்டது.

கு.வ. : அய்யா, இதன் பின்னர் நடத்தப்பட்ட பெரம்பலூர் மாநாடு பற்றிக் குறிப்பிடுங்கள்?

அ.கி.இரா. : 1954 ஏப்ரல் 13-இல் குலக்கல்வி எதிர்ப்பு மாநாடு ஆகும். மாநாட்டின் தலைவர் தோழர் வே. ஆனைமுத்து. இந்திய அரசமைப்புச் சட்டம் பற்றி விரிவாகப் பேசினார். தோழர் ஏ.பி. ஜனார்த்தனம், கூடலூர் தி.க. சுப்பையா மற்றும் பலர் கலந்து கொண்டனர். தந்தை பெரியார் அவர்கள் இறுதியாக நீண்ட நேரம் ஆச்சாரியாரின் குலக்கல்வித் திட்டம் கைவிடப்பட வேண்டும் என அரசுக்கு எச்சரிக்கை செய்து விளக்க உரையாற்றினார். இந்தச் சொற்பொழிவு தமிழ்நாடு எங்கும் பெரும் தாக்கத்தை உண்டு பண்ணியது.

கு.வ. : தாங்கள் சாதியொழிப்புப் போராட்டம் பற்றி விளக்குங்கள்?

அ.கி.இரா. : 1957-இல் சாதியொழிப்புப் போராட்டம். இப்போராட்டத்தில் ஈடுபட்டோம்; அரசமைப்புச் சட்ட நகலை தீயிட்டுக் கொளுத்த வேண்டும் எனப் பெரியார் கட்டளையிட்டார். பெரம்பலூர் வட்டத்தில் நாங்கள் சட்ட நகலைத் தீயிட்டுக் கொளுத்திச் சிறை சென்றோம். தோழர்கள் வே. ஆனைமுத்து, கூடலூர் தி.க. சுப்பையா, அம்மாப் பாளையம் கி. நாராயணசாமி, அ.மேட்டூர், மே.இரா. வெங்கடாசலம், கிருஷ்ணசாமி, கூத்தூர் து. பெரியசாமி, கூத்தூர் பொன்னுசாமி எனப் பலரும் கைதானோம். 03.12.1957 முதல் ஒன்றரையாண்டுகள் சிறைவாசம்; தமிழ் நாடெங்கும் 10 ஆயிரம் பேர் சட்ட எரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு 4 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டு இன்னல்களை அனுபவித்தோம். தந்தை பெரியார் அவர்கள் சாதி ஒழிப்புப் போரில் சிறை சென்ற வீரர் களுக்கு அய்யாவின் கையொப்பம் இட்ட நற்சான்றிதழ் 30.03.1959-இல் வழங்கினார். இதில் "சாதிக்குப் பாதுகாப்பு அளிக்கும் அரசமைப்புச் சட்டத்தை எரித்துச் சிறை சென்ற மாவீரர்" எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

கு.வ. : இயக்கத்தில் வேறு தலைவர்களுடன் ஈடுபாடு கொண்டமை பற்றி விளக்குங்கள்?

அ.கி.இரா. : புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், திருவாரூர் கே. தங்கராசு, தி.பொ.வேதாச்சலம், பி.ஏ., சிதம்பரம் கு. கிருஷ்ணசாமி இவர்களிடம் நான் நட்புடன் பழகியதுடன் கூட்டமும் நடத்தியிருக்கிறேன்.

கு.வ. : தந்தை பெரியார், விடுதலை ஆசிரியர் கி. வீரமணி, தோழர் வே. ஆனைமுத்து ஆகியோரின் முழு நம்பிக்கைக்கு மிகவும் பாத்திரமானவர் தாங்கள் ஆனமையால் எங்களால் பெரிதும் பாராட்டப்பட வேண்டியவராக இருக்கிறீர்கள்.

அ.கி.இரா. : மகிழ்ச்சி.

கு.வ. : தற்பொழுது தங்கள் உடல்நிலை எவ்வாறு உள்ளது?

அ.கி.இரா. : எனக்குச் செவித்திறன் பெரிதும் குறைபாடு. ஆயினும் கண் பார்வை நன்றாக உள்ளது. இந்த வயதிலும் படிக்க முடிகிறது.

கு.வ. : அண்மையில் விடுதலை ஆசிரியர் கி. வீரமணி, திராவிடர் கழகத்தின் வாயிலாக 90 வயது கடந்து உயிருடன் உள்ள தோழர்களை, சென்னைக்கு அழைத்துப் பயனாடை போர்த்தி, விருது வழங்கிப் பாராட்டினார். அந்த விருதில் "பெரியார் தொண்டறச் செம்மலுக்குப் பாராட்டு, வாழ்த்து" என அவர்களின் படத்துடன் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அவ்விருது வழங்கும் விழாவிற்குத் தாங்கள் சென்றீர்களா?

அ.கி.இரா. : ஆமாம். எனக்கும் அழைப்பு வந்திருந்தது. ஆயினும் நீண்ட தொலைவுப் பயணம். அய்யா பிறந்த நாளான 17.09.2018 அன்று என்னால் சென்னை சென்று வரஇயலாது எனக் கூறிவிட்டேன். ஆயினும் திராவிடக் கழகப் பெரம்பலூர் நகரத் தலைவர் அக்ரி ஆறுமுகம் அவர்கள் மூலம் விடுதலை ஆசிரியரும் ஆசிரியர் கி. வீரமணி அவர்களால் பாராட்டு - வாழ்த்து மடல் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இதனை எங்கள் மாவட்ட மண்ணின் மைந்தரும் மேனாள் நடுவண் அரசு அமைச்சருமான பெரியார் பற்றாளர், திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் ஆ. இராசா அவர்களின் திருக்கரங்களால் பெரம்பலூர் தி.மு.க. அலுவலகத்தில் 12.12.2018 அன்று முற்பகலில் எனக்குப் பயனாடை அணிவித்து வழங்கினார். என் மகன்கள் சித்தார்த்தன், மதியழகன் ஆகியோருடன் பெயரன் சி. திலீபனும் உடனிருந்து பெற்றுக் கொண்டேன். பூலாம்பாடி கு. வரதராசன், பெரம்பலூர் மாவட்டப் பகுத்தறிவாளர் கழகத் தலைவர் முனைவர் சா. தங்கப்பிரகாசம் நகர தி.க. தலைவர் அக்ரி ஆறுமுகம், மாவட்ட தி.க. தலைவர் சி. தங்கராசு, தி.மு.க. மாவட்டச் செயலாளர் குன்னம் இராசேந்திரன், தி.மு.க. மாவட்டப் பொருளாளர் வாலிகண்டபுரம் செ. இரவிச்சந்திரன், நகர தி.மு.க. செயலர் ம. பிரபாகரன், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் துரைசாமி இராஜ்குமார், தி.மு.க. கொள்கைப் பரப்புத் துணைச் செயலாளர் பெருநற்கிள்ளி, ஓவியச் செம்மல் கி. முகுந்தன், கவிஞர் முத்தரசன் மற்றும் திரளானவர்கள் எனக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

கு.வ. : அய்யா, பெரம்பலூர் வட்டத்தில் திராவிடர் கழகத் தோழர்கள் அல்லாத பிறர் தங்களுக்கு உறுதுணையாக இருந்துள்ளனர். அவர்களில் சிலரைப் பற்றிக் கூறுங்கள்?

அ.கி.இரா. : ஆசிரியர்கள் பலர் உண்டு. வாலிகண்டபுரம் அ. செல்லமுத்து, பூலாம்பாடி கு. வரதராசன், இரூர் ச. இராதாகிருஷ்ணன், ஏ.எஸ். முத்துசாமி, குரும்பலூர் ஓவியர் கி. முகுந்தன், பெரம்பலூர் இளைய பெருமாள் செயபால், ச. செவ்வண்ணன், கு. பாலகிருஷ்ணன், மு. அழகப்பிள்ளை போன்றோர். இவர்களெல்லாம் அக்காலங்களில் சீர்திருத்தத் திருமணங்கள் செய்து கொண்டதோடு அவரவர் ஊர்களில் தந்தை பெரியாரை அழைத்துப் பகுத்தறிவாளர் கழகங்களை ஏற்படுத்தியவர்கள். அவரவர்கள் பணியாற்றிய பள்ளிகளிலும் அய்யா அவர்களை அழைத்து மாணவர் இலக்கிய மன்றங்களில் சொற்பொழிவாற்ற வைத்தவர்கள். பெரம்பலூர்-ஆத்தூர் சாலையில், டயர் வண்டி உற்பத்திக் கடை நடத்திய இராமசாமி தி.க.புரவலர்.

இதில் பெரம்பலூர் இளையபெருமாள் செயபால் அவர்கள் வீடு எங்களுக்கு தங்கும் விடுதியாகும். இங்கு இவருடன் கலந்துரையாடி கழக வேலையாக வெளியில் புறப்படுவோம். கழக ஆர்வமுடைய இளைஞர்களுக்குத் துறைமங்கலம் அரசுப் பயணியர் விடுதியில் தந்தை பெரியார், தோழர் வே. ஆனைமுத்து அவர்களைக் கொண்டு 1965இல் இரண்டு நாள்கள் பயிற்சி வகுப்பு நடத்தினோம். இதில் மேற்கண்ட ஆசிரியர்கள் கலந்து கொள்வார்கள்.

கு.வ. : அய்யாவிடம் இருந்த குறிப்பிட்டுச் சொல்லும்படியான சிறப்பியல்புகளைத் தெரிவியுங்கள்?

அ.கி.இரா. : எத்தனையோ குறிப்பிடலாம். எனக்கு ஏற்பட்ட சில அனுபவங்களைக் குறிப்பிடுகிறேன். நான் பெரம்பலூர் வட்டத்தில் தி.க.தலைவராகப் பொறுப்பேற்ற நாளிலிருந்து அனைத்துக் கூட்டங்களிலும் “எங்கே ராமசாமி?” என்று மறக்காமல் வினவுவார். நான் புலால் உணவு உண்ணாதவன். எனினும் அய்யாவுக்குப் பிடித்தமான வகையில் ஆங்காங்கு அய்யாவுக்குச் சமையல் செய்யும் தோழர் வீட்டிற்குச் சென்று பார்த்துக் கொள்வேன். வாலிகண்டபுரம் அ.உ.ப.யில் தோழர் கு. வரதராசன், ஆசிரியர் கழகச் செயலராக இருந்த போது 29.6.1968-இல் பள்ளியின் இலக்கியமன்றத் துவக்கவிழா நடைபெற்றது. தந்தை பெரியார் சொற்பொழிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார். பள்ளித் தலைமை ஆசிரியர் ஒரு பார்ப்பனர். கூட்ட நிகழ்ச்சி நிரலில் கடவுள் வாழ்த்து என எழுதியிருந்தார். தந்தை பெரியார் அவர்களும் சொற்பொழிவு மேடைக்கு அழைத்து வரப்பட்டார். இயக்கப் பற்றாளர்களால் அனைத்து ஆசிரியர்களுக்கும் குழப்பமான நிலைப்பாடு. ஆயினும் இந்நிகழ்ச்சிக்கு அய்யா அவர்களும் அனைவருடனும் எழுந்து நின்றுவிட்டார்கள்.

இது, அய்யாவின் அவையறிந்து நடக்கும் மாண்புக்கு எடுத்துக்காட்டு. அய்யாவின் சொற்பொழிவு முற்பகல் 12.00 மணியளவில் முடிவுற்றது. என் பார்வையில் ஆசிரியர் கு.வரதராசன் துணைவியார் திருமதி. சின்னப்பெண் அவர்களால் புலால் உணவு சமைக்கப்பட்டிருந்தது. அதனை நான் பெற்றுக்கொண்டேன். அன்று பிற்பகல் 2 மணியளவில் அரியலூர் அரசுப் பயணியர் விடுதியில் அய்யா அவர்கள் அதனைச் சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டே, “யார் சமைத்தது? ரொம்ப நல்லாயிருக்கு, ரொம்ப நல்லாயிருக்கு” என்று என்னைக் கேட்டார்கள். நான் ஆசிரியர் வரதராசன் அவர்களின் துணைவியார் சமைத்தது என்று சொன்னேன். அய்யா “மிக்க மகிழ்ச்சி” என்று பாராட்டினார்கள். அய்யாவின் பாராட்டைப் பெற்ற குடும்பம்.

கு.வ. : பெரம்பலூர் மாவட்டத்தில் தங்கள் சாதனையாக எதனைக் கருதுகிறீர்கள்?

அ.கி.இரா. : சுயமரியாதைத் திருமணம் சட்ட வடிவம் பெறுவதற்கு முன்பே பல்வேறு எதிர்ப்புகளை மீறிப் பலருக்கும் திருமணம் நடத்தியுள்ளேன். 300-க்கும் மேற்பட்ட திருமணங்கள் என் தலைமையில் நடைபெற்றுள்ளன. 1954-இல் என் சொந்த ஊரில் கலை நிகழ்ச்சி நடத்திச் சமபந்தி விருந்து நடத்தியுள்ளேன்.

தீண்டாமை விலக தேநீர்க் கடைகளில் இரட்டைக்குவளை முறையை ஒழிக்க எனது தோழர்களுடன் கிராமம் தோறும் சென்று பரப்புரை செய்தோம். 1977-இல் என் மூத்த மகன் வெற்றி வீரன்-விசயலட்சுமிக்கு, ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் தலைமையில் பெரம்பலூரில் இரவு 8.00 மணிக்குத் திருமணம் செய்வித்தேன். “விடுதலை, உண்மை, சிந்தனையாளன்” போன்ற நாளிதழ் மற்றும் மாத இதழ்கள் தோழர்கள் பலரிடம் சந்தா பெற்று வழங்குவேன். அக்காலத்தில் சாலை வசதி போக்குவரத்து வசதியற்ற நாள்களில் கால்நடையாகவும், பட்டினி, பசியுடன் முனைப்பாகத் தோழர்களுடன் பணியாற்றியுள்ளேன். பெருந்தலைவர் காமராசர் ஆட்சி நிலைக்க பல மாதங்கள் பட்டிதொட்டியெங்கும் அய்யாவின் கட்டளையை ஏற்று அல்லும் பகலும் கைம்மாறு கருதாமல் கண்துஞ்சாது தோழர் வே. ஆனைமுத்துவுடன் பரப்புரை செய்தோம். சிலமுறை அய்யாவுடன் வேனில் சென்று தேர்தல் காலங்களில் கூட்டங்கள் நிகழ்த்துவோம். அக்காலத்தில் காசு, பணம், எதிர்பாராமல் தோழர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட்டனர்.

கு.வ. : தாங்கள் பெருந்தலைவர் காமராசர் ஆட்சிக்குப் பின்னர் ஏற்பட்ட அறிஞர் அண்ணாவின் அரசு செயல்பாட்டைத் தெளிவுபடுத்துங்கள்?

அ.கி.இரா. : 1967-இல் திராவிட முன்னேற்றக் கழகம் அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சியமைக்கும் தகுதி பெற்றதும், அறிஞர் அண்ணா அவர்கள் முதல்வர் பதவியேற்கும் முன் திருச்சி பெரியார் மாளிகை வந்து தந்தை பெரியாரிடம் வாழ்த்துப் பெற்றார். இதன் பின்னர் அய்யா அவர்கள் அறிஞர் அண்ணாவின் அரசை ஆதரிக்குமாறு விடுதலையில் அறிக்கை வெளியிட்டார். இக்காலக் கட்டத்தில் அய்யாவின் அறிக்கை எங்களுக்குக் கசப்பாகவும் சில நாள்கள் மனம் ஒன்றாமலும் திராவிடர் கழகத் தோழர்கள் இருந்தோம். அண்ணா, இராஜாஜியின் சுதந்தராக் கட்சியுடன் இணைந்து விடுவாரோ என்ற அச்சம் தோழர்களுக்கு. ஆனால் தேர்தல் முடிவு வந்தவுடன் இராஜாஜிக்கும், தங்களுக்கும் ஆன தேனிலவு முடிந்து விட்டது என அண்ணா சொன்னார். சட்டமன்றத்தில் "இந்த அமைச்சரவையே தந்தை பெரியாருக்குக் காணிக்கை" என்றார். சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம், சுயமரியாதைத் திருமணம் சட்டப்படி செல்லும் என்னும் தீர்மானம், இந்தி ஒழிப்புத் தீர்மானம் என இம்மூன்றும் அறிஞர் அண்ணாவின் சாதனைகளாகும்.

கு.வ. : அறிஞர் அண்ணாவிற்குப் பின்னர் கலைஞர் மு. கருணாநிதியின் அரசு செயல்பாடு பற்றி.

அ.கி.இரா. : பெண்ணுரிமை பற்றி அய்யா தன் வாழ்நாள் முழுக்கப் பேசி வந்தார். "பெண் ஏன் அடிமையானாள்?" என்ற விளக்க நூலையும் வெளியிட்டார். அய்யாவின் கொள்கைப் பற்றாளரான டாக்டர் கலைஞரும் பெண்களுக்கு இடஒதுக்கீடு, பெண்களுக்குச் சொத்தில் சம பங்கு, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் எனச் சட்டம் கொண்டு வந்தார். பெரியார் நினைவு சமத்துவப்புரங்கள் உருவாக்கினார். தந்தை பெரியாரின் கொள்கைகளை வாக்கு வங்கி அரசியலில் பக்குவமாகக் கையாண்டு வந்தார் என்பதுதான் உண்மை. இந்தியப் பிரதமர் வி.பி. சிங் ஆட்சியில் டாக்டர் கலைஞர், தோழர் வே. ஆனைமுத்து, ஆசிரியர் கி. வீரமணி போன்றோரின் உந்துசக்தியால் இந்திய ஒன்றிய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இடஒதுக்கீடு கிடைக்கப் பெற்றது மிகவும் பாராட்டுக்குரியது. திராவிடர் இயக்கத்தின் மூத்த தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மறைவுற்றது தமிழ் மக்களுக்குப் பெரும் இழப்பாகும். பகுத்தறிவுச் சமதர்மச் சமுதாயம் கல்வி முறையில் மாற்றம் இவரைப் போன்று அரசோச்சி யாராலும் நடைமுறைப்படுத்த முடியாது.

கு.வ. : நடப்பில் உள்ள இந்திய மற்றும் மாநில அரசின் செயல்பாடுகள் பற்றிக் கூறமுடியுமா?

அ.கி.இரா. : என்னால் தெளிவாகக் கூற இயலவில்லை. நடப்பு சங்கதிகள் எதுவும் தெரியாது. செவித்திறன் முக்காலும் இல்லை. ஆயினும் அப்போதைக்கப்போது செய்தித்தாள்களில் உள்ள பெரிய எழுத்துக்கள் மற்றும் பெயரன் திலீபன் உரக்க எனக்கு எடுத்துக்கூறும் செய்திகள் மூலம் மீண்டும் அய்யாவின் காலத்தை விடப் பன்மடங்கு பார்ப்பன ஆதிக்கம் தலைதூக்கியுள்ளது அறிகிறேன். இதற்கு ஆட்சியாளர்களே காரணம். அரசுக் கட்டடம் திறப்பு விழா, சாலைப் பணித் துவக்கம் என அனைத்திலும் பார்ப்பனப் புரோகிதர்களை வைத்துச் சடங்கு பன்மடங்கு செய்வது மலிவாக நடக்கிறது. மந்திரிமார்கள் அனைவரும் தங்கள் கைகளில் பல்வேறு நிறக் கயிறுகளைக் கட்டிக்கொண்டும் நெற்றியில் விபூதிப்பட்டையும் குங்குமமும், ஒற்றைச் சிவப்பு நாமமும் தரித்திருப்பதைத் தொலைக்காட்சி வாயிலாகப் பார்க்கிறேன். இது திராவிடர் இயக்க ஆட்சியென்றோ அண்ணாவின் பெயர் கொண்டு ஆட்சி நடத்துபவர்கள் என்றோ கூறமுடியாது. தோழர் ஆனைமுத்து, ஆசிரியர் வீரமணி என் போன்ற வயது மூப்பு அடைந்துவிட்டனர். படித்த இளைஞர்கள் சிந்தித்து மூடநம்பிக்கைகளை ஒழித்துச் செயல்பட வேண்டும். நடப்புக் காலம் அறிவியல் மற்றும் கணினி மயக்காலம். படித்த ஆண், பெண் இருபாலரும் அறிவியல் பார்வையுடன் இருக்க வேண்டும். இன்று பெண்கள் கல்வி, உத்தியோகங்கள் பெற்றுள்ளமை அய்யா உயிருடன் இருந்தால் பெரு மகிழ்ச்சியடைந்திருப்பார் (என்று கூறும் போது நாதழுதழுத்து பெருமூச்சு விடுகிறார்...).

கு.வ. : அய்யா, தங்களுடன் நீண்ட நேரம் உரையாடிவிட்டேன். முடிவாக என்ன கூறுகிறீர்கள்?

அ.கி.இரா. : பெரியார் கருத்துக்கள் கொண்ட சிறு, சிறு புத்தகங்கள் மலிவு விலையில் பல நூறு புத்தகங்கள் வெளி வந்துள்ளன. இதனை இன்றைய இளைஞர்கள் படித்து அதன் வழி நடந்து சாதி ஆதிக்கமற்ற சமுதாயம் காண முற்பட வேண்டும். சிந்தனையாளன் 2019 பொங்கல் மலருக்காக என்னை இன்று நேர்காணல் கண்டதற்கு வரதராசனுக்கு நன்றி.

கு.வ. : தங்களின் அகவை முதிர்வு, செவித்திறன் குறைபாடு ஆனாலும் கண்பார்வை நன்றாக உள்ளது. வினாக்களை எழுதிக்காட்ட முடிந்த வரை தாங்கள், பொறியியல் கல்லூரியில் பயிலும் தங்கள் பெயரன் சி. திலீபன், மகன்கள் சித்தார்த்தன், மதியழகனுடன் பகிர்ந்து கொண்டதற்கு நன்றி! வணக்கம்!

அ.கி.இரா. : வணக்கம், நன்றி!

(இந்தச் செவ்வி அனைத்தும் 12.12.2018 அன்று முற்பகல் அக்ரி ஆறுமுகம் - மருத்துவர் குணகோமதி இணையர் இல்லத்தில் நடைபெற்றது. அந்தூர் கி. இராமசாமியின் மகன்கள் சித்தார்த்தன், மதியழகன், பெயரன் சி. திலீபன் முன்னி லையிலும், பெயர்த்தி சி. அற்புதா, முனைவர் சா. தங்கப்பிரகாசம் அவர்கள் எழுதி வைத்திருந்த குறிப்புகளின் அடிப்படையில் நடைபெற்றது).

# பழங்குடியினரின் வாழ்வுரிமையைப் பறிக்கும் உச்சநீதிமன்றத் தீர்ப்பு

- செங்கதிர்

காக்க வேண்டிய கைகளே கழுத்தை நெரிப்பது போல் கடந்த பிப்பிரவரி 13 அன்று உச்சநீதிமன்றம், இருபது இலட்சம் மலைவாழ் மக்களை அவர்களின் வாழ்விடங் களிலிருந்து சூலை 24-க்குள் வெளியேற்ற வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு ஆணையிட்டது. அரசமைப்புச் சட்டமும், 2006-ஆம் ஆண்டின் காடுகள் மீதான உரிமைச் சட்டமும் பழங்குடியினருக்கு வழங்கியுள்ள பாதுகாப்புக் கூறுகளைக் கருத்தில் கொள்ளாமல், மேட்டிமை மனப்போக்கில் உச்சநீதி மன்ற நீதிபதிகள் அருண் மிஸ்ரா. நவீன் சின்கா. இந்திரா பானர்ஜி ஆகியோரைக் கொண்ட அமர்வு இந்த ஆணையைப் பிறப்பித்தது. சூலை 24-க்குள் வெளியேற்றாவிட்டால் தலைமைச் செயலாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆளும் வர்க்கத்தின் குரலாக உச்சநீதிமன்றம் எச்சரிக்கை விடுத்தது.

2008ஆம் ஆண்டு "வொயில்டுலைப் பஸ்ட்" (Wildlife First), இயற்கைப் பாதுகாப்புச் சங்கம், புலிகள் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளை, ஓய்வுபெற்ற வனத்துறை அதிகாரிகள் உள்ளிட்ட ஒன்பது அமைப்புகள் 2006ஆம் ஆண்டின் காடுகள் மீதான உரிமைச் சட்டத்திற்குத் தடை விதிக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தன. இந்த வழக்கில்தான் பிப்பிரவரி 13 அன்று உச்சநீதிமன்றம் பழங்குடிகளை வெளியேற்ற வேண்டும் என்கிற ஆணையைப் பிறப்பித்தது.

மன்னர் ஆட்சிக்காலம் வரையில் பழங்குடியினர் அரசினர் தலையீடு இல்லாமல் அமைதியாக வாழ்ந்து வந்தனர். காலங்காலமாகப் பழங்குடியினரின் உடைமை யாக இருந்த மலைகளும் காடுகளும் பிரித்தானிய ஆட்சி நிறுவப்பட்ட பின் அரசின் உடைமையாகக் கருதப்பட்டன. பிரித்தானியருடன் வந்த முதலாளிய உற்பத்தி முறையின் தேவைக்காக, பெரும் பரப்பில் காடுகள் அழிக்கப்பட்டன; நிலக்கரி, இரும்பு போன்றவற்றுக்காகச் சுரங்கங்கள் தோண் டப்பட்டன. ஆயினும் பழங்குடியினரின் மரபான வாழ்க்கை முறைக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்படவில்லை.

ஆனால் சுதந்தர இந்தியாவில் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதி காடாக இருக்க வேண்டும் என்ற கொள்கை வகுக்கப்பட்டதால், பழங்குடியினர் தொன்றுதொட்டுப் பயன் படுத்தி வந்த நிலப் பகுதிகளை அரசு கையகப்படுத்தியது. மரங்களே இல்லாத நிலப்பகுதிகளும் காடுகள் என்று அரசால் வகைப்படுத்தப்பட்டன. இவ்வாறு பல்லாயிரம் கிலோ மீட்டர் பழங்குடியினர் நிலம் அரசால் கைப்பற்றப்பட்டது. மேலும் 1972-ஆம் ஆண்டின் வன உயிர்கள் பாதுகாப்புச் சட்டம், 1980-இல் காடுகள் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின் பெயரால் மலைவாழ் மக்களின் நிலங்கள் அரசால் கையகப்படுத் தப்பட்டன. பல நூற்றாண்டுகளாக-தலைமுறை தலைமுறை யாக காடுகளில் வாழ்ந்த பழங்குடியினரிடம் அவர்கள் பயன் படுத்தி வந்த நிலம் அவர்களுக்குச் சொந்தமானது என்பதற் கான எந்த ஆவணமும் இல்லை என்பதால் அரசின் நிலப் பறிப்பைத் தடுக்க முடியவில்லை; ஆனால் பல இடங்களில் நிலப்பறிப்புக்கு எதிராகப் பழங்குடிகள் போராட்டங்கள் நடத்தினர்.

மேலும் சுதந்தரம் பெற்ற பின் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் கனிம வளங்களுக்காகச் சுரங்கங்கள் தோண்டப் பட்டன; பலவகையான தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன; பெரிய அணைகள் கட்டப்பட்டன; மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டன. இவற்றால் பெரும் பரப்பளவில் காடுகள் அழிக்கப்பட்டன. அதனால் பழங்குடியினரும் பிற மலைவாழ் மக்களும் அவர்களின் வாழ்விடங்களிலிருந்து அரசின் காவல்துறையால் பல இலட்சம் பேர் வெளியேற்றப்பட்டனர்.



பழங்குடியினரல்லாத மலைவாழ் மக்கள்

தங்களின் வாழ்விடத்தையும், நிலத்தையும் வாழ்வாதாரத் தையும் இழந்த மலைவாழ் மக்களுக்கு மாற்று நிலமோ, வாழ்வாதாரமோ உரிய முறையில் வழங்காமல் அரசுகள் வஞ்சித்தன.

குறிப்பாக 1990 முதல் தாராள மயம், தனியார் மயம், உலக மயம் எனும் கொள்கையை அரசுகள் செயல்படுத்தத் தொடங்கிய பின் காடுகளும், மலைகளும், அவற்றின் நிலங் களும் அரசின் உதவியுடன் வளர்ச்சி என்கிற பெயரால் பன்னாட்டு நிறுவனங்களாலும் இந்திய முதலாளியப் பெருங் குழுமங்களாலும் சுரண்டலுக்கும் கொள்ளைக்கும் இலக்காகி வருகின்றன. இதை எதிர்த்துப் பல பகுதிகளில் பழங்குடியினர் தொடர்ந்து போராடி வருகின்றனர். சில இடங்களில் மாவோயிஸ்டுகளின் துணையுடன் போராடுகின்றனர்.

பழங்குடியினரின் இத்தகைய தீவிரமான தொடர் போராட்டங்களின் விளைவாக, இந்திய அரசு 2006ஆம் ஆண்டு ''பட்டியல் பழங்குடியினர் மற்றும் மரபாக மலைவாழ் மக்களின் காடுகள் மீதான உரிமைச் சட்டத்தை'' (Scheduled Tribes and other Traditional Forest Dwellers (Recognition of Forest Rights Act, 2006)) இயற்றியது. இச்சட்டம் காலங் காலமாகப் பழங்குடியினருக்கும் மலைவாழ் மக்களுக்கும் இழைக்கப்பட்டு வந்த அநீதிகளைக் களைவதாக அமைந் துள்ளது. வனத்துறை, வருவாய்த்துறை, காவல் துறை அதிகாரிகள் பழங்குடியினர் மீது நிகழ்த்தி வந்த கொடுமை களுக்கு ஒரு முடிவு காண்பதற்கான வழிவகை இச்சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ளது.

**தலைமுறை தலைமுறையாக வனத்தில் வாழ்ப வர்கள் வனச்சிறு மகசூலான சீமார்புல், தேன், நெல்லி, கடுக்காய், பூச்சக்காய், புளி, மூங்கில் (ஒருமுறை அறுவடை செய்தால் மீண்டும் வளரக் கூடியவை) போன்ற பொருள்களை அறுவடை செய்து பயன் படுத்திக் கொள்ளும் உரிமையை இச்சட்டம் வழங்கு கிறது. வேளாண்மை செய்து வந்த வனநிலத்துக்கான நிலப்பட்டாவைத் தனிநபர் பெறும் உரிமையையும், சமூக நிலையில் காட்டின் மீதான கூட்டு உரிமை பெறும் உரிமையையும் இச்சட்டம் அளிக்கிறது.**

இச்சட்டம் வழங்கும் உரிமைகளைப் பட்டியல் பழங்குடி யினர் மற்றும் 2005 திசம்பர் 13-க்குமுன் 75 ஆண்டுகள் தொடர்ந்து மலைப்பகுதியில் நிலத்தைச் சொந்தமாக வைத் திருந்தவர்கள் ஆகியோர் மட்டுமே பெற முடியும். இவர்கள் தங்கள் நிலத்துக்குத் தனிப்பட்டாவாகவும், குழுப் பட்டாவாக வும் பெறலாம். இதற்கான வழிமுறைகள் 2008ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டன.

அதன்படி, ஒரு குறிப்பிட்ட வனப்பகுதியைப் பயன்படுத்தி வாழ்ந்து வருகின்ற பழங்குடி ஆண்கள், பெண்கள் அனை வரையும் உறுப்பினராகக் கொண்ட கிராம சபை அமைக்கப் பட வேண்டும். அக்கிராம சபை 15 பேரை உறுப்பினராகக் கொண்ட தலைவர், செயலாளர் உள்ளடக்கிய வன உரிமைக் குழுவைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இக்குழுவில் 5 பெண்கள் கட்டாயம் இடம்பெற்றிருக்க வேண்டும்.

கிராம சபை உறுப்பினர்கள் தங்களது நிலத்துக்கான பட்டா வழங்கக் கோரும் விண்ணப்பங்களை வன உரிமைக் குழுவிடம் அளிக்க வேண்டும். வன உரிமைக்குழு அவற்றை ஆய்வு செய்து கிராம சபைக்கு அனுப்ப வேண்டும். கிராம சபை கூடி அவை குறித்து விவாதித்து, தீர்மானம் நிறை வேற்றி, அவற்றை உட்கோட்டக் குழுவுக்கு அனுப்ப வேண்டும். உட்கோட்டக் குழுவில் கோட்டாட்சியர், வனத்துறை அலுவலர், பழங்குடி நலத்துறை வட்டாட்சியர், பழங்குடி பஞ்சாயத்து உறுப்பினர்கள் மூன்று பேர் இடம் பெற்றிருப்பார்கள். பஞ்சாயத்து உறுப்பினர்கள் மூவரில் ஒரு பெண் இருக்க வேண்டும். கிராம சபை அனுப்பிய தீர்மானத்தை உட்கோட்டக் குழு ஆய்வு செய்ய வேண்டும். கிராம சபையின் தீர்மானத் தில் குறைபாடுகள் இருப்பின் அதைச் சரி செய்யுமாறு கிராம சபைக்கு அனுப்ப வேண்டுமே தவிர, உடனடியாக நிரா கரிக்கக் கூடாது. உட்கோட்டக் குழு தன் பரிந்துரையை மாவட்டக் குழுவுக்கு அனுப்ப வேண்டும். மாவட்டக் குழு ஒப்புதல் அளித்த பின் தனிநபர் பட்டா, குழுவிற்கான பட்டா வழங்கப்படும்.

**இத்தன்மையில் 16 மாநிலங்களில் 23 இலட்சம் கோரிக்கை விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டுள்ளன; அதே சமயம் நிலப்பட்டா கோரும் 20 இலட்சம் விண்ணப் பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. விண்ணப்பம் நிராகரிக் கப்பட்டவர்களை மலையகப் பகுதிகளிலிருந்து சூலை 24-க்குள் வெளியேற்ற வேண்டும் என்று உச்சநீதி மன்றம் பிப்பிரவரி 13 அன்று ஆணையிட்டுள்ளது. இதற்குமுன் 2016 சனவரி 29 அன்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் செலமேசுவரர், ஏ.எம். சாப்ரே, அமிதவ ராய் ஆகியோர் கொண்ட அமர்வு, நிலப்பட்டா கோரிக்கை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டவர்களை அவர்களின் வாழிடங்களிலிருந்து அகற்ற வேண்டும் என்று ஆணை யிட்டது. 2018 மார்ச்சு 7 அன்று உச்சநீதிமன்ற நீதி பதிகள் மதன் பி. லோகூர், கூரியன் ஜோசப், தீபக் குப்தா ஆகியோரும் இந்த கருத்தை வலியுறுத்தினர். இம்மூன்று அமர்வுகளில் இருந்த நீதிபதிகள், 2006 ஆம் ஆண்டின் காடுகள் மீதான உரிமைச் சட்டப்படி கடையருள் கடையராக வாழும் மலையக மக்களுக்கு உரிய நியாயம் பெற்றுத் தருவதற்கு மாறாக, மேட்டுக் குடி மனப்போக்குடன், மாநில அரசுகள் அளித்த புள்ளிவிவரத்தை எந்த ஆய்வுக்கும் உட்படுத்தாமல் வெளியேற்ற ஆணைகளைப் பிறப்பித்தது ஒடுக்கப் பட்ட மக்களுக்கு இழைத்த மாபெரும் அநீதியாகும்.**

நிலப்பட்டா கோரிக்கை விண்ணப்பங்களை நிராகரித்த தில் 2006ஆம் ஆண்டின் காடுகள் மீதான உரிமைச் சட்டத்தின் நடைமுறைகள் முறையாகப் பின்பற்றப்பட்டனவா என்கிற கேள்வியை நீதிபதிகள் எழுப்பவில்லை. நிலப்பட்டா கோரிக்கை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டது குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவிக்கவில்லை. அதனால்

அவர்களுக்கு மேல் முறையீடு செய்யும் வாய்ப்பு மறுக்கப் பட்டது. மேலும் நிராகரிக்கப்பட்டதற்கான காரணம் குறிப்பிடப் படவில்லை. பெரும்பாலான இடங்களில் கிராம சபை, உட்கோட்டக் குழு, மாவட்டக் குழு ஆகியவை முறையாக அமைக்கப்படவில்லை; அமைக்கப்பட்ட இடங்களிலும் அவை முறையாக இயங்கவில்லை. இந்த உண்மைகளை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கருத்தில் கொள்ளாமல் வெளியேற்ற ஆணையைப் பிறப்பித்தது, பல இலட்சம் மலையக மக்களின் மனித உரிமையை மீறிய செயலாகும்.

**பிப்பிரவரி 13 அன்று உச்சநீதிமன்றம் வழங்கிய வெளியேற்ற ஆணையை எதிர்த்து மலைவாழ் மக்கள் போராட்டங்களை நடத்தினார்கள். மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் இந்தியாவில் மட்டுமின்றி உலக அளவில் தங்கள் கண்டனத்தைப் பதிவு செய்தனர். நாடாளுமன்றத்துக்கு ஏப்பிரல்-மே மாதங்களில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், மலையக மக்களின் போராட்டம் தனக்கு எதிராக அமையும் என்ற அச்சத் தால் பா.ச.க. அரசு பிப்பிரவரி 28 அன்று உச்சநீதி மன்றத்தில் இந்த ஆணையை நிறுத்தி வைக்குமாறு விண்ணப்பித்தது. பிப்பிரவரியில் முதல் கிழமையில் நடந்த இறுதி விசாரணையின் போது நடுவண் அரசின் வழக்குரைஞர்கள் எவரும் உச்சநீதிமன்றத்திற்கே வராமல் ஓடி ஒளிந்து கொண்டது ஏன்?**

பிப்பிரவரி 28 அன்று உச்சநீதிமன்றத்தில் நடுவண் அரசின் தலைமை வழக்குரைஞர் துசார்மேத்தா, “மலையகப் பகுதியிலிருந்து எவரையும் வெளியேற்றுவதற்கு முன் நிலப்பட்டா கோரிய விண்ணப்பங்கள் எந்த அடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட்டன என்கிற நடைமுறையை மாநில அரசுகள் உச்சநீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டும். விண் ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்பட்டது குறித்த தகவலும், ஏன் தள்ளுபடி செய்யப்பட்டது என்கிற காரணமும் விண்ணப்பித்த வர்களுக்குத் தெரிவிக்காமல் - அவர்கள் மேல் முறையீடு செய்வதற்கான வாய்ப்பை வழங்காமல் - அவர்களை வெளி யேற்றுவது அநீதியாகும்” என்று வாதிட்டார். அப்போது நீதிபதி மிஸ்ரா நடுவண் அரசு கடந்த மூன்று ஆண்டுகளாகத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்துவிட்டு இப்பொழுதுதான் விழித்துக் கொண்டதா? என்று கேட்டார்.

நடுவண் அரசு, நிலப்பட்டா கோரிக்கை விண்ணப் பங்கள் தள்ளுபடி செய்யப்பட்டதற்கான பழியை மாநில அரசுகள்மீது போட்டது. அதையே ஆதாரமாகக் கொண்டு உச்ச நீதிமன்றம், விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்பட்டதற் காகப் பின்பற்றப்பட்ட நடைமுறை குறித்து சூலை 12-க்குள் மாநில அரசுகள் அறிக்கை அளிக்க வேண்டும் என்று கூறி பிப்பிரவரி 13 அன்று பிறப்பித்த ஆணையை நிறுத்தி வைப்பதாக அறிவித்தது.

**2006-இன் வன உரிமைச் சட்டம் கிராம சபை களுக்கு விரிவான அதிகாரங்களை வழங்கி யுள்ளது. அவர்களின் நிலவுரிமைக்கும் காடுகள் மீதான உரி**



பழங்குடி இனப் பெண்கள்

**மைக்கும் அவர்களையே பொறுப்பா ளர்களாக ஆக்கி யுள்ளது. எனவேதான் ஒடிசாவில் நியாம்கிரி மலைப் பகுதியில் பாக்சைட் கனிமத்தைத் தோண்டி எடுத்து அலுமினியத் தொழிற்சாலை அமைப்பதற்கான வேதாந்தா நிறுவனத் தின் 170 பில்லியன் டாலர் திட்டத்தை எதிர்த்துப் பழங்குடிகள் தீரமுடன் போராடிய போது, 2013-இல் உச்சநீதிமன்றம் இத்திட்டம் குறித்து முடிவு செய்யும் அதிகாரத்தை கிராம சபைகளிடம் ஒப்படைத் தது. நியாமகிரி மலைப் பகுதியையொட்டி யிருந்த 12 கிராம சபைகளிலும் வேதாந்தா திட்டத்திற்கு எதிராகத் தீர்மானம் இயற்றப்பட்டது. அதனால் அத்திட்டம் கை விடப்பட்டது.**

எனவே 2006ஆம் ஆண்டின் காடுகள் மீதான உரிமைச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை, உரிமைகளைப் பழங்குடியினர் பெறுகின்ற வகையில் உச்சநீதிமன்றம் தன் தீர்ப்பை மீளாய்வு செய்ய வேண்டும். காடுகள் மீதான உரிமைச் சட்டம் பிரிவு 4(5) முறையான நடைமுறையைப் பின்பற்றாமல் எவரையும் வெளியேற்றக் கூடாது என்று திட்டவட்டமாகக் கூறுகிறது. மலையகத்தில் வாழும் ஒருவர் தன் துண்டு நிலத்திற்காக பல இலட்சம் உருபா செலவு செய்து உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க முடியாது. இவர் களுக்கான நியாயத்தை உச்சநீதிமன்றம் வழங்கக் கடமைப் பட்டுள்ளது.

**மலையக மக்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியைக் களைந்திட மாநில அரசுகளும் நடுவண் அரசும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனித உரிமை அமைப்புகளும் பொது மக்களும் அழுத்தம் தர வேண்டும். வெளியேற்றப்படுவோம் என்கிற பழங்குடிகளின் அச்சத் தைப் போக்கிட நடுவண் அரசு உடனடியாக அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்க வேண்டும்.** ●

## தில்லியில் 40 ஆண்டுகளுக்கு முந்தைய நம் சாதனைகளைத் திரும்பிப் பாக்கும் புதுதில்லி பெரியார் - அம்பேத்கர் தொண்டு நிறுவனத் தோழர்களுக்குப் பாராட்டு

அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவை சார்பில், புதுதில்லியில் 1979 மார்ச்சு 23ஆம் நாள், பெரியார் நூற்றாண்டு விழா, பிற்படுத்தப்பட்டோருக்கு மய்ய அரசின் கல்வியிலும் வேலையிலும் இடஒதுக்கீட்டுக் கோரிக்கைப் பேரணி மற்றும் பெரியாரின் கட்டுரைகளும் பேச்சுகளும் அடங்கிய இந்தி மொழிபெயர்ப்பு நூலின் வெளியீட்டு விழா ஆகிய முப்பெரும் நிகழ்வுகள் நடைபெற்றன. அதன் 40 ஆண்டு நிறைவை இன்றைய தலைமுறையினர் அறிந்திடும் வகையில், புதுதில்லி பெரியார் - அம்பேத்கர் தொண்டு நிறுவனம் 2019 மார்ச்சு 23ஆம் நாள் மாலை புதுதில்லியில் ஒரு சிறப்புக் கூட்டத்தை நடத்துவதையும், அதில் ஒடுக்கப்பட்டோர் பேரவையின் பொதுச் செயலாளர் கலச. இராமலிங்கம் கலந்துகொள்வதையும் வரவேற்று, பெரியார் - அம்பேத்கர் தொண்டு நிறுவனத் தோழர்களை மனமாரப் பாராட்டி மகிழ்கிறேன்.

வே. ஆனைமுத்து

**20.03.2019**

- **வே. ஆனைமுத்து**, புரவலர் - தலைவர்

THE THINKER 14—4—79 சிந்தனையாளன்

# டில்லி மாநகரில்,

## 23-3-79ல்

- அனைத்திந்தியப் பேரவை-பெரியார் சமஉரிமைக் கழகம் நிகழ்த்திய வரலாற்றுச் சிறப்புமிக்க :
- பழமைவாதிகளைக் கலக்கிய - தந்தை பெரியார் நூற்றாண்டு விழா !
- தந்தை பெரியார், டாக்டர் லோகியா, டாக்டர் அம்பேத்கார், ஸ்ரீ நாராயண குரு கொள்கைகளை முழக்கிய வடவர் - தென்னவர் திரண்ட மாபெரும் ஊர்வலம் !
- டில்லியைக் குலுக்கி எடுத்த. ஒடுக்கப்பட்டோர் பேரணி !
- வடபுலத்தை ஈர்க்கும் - "பெரியார் சிந்தனைகள்" அடங்கிய இந்தி நூல் வெளியீட்டு விழா !

அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர். பழங்குடியினர், சிறுபான்மையினர் பேரவை சார்பில் புது டில்லியில், போட் கிளப் மைதானத்தை வந்தடைந்த சுமார் 25 ஆயிரம் மக்கள் கொண்ட பேரணியை, 23—3—79 பிற்பகல் 3-30 மணி அளவில், இந்தியத் துணைப் பிரதமர் திரு. ஜெகஜீவன் ராம் அவர்கள் வரவேற்றுத் துவக்க உரை ஆற்றினார். பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் நூற்றாண்டு விழாவையும் துவக்கி வைத்து திரு. ஜெகஜீவன் ராம் உரையாற்றினார்.

விழா நிகழ்ச்சிகளுக்குத் தோழர் வே. ஆனைமுத்து தலைமை தாங்கினார்.

பிற்படுத்தப்பட்டோர் தாழ்த்தப்பட்டோர் உரிமைப் பேரணியில் பங்குகொள்ளவேண்டி ஆண்களும் பெண்களுமாக 25 ஆயிரம் மக்கள் கேரளா, கர்நாடகம், தமிழகம், ஆந்திரம், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், பீகார், ஒரிஸ்ஸா, பஞ்சாப், அரியானா, அஸ்ஸாம் முதலான மாநிலங்களிலிருந்து வருகை தந்திருந்தனர்.

பழைய டில்லியில் டில்லி கேட் என்கிற இடத்தை அடுத்துள்ள ஃபெரோஸ்ஷா கோட்லா கிரவுண்டு என்கிற மைதானத்தில் 22—3—79 இரவு முதற்கொண்டே ஆயிரக்கணக்கான தொண்டர்கள் குழுமினர்.

கோட்லா மைதானத்தில் 20 ஆயிரம் மக்களுக்கு மேல் அமரத்தக்க அளவில் மிக பெரிய பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. "ஷேமியானா" எனப்படுகிற விதத்தில் ஜமக்காளம் கொண்டு முழுப்பந்தலும் அமைக்கப்பட்டு இருந்தது.

மைதானத்தின் நான்கு புறங்களும் ஜமக்காளங்களால் சுற்றுச்சுவர் மாதிரி(காம்பவுண்டு) அடைக்கப்பட்டிருந்தன.

பேரணியில் பங்குபெறுகிறவர்களின் வசதிக்காக மைதானத்தின் ஓரத்தில் கழிவிடமும் ; மைதானத்திற்கு எதிரில் தண்ணீர் வசதியும் அமைக்கப்பட்டிருந்தன. மின் விளக்குகளும், ஒலிபெருக்கியும் இணைக்கப்பட்டு ஓர் சிற்றூர் போன்று கோட்லா மைதானம் காட்சி அளித்தது. 23—3—79 காலை 10 மணிக்குள் தமிழகத்துப் பெரியார் சமஉரிமைக் கழகத் தோழர்

களும், பெரியார் தொண்டர்களும், தென்னக இரயில்வே பிற்பட்டோர் அலுவலர் சங்கத்தினரும், கேரளத்து எஸ். என். டி. பி. யோகத்தினரும், கர்நாடகப் பெரியார் தொண்டர்களும், ஆந்திரம், ம. பி., உ. பி., பீகார், ஒரிஸ்ஸா, பஞ்சாப், அஸ்ஸாம் அரியானா மாநிலங்களைச் சார்ந்த பிற்படுத்தப்பட்டோர் — தாழ்த்தப்பட்டோர் பேரவைத் தொண்டர்களும் ஆக சுமார் 25 ஆயிரம் பேர் கூடிவிட்டனர். அவரவர் தாய்மொழியில் உரிமை முழக்கங்களை எழுப்பிக் கொண்டும், மாநில வாரியாக நிழற் படங்களை எடுத்துக் கொண்டும் குதூகலமாக இருந்தனர்.

அனைத்திந்தியப் பேரவையினர் ஏற்பாடு செய்த இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க—ஒடுக்கப்பட்டோரின் முதலாவது டில்லிப் பேரணியின் ஊர்வலம், 23—3—79 காலை 11-30 மணிக்கு கோட்லா மைதானத்திலிருந்து பேரவையின் புரவலர்—தலைவர் வே. ஆனைமுத்து, பேரவைத் தலைவர் ராம் அவதேஷ் சிங் M.P., கர்நாடக அரசு பிற்பட்டோர் நல அமைச்சர் திரு. L. G. ஹவானூர் ஆகியோரின் தலைமையில் புறப்பட்டது.

ஊர்வலத்தின் முகப்பில் அனைத்திந்தியப் பேரவையின் பெயர் தாங்கிய பேனரும், தந்தை பெரியார் ஈ. வெ. ரா., டாக்டர் லோகியா, டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் ஆகியோரின் உருவப்படங்களும் தொண்டர்களால் தாங்கிச் செல்லப்பட்டன.

பெரியார் தொண்டர்கள் கருஞ்சட்டை அணிந்தும், தாய்மார்கள் கறுப்புப்புடவை அணிந்தும் ஊர்வலத் தலைப்பில் அணிவகுத்து சென்றனர்.

எஸ். என். டி. பி. யோகத் தொண்டர்கள் மஞ்சள் துண்டு அணிந்து வந்தனர்.

அந்தந்த மாநிலத்துத் தொண்டர்களும்அவரவர் தாய்மொழியில் கோரிக்கை முழக்கங்கள் எழுதிய அட்டைத் தட்டிகள், போஸ்டர்கள் ஒட்டிய தட்டிகள், பேனர்கள், தலைவர்களின் படங்கள் இவற்றைச் சுமந்துகொண்டு இரண்டு பேர் கொண்ட வரிசையாக அணிவகுத்து வந்தனர்.

பெரியார் சமஉரிமைக் கழகக் கொடியும், பேரவையின் தூய பச்சை நிறத்தில் உதய சூரியன் பொறித்த கொடியும் பெரியார் தொண்டர்களாலும், பேரவைத் தொண்டர்களாலும் ஏந்திவரப்பட்டன.

ஊர்வலத்தினர் அனைவரும் அவரவர் மொழியில் :

"பெரியார் கொள்கை வளர்க !"

"பெரியார் ராமசாமி ஜிந்தாபாத் "

"டாக்டர் லோகியா ஜிந்தாபாத் "

"டாக்டர் அம்பேத்கார் ஜிந்தாபாத் "

"ஸ்ரீ நாராயண குரு ஜிந்தாபாத் "

"வடவரும், தென்னவரும் ஒன்று சேருவோம்—வகுப்புரிமைக்குப் போராடுவோம் !"

"பிற்பட்டோருக்கு—60 சதம் ஒதுக்கீடு செய்க !"

"ஜனதா தேர்தல் வாக்கை—உடனடியாக நிறைவேற்றுக !"

"பிற்பட்டோருக்கு—உடனடியாக 33 சதம் ஒதுக்கிடுக !"

"தாழ்த்தப்பட்டோருக்கான ஒதுக்கீட்டை—1980க்குப் பிறகும் நீடித்திடுக !"

"பெரியார் ஈ. வெ. ரா., டாக்டர் லோகியா ஸ்ரீ நாராயணகுரு படங்களை—நாடாளுமன்ற மத்திய மண்டபத்தில் திறந்து வை !" என முழக்கி வந்தனர்.

இந்தியத் தலைநகராம் டில்லி வீதிகளில் தந்தை பெரியார் உருவப்பட ஊர்வலமும், பெரியார் கொள்கை முழக்கங்களும் பெரியார் நூற்றாண்டு விழாவும் முதன்முதலாகச் சிறப்புற நடைபெறும் பணியைப் பெரியார் சமஉரிமைக் கழகமும், அனைத்திந்தியப் பேரவையும் ஆற்றி விட்டதைக் கண்டு ஆதிக்கவர்க்கத்தினரும், உயர் சாதியினரும் நிலைகுலைந்து போயினர்.

ஊர்வலம் பகதூர் ஷா மார்க்கம், திலகர் பாலம், சிக்கந்தரா ரோடு, ஃபெரோஸ்ஷா ரோடு, ஜன்பாத், ராஜ்பாத் வழியாகச் சென்றது. ஓர் குறிப்பிட்ட இடத்தைக் கடக்க ஊர்வலத்தினருக்கு ஒரு மணி நேரம் ஆயிற்று.

கோட்லா மைதானத்துக்கும், போட் கிளப் மைதானத்துக்கும் இடையிலான தூரம் சுமார் 8 கிலோ மீட்டர் ஆகும். ஊர்வலத்தினரை ஒழுங்குபடுத்தும் பெரும் பணியில் தோழர்கள் வே. ஆனைமுத்து, ராம் அவதேஷ் சிங் எம். பி., சேலம் அ. சித்தய்யன், சேலம் எம். ராஜு, சீர்காழி மா. முத்துசாமி, மதுரை வை. இராமச்சந்திரன், தென்னக இரயில்வே தோழர் நாகராஜன், உ. பி. வழக்கறிஞர் ஜெய்பால் சிங் கஷ்யாப், பீகார் வழக்கறிஞர் பிரசாத், பாட்னா தோழர் ராம் அவதேஷ் சவுத்ரி ஆகியோரும் மற்றும் பலரும் ஈடுபட்டனர்.

ஊர்வலத்தின் சிறப்பை விவரித்து ஒலிப் பதிவு செய்யும் (Tape recording) பணியைத் தோழர்கள் டில்லி டாக்டர் சாலை இளந்திரையன், சென்னை கலச. இராமலிங்கம் இருவரும் ஊர்வலப்பாதை முழுவதிலும் மேற்கொண்டனர். தோழியர் டாக்டர் சாலினி இளந்திரையன் அம்மையார் பெண்கள் அணியினரை ஒழுங்குபடுத்தி வந்தார். தோழர் டில்லி எஸ். இராசமாணிக்கம் டில்லி வாழ் தமிழ்ப் பெருமக்களை அணிவகுத்து அழைத்து

வந்தார். ஊர்வலம் சரியாக பிற்பகல் 2 மணிக்கு போட் கிளப் மைதானத்தை அடைந்தது.

ஏற்கனவே மைதானத்தில் அமர்ந்திருந்த 10 ஆயிரம் பேரும், பேரணியினரும் சேர்ந்து 35 ஆயிரம் மக்கள் உரிமை முழக்கங்களை வான் முட்ட எழுப்பினர். போட்கிளப் மைதானத்தில் எழுப்பிய உரிமைப் பேரணி ஒலிகள் நாடாளு மன்றத்தை எட்டின.

போட் கிளப் மைதானத்தில் சிறப்பான முறையில் விழா மேடை அமைக்கப்பட்டு, சுமார் 60 ஸ்பீக்கர்கள் மைதானம் முழுவதும் பொருத் தப்பட்டிருந்தன.

விழா மேடையின் பின்பக்கம் (back-drop) 6 அடிக்கு 5 அடி அளவிலான தந்தை பெரியார் படத்தால் அழகு செய்யப்பட்டிருந்தது. மேடை யின் வலப்புறம் 4 அடிக்கு 3 அடி உள்ள டாக்டர் லோகியாவின் பல வண்ணப் படமும், இடப்புறம் டாக்டர் அம்பேத்கார் படமும் அழகுற அமைக்கப்பட்டிருந்தன.

தென்னகத்துத் தலைவர்களும், வட மாநிலத் தலைவர்களும் மேடையில் அமர்ந்த வுடன், அரியானா தோழர் L. N. வித்ரோஹி முன் மொழிய, தோழர் பிரசாத் பின் மொழிய தோழர் வே. ஆனைமுத்து விழா நிகழ்ச்சிகளுக் குத் தலைமை ஏற்றார். தோழர் வே. ஆனை முத்து தலைமை உரையாற்றி முடிக்கும் தறுவாயில் இந்தியத் துணைப் பிரதமர் பாபு ஜெகஜீவன்ராம் விழா மேடைக்கு வருகை தந்தார். தலைவர்கள் அன்னாரை வரவேற்று மேடைக்கு அழைத்து வந்தனர். பலரும் அன் னாருக்கு மாலைகளை அணிவித்தனர்.

திரு. ஜெகஜீவன்ராம் தம் துவக்க உரையில், '' விழிப்புணர்ச்சி பெற்றுவிட்ட ஒடுக்கப்பட்ட மக்களை இனி எவரும் அடக்கி வைக்க முடியாது. நாட்டில், இனி, மாறுதல் வந்தே தீரும். நாட்டில் ஏற்பட்டுவரும் மாறுதல் வேண்டும் எண்ணங்களுக்கும் உணர்வு களுக்கும் ஏற்ப மேல் சாதிக்காரர்கள் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும்; இல்லையென்றால் அவர்கள் மாற்றப்படுவார்கள். ஒடுக்கப்பட்ட மக்களின் பேரணி மாறுதலைக் கொண்டுவரும் விருப்பத்தை வெளிப்படுத்தும் ஓர் அடையாளம் ஆகும். சமுதாய மாறுதலை விரும்பிப் பாடு பட்ட பெரியார் ஈ. வெ. ரா. அவர்களின் சேவை மிகவும் பாராட்டத்தக்கது '' எனக் குறிப் பிட்டார்.

அடுத்து கர்நாடக முதல்வர் தேவராஜ் அர்ஸ் விடுத்திருந்த வாழ்த்துச் செய்தியை அறிவித்துவிட்டு, கர்நாடகப் பிற்பட்டோர் நல அமைச்சர் திரு. L. G. ஹவானூர் சிறப்புரை ஆற்றினார்.

பேரவைத் தலைவர் ராம் அவதேஷ் சிங் எம். பி, பேரவையினர் நடத்திய உரிமைப் பேரணியின் சிறப்பியல்புகளையும், பேரவையின் இலட்சியங்களையும் விளக்கி நீண்டதோர் உரையாற்றினார்.

தொடர்ந்து தோழர்கள் பியுஸ் டிர்க்கி எம். பி., ராம் நரேஷ் குஷ்வாஹா எம். பி., ராம் தெனி ராம் எம். பி., மோகன் லால் பிபில் எம். பி., பெங்களூர் ஏ. எம். தர்மலிங்கம், கொல்லம் P. S. வேலாயுதம், திருவனந்தபுரம் N. சீநிவாசன், கள்ளிக்கோட்டை டாக்டர் P. சுப்ரமணியம், லக்னோ செடி லால் சாத்தி, பிற்படுத்தப்பட்டோர் கமிஷன் உறுப்பினர் K சுப்ரமணியம், ராம் பச்சன் யாதவ் (உ. பி.); ஸ்ரீசந்த் கஷ்யாப் (அரியானா); ஜெய்பால் சிங் (அலகாபாத்); மகேந்திர சிங் பிரன்தாஸ், மற்றும் பலர் தந்தை பெரியார் அவர்களின் தொண்டினைப் பாராட்டிப் புகழ்ந்தும்; பேரவையின் இலட்சியங்களை விளக்கியும் உரையாற்றினர்.

மாலை 5–30 மணிக்கு ' சமூக நீதிக்குப் போராடுங்கள்! ' என்கிற பெயருள்ள — தந்தை பெரியார் அவர்களின் கட்டுரைகளும், சொற் பொழிவுகளும் அடங்கிய இந்தி நூலை, இந்திய அரசு முன்னாள் சுகாதார அமைச்சர் திரு. ராஜ் நாராயண் வெளியிட்டு உரையாற்றினார்.

திரு. ராஜ்நாராயண் தம் உரையில், '' பார்ப்பனீயத்தை ஒழித்தால்தான் இந்திய சமுதாயம் உருப்படும். பார்ப்பனீயத்தை (பிராமன் பாத்) ஒழிக்கப் பெரியார் ஈ. வெ. ராமசாமி அரும்பாடுபட்டார். எனவே தான் அவர்தம் கருத்துக்கள் அடங்கிய இந்த இந்தி நூலைப் பெரியார் நூற்றாண்டு விழாவில் நான் வெளியிடுகிறேன். இந்தி பேசும் மக்கள் இந் நூலை வாங்கிப் படித்துப் பயன்பெற வேண்டும் '' என எடுத்துரைத்துவிட்டு, இரண்டு பிரதிகளின் விலையாக ஆறு ரூபா யைக் கொடுத்து இரண்டு பிரதிகளைப் பெற்றுக் கொண்டார்

அவர்தம் நூல் வெளியீட்டு உரைக்குப் பின்னர், தோழர் ராம் அவதேஷ் சிங் எம். பி., தோழர் வே. ஆனைமுத்து இருவரும் ஒடுக்கப் பட்ட மக்கள் அனைவரும் அரசியல் கட்சி பேதத்தை மறந்து — உட்சாதி உணர்வை மறந்து ஒன்றுபட்டுப் போராடிப் பேரவையின் இலட்சியங்களை அடையத் தொடர்ந்து பாடு பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தனர். டில்லிப் பேரணியும், பெரியார் நூற்றாண்டு விழாவும் வெற்றிகரமாக நடைபெற ஒத்துழைப்பு நல்கிய அனைவர்க்கும் நன்றி தெரிவித்துப் பேசினர்.

இரவு 7-30 மணி அளவில் டில்லிப் பேரணி, டில்லியில் பெரியார் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் இனிது முடிவடைந்தன.

23—3—79 அன்று போதிய நேரமின்மை யால், பேரவையின் கோரிக்கைகள் அடங்கிய மெமோரண்டத்தினைப் பேரவையின் நிர்வாகக்கமிட்டியினர், இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களிடம் 25—3—79 மாலை 4-30 மணிக்கு நேரில் அளித்தனர்.

வளர்க பெரியார் கொள்கை ! வாழ்க பெரியார் சமஉரிமைக் கழகம் !!
வெல்க ஒடுக்கப்பட்டோர் பேரவை !!!

# பொறுப்புள்ள குழந்தைகளும் பொறுப்பற்ற பெரியவர்களும்

- இராமியா

மனித இனம் தோன்றியதில் இருந்து முதலாளித்துவ உற்பத்தி முறை தோன்றிய நாள் வரைக்கும் உற்பத்தி செய் யப்பட்ட பண்டங்களைவிட, முதலாளித்துவம் தோன்றிய ஒரு நூற்றாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் அளவு பல்லாயிரம் மடங்கு அதிகம் என்று ஒரு கருத்து உண்டு. முதலாளித்துவத்தின் தொடக்கக் காலத்தைவிட இப்பொழுது உற்பத்தித்திறன் மிகப் பல மடங்கு உயர்ந்து உள்ளது. ஆனால் இந்த நவீன உற்பத்திப் பண்டங்கள் மனித வாழ்க்கை நலத்திற்குத்தானா என்பது ஆழ்ந்த பரிசீல னைக்கு உரியதாக இருக்கிறது.

அமெரிக்காவில் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்து கொண்டு இருந்த, அண்மையில் (18.2.2019 அன்று) காலமான வாலஸ் ஸ்மித் ப்ரேய்க்கர் என்ற அறிவியல் அறிஞர், நவீன காலத்துப் பண்டங்கள் பெருமளவு கரியமில வாயுவை உமிழ்வதைக் கண்டு, இது புவி வெப்பத்தை உயர்த்தும் என்றும், அதனால் பருவநிலை மாற்றங்கள் ஏற்படும் என்றும் 1975ஆம் ஆண்டிலேயே தெரிவித்தார். 1990ஆம் ஆண்டு வரையிலும் யாரும் அதை ஒரு பொருட்டாகவே நினைக்கவில்லை.

1990களில் புவிவெப்ப உயர்வும், பருவநிலை மாற்றமும் ஒரு பெரிய பிரச்சினை என்று புரியத் தொடங்கியது. 2000ஆம் ஆண்டுக்குப்பின் இப்பிரச்சினையைக் கவனித்தே ஆகவேண்டும் என்று மக்கள் குரல் கொடுக்கத் தொடங்கினர். ஆனால் என்ன செய்யவேண்டும் என்று புரியாத நிலை யிலேயே இருந்தனர். 2010க்குப் பின் உலகில் உள்ள இளம் அறிவியலாளர்கள் இன்று சந்தைப்படுத்துவதற்கு என்று உற்பத்தி செய்யப்படும் பண்டங்களில் முதன்மையானவை புவி வெப்பத்தை உயர்த்துபவையாக உள்ளன என்றும், உலகை அழிவுப் பாதையில் செல்லவிடாமல் தடுக்கவேண்டும் என்றால் இவற்றின் உற்பத்தியைத் தடுக்கவேண்டும் என்றும் தங்கள் கருத்தை வெளிப்படுத்தத் தொடங்கினர். இளம் அறிவியலாளர்களின் இக்கருத்து இவ்வுலகம் சந்தைப் பெருளாதார முறையில் மூழ்கிவிடக் கூடாது என்பதை வலி யுறுத்துகிறது. அறிவியலாளர்களால் இந்த அளவிற்குத் தான் சொல்லமுடிகிறது. அவர்களால் முதலாளித்துவப் பெரு ளாதார முறையை முற்றிலும் ஒழித்துவிட வேண்டும் என்று நேரடியாகச் சொல்ல முடியவில்லை.

**அறிவியல் அறிஞர்களிடையே இக்கருத்து வலுக்கத் தொடங்கிய உடன், ஏகாதிபத்தியவாதிகள் "புவிவெப்ப உயர்வா? அப்படி ஏதும் இல்லையே!" என்று கூறத் தொடங்கிவிட்டனர். அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அவ்வாறு கூறி, புவிவெப்ப உயர்வு பற்றிய ஆராய்ச்சிக்கான நிதிகளைப் பெருமளவு குறைத்தும், முழுவதுமாக நீக்கியும் வருகிறார். இவ்வாறு உயர் அதிகாரத்தில் உள்ள பெரியவர்கள் உலகம் அழிவுப்பாதையில் செல்வதைப் பற்றிய கவலையும், அதைத் தடுக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வும் இன்றிச் செயல்படுகிறார்கள்.**

இவ்வாறு பெரியவர்கள் பொறுப்பு இல்லாமல் இருக் கையில், சுவீடன் நாட்டைச் சேர்ந்த கிரேடா எம்மான் தன் பெர்க் என்ற பதினாறு வயதுப் பள்ளிச் சிறுமி, தன்னுடன் படிக்கும் மாணவ மாணவிகளை ஒன்றுதிரட்டி, வகுப்புகளை விட்டு வெளியே வந்து, தெருவில் இறங்கிக் குரல் கொடுக்கத் தொடங்கினார். இதன் தொடர்ச்சியாக உலகின் பல பகுதி களில் இருந்து நூறு நாடுகளில் உள்ள பள்ளிக் குழந்தை களுடன் தொடர்பு கொண்டு அவர்களையும் போராடும்படி அழைப்பு விடுத்தார். அதன் பேரில் 15.3.2019 அன்று பள்ளிகளை விட்டு வெளியே வந்து, புவிவெப்ப உயர்வுக்கு எதிராக உலகத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்கவேணடும் என்று இலட்சக்கணக்கான குழந்தைகள் குரல் கொடுத்தனர்.

குழந்தைகள் இவ்வாறு பொறுப்புடன் குரல் கொடுத்துக் கொண்டு இருக்கையில் பெரியவர்கள் பொறுப்புடன் செயல் படாமல் இருப்பது வேதனைக்கு உரியது. இதைவிட மோசம் என்னவென்றால் இச்சிறுமியைப் புகழின் உச்சிக்குக் கொண்டு போய் மதிமயங்கச் செய்து, திசை திருப்பும் செயல் தான். அதுதான் இப்போராட்டத்திற்கு "மரியாதை" தரும் விதமாக அவருக்குச் சமாதான நோபல் பரிசுக்குப் பரிந்துரை செய்ய முதலாளித்துவ அறிஞர்கள் முன் வந்து இருப்பது. இவ்வாறு பரிந்துரை செய்த நிலையிலேயே புவிவெப்ப உயர்வு பற்றிய பேச்சு அச்சிறுமிக்கு நோபல் பரிசு கிடைக்கப் போகிறது என்றும், இளம் வயதிலேயே நோபல் பரிசு பெறுபவர் இவர்தான் என்றும் மடை மாற்றப்பட்டு இருக்கிறது. உண்மை யிலேயே நோபல் பரிசு கிடைத்துவிட்டால், அதைப் பற்றிய பேச்சு வெள்ளத்தில் புவி வெப்ப உயர்வு பற்றிய பேச்சை முற்றிலும் மூழ்கடிக்க முயல்வார்கள்.

**இப்புவியை நம் வரும் காலத் தலைமுறை யினரிடம் பாதுகாப்பாக ஒப்படைக்க வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியுடன் குழந்தைகள் செயல்படும் போது, இந்தப் பெரியவர்கள் ஏன் பொறுப்பில்லாமல் செயல் படுகிறார்கள்?**

காரணம் இதுதான். சந்தைப் பெருளாதார விதிகளுக்கு உட்பட்டு உற்பத்தி ஆகும் பொருள்களில் மிகப் பெரும்பாலா னவை புவி வெப்பத்தை உயர்த்துபவையாகவே உள்ளன. புவி வெப்பத்தை உயர்த்தும் பண்டங்களை உற்பத்தி செய்யக் கூடாது என்றால், அத்தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டு உள்ள மூலதனத்தை என்ன செய்வது? மூலதனம் சும்மா இருப்ப தற்குச் சந்தைப் பொருளாதாரம் ஒப்புக்கொள்ளாது.

சரி! சந்தைப் பொருளாதாரம் வேண்டாம்; சோஷலிசப் பொருளாதார முறையைச் செயல்படுத்தலாம் என்றால் அது பெரும்பான்மையான உழைக்கும் மக்களுக்கு நன்மையாக இருக்கும். ஆனால் அதிகாரம் படைத்த முதலாளிகளாலும், முதலாளித்துவ அறிஞர்களாலும் பிறரை அடிமை கொள்ளும் வசதி இல்லாமல் போய்விடும்.

பிறரை அடிமை கொள்ளும் வசதி இல்லாத வாழ்க்கையை வாழ்வதைவிட இவ்வுலகம் அழிந்து போகட்டும் என்று "பெரி யவர்களான" முதலாளிகளும், முதலாளித்துவ அறிஞர்களும் நினைக்கிறார்கள். இந்நிலையில் பெரும்பான்மை மக்களாகிய உழைக்கும் மக்கள் என்ன செய்யப் போகிறார்கள்? ●

# நிகழ்வும் நிலைபாடும்

- இரா. பச்சமலை

பொதுப் பணித்தளத்தில் களப்பணி மேற்கொண்டு வரும் தோழர்கள் விடுதியொன்றில் இரவைக் கழித்து விட்டு பணியைத் தொடர காலை புறப்பட்டுக் கொண்டி ருந்தனர். ஒருவர் புறப்படலாம், விரைவில் குளித்து விட்டு வாருங்கள் என்றார். குளியலறையிலிருந்து நான் 100 குவளை நீர் ஊற்றிக் கொண்டுதான் குளிப்பை முடிப்பேன்; சற்று பொறுங்கள் என்றார் மற்றொருவர்.

இப்படியும் ஒரு குளியலா! என வியந்து கொண்டே எப்போது குளிப்பை முடித்து வருவாரோ என்ற எண் ணத்துடன் காத்திருந்தார். அப்போது இன்னொருவர் சொன்னது நினைவுக்கு வந்தது. நாலைந்து வாளித் தண்ணீர் குளிப்பேன் என்றார். இத்தன்மையிலே ஓர் ஒன்றிய அரசு உயர்நிலைப் பணியாளர் தன் தோப்பி லுள்ள தென்னைகளுக்கு நாளொன்றுக்கு 200 லிட்டர் வீதம் நீர்ப் பாய்ச்சி விவசாயம் செய்கிறேன் என்று தன் உயர் வாழ்நிலையைப் பீற்றிக் கொள்ளும் வகையில் சொன்னதையும் நினைவு கொண்டார்.

காலை சிற்றுண்டிக்குப் புறப்பட்டனர்; வெளியில் வந்தனர். மின்விசிறி ஓடிக்கொண்டிருந்ததையும் விளக்கு எரிந்து கொண்டிருந்ததையும் நினைவுகூர்ந்து அவர் அவற்றை அமர்த்திவிட்டு வந்துவிடலாமென அறைக்குத் திரும்பினார். நண்பர், சற்று நேரத்தில்தான் திரும்ப வந்துவிடு வோமே, இருந்துவிட்டுப் போகட்டும்; வந்து அமர்த்திக் கொள்ளலாமென்றார். உணவகம் வந்தனர். இருப்பினும் உண்ணும் போதே அறையில் மின்சாரம் வீணாகிக் கொண்டிருந்ததை நினைத்துக் கொண்டா ரெனினும் சற்று நேரத்தில் மறந்துவிட்டார்.

சிற்றுண்டி முடித்து பக்கத்துத் தெருவில் உள்ள நண்பரைப் பார்த்துவிட்டு அறை திரும்பலாமென்று அவர் இல்லம் சென்றனர். பேச்சு வளர்ந்தது; அவரையும் அழைத்துக் கொண்டு இன்னும் சில நண்பர்களைப் பார்க்கச் சென்று, அடுத்த பணிகள் குறித்து விவாதித்து முடித்தனர். பின் மதிய உணவுக்கு உணவு விடுதிக்கு வந்தனர். கைகழுவுமிடத்தில் பெரும்பாலோர் குழாயை முழுதும் திறந்துவிட்டு தண்ணீர் சொளசொளவெனக் கொட்டக் கொட்ட பிறருடன் பேசிக் கொண்டே கைகழுவி விட்டுச் செல்வது போன்றே நண்பரும் செய்தார்.

தண்ணீர் வீணாக்கப்படுவதைத் தவிர்க்க அவர் நண்பர் சொன்னதை நினைவு கூர்ந்தார். வீட்டில் தட்டில் சாப்பிட்டு முடிக்கும் போது குடிக்கும் தண்ணீரைத் தட்டில் ஊற்றி நன்கு கழுவி அந்தத் தண்ணீரைக் குடித்துக் கொள்ள வேண்டும். மேலும் தண்ணீர் குடிக்கும் போது வாய் நிறைய நிரப்பிக் கொண்டு நன்கு கொப் பளித்து வாய் முழுமையையும் சுத்தம் செய்து கொண்டு அதைக் கீழே துப்பாமல் அப்படியே விழுங்கிவிட வேண்டும். பின் சாப்பிட்ட தட்டைக் கொஞ்சமாக வேறு தண்ணீர் ஊற்றி கழுவி வைத்துவிட்டுத் திரும்பவும் அத்தட்டை உணவுக்குப் பயன்படுத்தும் முன் நன்கு துலக்கிச் சாப் பிட்டுக் கொள்ளலாம் என்றாராம். கோடை காலத்தில் உள்ளோம். நீர்த் தேவைக்கு மக்கள், குறிப்பாகச் சென்னை மக்கள் இன்னலுறும் நிலை நினைவில் நிழலாடுகிறது.

உணவு இலைகளில் பரிமாறப்பட்டது. நண்பர் இனிப்பு, உருளைக்கிழங்கு, அப்பளம் ஆகியவற்றைச் சாப்பி டாமல் விட்டுவிட்டு இலையில் நிறையச் சோற்றையும் விட்டு விட்டு உணவுப் பணியை முடித்துக் கொண்டார். உணவுப் பொருள் வீணாவதைக் கவனித்தவாறே அவரின் இன்னொரு நண்பர் சாப்பிட்டதை நினைவு கூர்ந்தார் . சில ஆண்டுகளுக்குமுன் குறளகம் எதிரி லுள்ள விடுதியொன்றில் நண்பர் சாப்பிட்டுக் கொண்டி ருந்த போது, அருகில் அமர்ந்து உணவு உண்டவர் உருளைக்கிழங்கைத் தொடாமல் அப்படியே விட்டுவிட்டு சாப்பாட்டை முடிக்க முற்பட்ட போது, இவர் 'நான் அந்த உருளைக்கிழங்கை எடுத்துக் கொள்வேன்' என அவர் இலையிலிருந்து எடுத்துக் கொண்டாராம்.

அந்த மனிதர் பதறியிருக்கிறார். வீணாக வேண்டாமே என்றுதான் என்று இவர் சொல்ல, கைகழுவி வெளி யில் செல்லும் வரை இவரை திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றாராம்.

மாலை அறை திரும்பினர். விளக்கு எரிந்து கொண் டிருக்க, மின்விசிறி ஓடிக்கொண்டிருப்பதைப் பார்த்து, மின்சாரம் வீணாகிவிட்டதே எனத் துணுக்குற்றார். நண்பர் பொருட்படுத்தவே இல்லை.

நிகழ்வு நிழலாடட்டும்; நிலைப்பாட்டுக்கு வருவோம்.

தோழர்களே, மேற்சொன்னது போன்ற நிகழ்வுகள் நீக்கமற நிறைந்து காணப்படும் சூழல்களைக் கண் ணுறுகிறோம். இவற்றைப் பற்றிக் கவலையுடன் சிந்தித்துப் பார்க்கின்றோமா? அதன் தொடர்ச்சியாகச் சரியான நிலைப்பாடு எடுத்து அதன்படி செயல்பட முற்படுகிறோமா? பெரும்பாலும் இல்லை என்ற விடை தான் கிடைக்கும்.

இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் மண், கால அளவைக் கணக்கிட முடியாத நம் முன்னோர்களால் நம் நல வாழ்வுக்காக விட்டுச் செல்லப்பட்டதுதான். அதே தன்மையில் நம் வழித்தோன்றல் சமூகத்திற்கு நல்லுலகை விட்டுச் செல்வது நம் பொறுப்பும் கடமை யும் ஆகும் என்பதில் இருவேறு நிலைப்பாடு இருக்க முடியாது. அத்தன்மையில் நீர், நிலம், வளி, வெளி, ஒளி ஆகியவற்றின் கூட்டான இப்பேரண்டத்தை வளமுள்ளதாக விட்டுச் செல்ல வேண்டும். இங்கு சொல்லப்பட்ட நிகழ்வு நீரை முதன்மையாகக் கொண்ட தாகக் கொள்ளப்பட்டுள்ளது.

இங்கு பல தர, வகை கொண்ட மக்கள் சமூகத்தில் குறிப்பாக நம் நாட்டில், தமிழகத்தில் பொதுவெளியின் சிந்தனையுடையோர், அதையொட்டி இயங்குவோர், இவற்றின் சுவடே பதிவில்லாது வாழ்வோர் எனத் தொகுக்கலாம். இதில் கடைநிலையில் உள்ளோர் மூன்றாம் வகையினர். அவர்கள் மேல் விமர்சனப் பார்வை வைக்கத் தக்கவர்கள் அல்லர். அது அவர் களின் தவறல்ல. அவர்கள் நிலையை பொதுவெளிக்கு உயர்த்திக் கொண்டு வராமல் விடப்பட்டுள்ளது. அரசின், சமூகத்தின் போதாமைதான், கவலை இல்லாத போக்கு தான் எனச் சொல்லலாம். சரி, முதல் இரண்டு வகையினருள் சிந்தனையுடையாரை விமர்சிக்கலாம். விளைவு ஏதும் கிட்டுமா என்பது கேள்விக்குறி. ஆனால் நடுவில் வரும் தொகுப்பைத்தான் ஆய்வுக்குட்படுத்த வேண்டும்.

பொதுவெளியின் இயங்குவோர் செயல்பாட்டாளர்கள் சமூகத்தின் நல்வாழ்வுக்கு வழிகாட்டும் தன்மையர் எனலாம். ஆனால், சமூகம் எப்படி விழிப்புணர்வோடு உள்வாங்கும் என்பதை அளவிட்டுச் சொல்ல முடியுமா என்பது அய்யம்.

உயிரினம், குறிப்பாக மனித இனம் முன்காட்டைப் பெருமளவுக்குப் பின்பற்றும் இயற்கை இயல்பைக் கொண்டது என அறிவோம். அத்தன்மையில்தான் தனி யொருவரின் குறிப்பாகப் பொதுவெளியில் அவரைப் பொறுத்தமட்டிலான பொதுநலம் சார்ந்த செயல்பாடுகள், பிறரால் பின்பற்றத்தக்கவையாக அமைய வேண்டும் என்பதுடன் இது அவர்கள் மனம்கொள்ளத்தக்க கருத்தியல் என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தான் இக்கட்டுரை இவ்வாறாக நகர்கிறது.

ஆனால் இவ்வகையினர் தன்னைச் சார்ந்தவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், கொள்கைக் கூட்டாளிகள், ஆதரவாளர்கள் என்ற தளத்தில் தாக்கம் விளைவிக்க வேண்டியவர்கள் ஆவர். விளைவு விளையுமா என்பதும் வினாவிற்குரியது. அதே நேரத்தில் அவர் தன்னந்தனி மனிதனாக சமூகப் பொறுப்புடையவராகத் தன் செயல் பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

நீர்ச் சிறப்பையும் மேன்மையையும் உணர்ந்து, அதன் பாதுகாப்பை ஓம்புவராகச் செயல்பட வேண்டும். இது ஒரு அரிய ஆற்றல். இவ் ஆற்றலை ஆக்கவோ, அழிக்கவோ முடியாது என்ற தத்துவ வரையறையை வைத்துக் கொண்டு, அதனை எப்படிப் பயன்படுத்தி னாலும் சரிதான் என வறட்டுத்தனமான நிலைபாட்டை கொள்ளக்கூடாது. மாறாக, நீர்ப் பாதுகாப்பு மேலாண் மையைத் தன்னளவில் தன் வாழ்வில், செயலில் எவ்வாறு கடைபிடிக்க வேண்டுமென்பதை மெய்ப்பித்துக் காண்பிக்க வேண்டும்.

குளிப்பது என்பது அன்றாடத் தேவையான ஒன்றாகிவிட்டது. அதற்கென எவ்வளவு நீர் தேவை என முறையான வரையறை ஏதுமில்லை. அது வாழும் நிலத்தின் தட்பவெப்பத் தன்மை சார்ந்த ஒன்றுதான். இருப்பினும் ஒரு சராசரியான சிக்கனமான அளவை வகுத்துக் கொண்டவராகச் செயல்பட வேண்டும். தேவையை அளவுடன் கணிப்பதற்கு முதலில் பயன் படுத்தும் குவளை சிறிய அளவுடையதாக ஒரு லிட்டர் கொள்ளளவுக்குக் குறைவாகத்தான் இருக்க வேண்டும். எந்தெந்த நிலையில் குறைவாக எந்தெந்த அளவு நீர் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற வரையறை வேண்டும். மொத்த உயர் அளவு 10 லிட்டருக்குள்ளாக இருத்தல் வேண்டுமெனக் கருதலாம்.

ஆனால் இவையெல்லாம் மேற்சொன்ன மூன்று பிரிவினராலும் கடைப்பிடிக்கப்படுவதற்கு முதன்மை யாக, கல்வியின் உள்ளீடாக வடித்து அமைக்கப்பட வேண்டும். குறிப்பாக மழலையர் மனதில் பதிய வைக்கும் வகையில் மழலையர் கல்வியின் உள்ளீடாக ஆக்கப்பட வேண்டும். **இருப்பினும் இவ்வாறான பதிவே செயல்பாடாக மாறுவதற்கே குறைந்த அளவு மூன்று தலைமுறைகளாவது ஆகும் என்பதுதான் உலக அளவிலான ஆய்வின் நிலைகளன்.** பொது நலன் நிலையில் நீர்ப் பாதுகாப்பு மேலாண்மை, வேளாண்மைக்கானதாகவும், பொது மருத்துவம் சார்ந்த பயன்பாடுகளுக்காகவும், பொதுத் தூய்மை பேணுவ தற்கானதாகவும் போன்றவற்றிற்கான தேவையை நிறைவு செய்வதற்காக இருக்க வேண்டும். இந்த அடிப்படைப் புரிதல்கள் இளம் தளிர் மனங்களில் பதிக்கப்படவும் நிலைக்கவும் தக்க எளிய வகையில் பாடத் திட்டங்கள் வகுத்தெடுத்து, பயிற்றுவிக்கப்பட ஆவனவெல்லாம் செய்திடல் வேண்டும்.

பாடத்திட்டம் மழலையருக்கு என்பதில் ஆசிரியர் களின் பங்குதான் மிக, மிக முதன்மையானதாகும். எனவே மிகப் பெருமளவுக்குக் கவலையுடன் ஆசிரியர் கள் உள்வாங்கிக் கொள்ளும்படியும், அவற்றை மழ லையர்கள், மாணவர்களிடம் படிய வைக்கும் பொறுப் பையும் உணர்ந்தவர்களாக உணர்த்தப்பட்டு உயர்த் தப்பட வேண்டும்.

மக்கள் நாயக அமைப்பில் மேல்தட்டில் உள்ளோர் கடைப்பிடிக்கும் நற்குணங்கள், நற்செயல்கள் ஏனை யோருக்கு முன்காட்டாக அமையலாம் என்பதுடன் கல்வியின் உள்ளீடு (கல்வி என்றாலே தாய்மொழி வழிக் கல்விதான்) கற்பிப்போரின் கரிசனத்துடனான கற்பிக்கும் முறை என்பவை பொதுச் சமூகம் மேம்பட வழிகோலும்.

நற்கல்விதான், நாட்டின் வளர்ச்சியை மட்டும் அல்ல, மக்கள் மேம்பாட்டை நாட்டின் மேம்பாட்டை எட்டுவதற்கு ஏற்ற வழி. இதற்கு இங்குள்ள ஒன்றிய அரசு, மாநில அரசுகள் ஆவன செய்யுமா? செய்ய வைக்க வேண்டும். இடையூறுகள் பலப்பல எழத்தான் செய்யும். அவற்றை உடைத்து ஒட்டுமொத்தச் சமூக விடுதலை யையும் ஒருமித்த மேம்பாட்டையும் முகிழ்ந்திடச் செய்வது சம உடைமை அரசு, பின் பொதுவுடைமை அரசு. இறுதியில் பொதுவுடைமைச் சமூகம்தான்.

●

# அகழாய்வு நடந்தும் அவிழாத முடிச்சுகள்

*"கீழடி, ஆதிச்சநல்லூர் போன்ற இடங்களில் நடந்த அகழாய்வில் எடுத்த பொருட்கள், ஒரு வேளை வெளிநாட்டு அகழாய்வுகளில் கிடைத்து இருந்தால், அங்கு மிகவும் மகிழ்ச்சி அடைந்து இருப்பார்கள். தங்கள் பாரம்பரியத்தை அறிய மிகவும் ஆர்வமுடன் செயல்பட்டு இருப்பார்கள். ஆனால் இங்கே அப்படி இல்லை. எனவே இனியும் ஆதிச்சநல்லூர், கீழடி விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் கோர்ட்டே தாமாக முன்வந்து நடவடிக்கை எடுக்கும்."*

***- இது மதுரை ஐகோர்ட்டு சில நாள்களுக்கு முன்பு பிறப்பித்த உத்தரவு.***

சமீப காலமாக கீழடி, ஆதிச்சநல்லூர் தொடர்புடைய வழக்கு விசாரணைக்கு வரும் போது எல்லாம் அதிரடி உத்தர வுகளை தொல்லியல் துறைக்கு, ஐகோர்ட்டு பிறப்பித்து வருகிறது.

ஆதிச்சநல்லூர், கீழடியில் அகழாய்வுகள் நடந்து முடிந்து, ஏராளமான பொருட்கள் எடுக்கப்பட்டுள்ளன. அவை எத்தனை ஆண்டுகளுக்கு முன் பயன்படுத்தப்பட்டவை என்பது குறித்த ஆய்வு முடிவுகள் இன்னும் சரிவர வெளிவரவில்லை. ஆண்டுகள் நகர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆனால், அகழாய்வில் கிடைத்த பொருட்கள் மீதான இரகசியம் 'அவிழாத முடிச்சுகளாக நீடித்து வருகிறது.

"அகழாய்வு முடிவுகள் வெளியிடப்பட்டால், தமிழக நாகரிகம், வட இந்திய நாகரிகத்தைப் பின்னுக்குத் தள்ளி, மிகப் பழமையானது என்பது நிரூபணம் ஆகிவிடும். இந்திய வரலாற்றில் தமிழக நாகரிகம் அதி முக்கியத்துவம் பெற்று விடும். இதனால்தான் கீழடி, ஆதிச்சநல்லூர் அகழாய்வு முடிவுகள் வெளிவருவதில் பெரும் பின்னடைவை ஏற்படுத்து கிறார்கள். அதற்குரிய நிதியையும் ஒதுக்க மறுக்கிறார்கள்" என ஒருபுறம் குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன.

மத்திய தொல்லியல் துறையோ, இதை அடியோடு மறுக் கிறது. நாங்கள் ஆதிச்சநல்லூர், கீழடி அகழாய்வு தொடர்பாக மந்தமாகச் செயல்படவில்லை. சட்டப்படி எல்லாம் சரியாகத் தான் நடந்து கொண்டிருக்கிறது என்று கூறுகிறது.

இப்போது இதுகுறித்த வழக்கு மதுரை ஐகோர்ட்டில் பரபரப்பாக நகர்ந்து கொண்டிருக்கிறது. ஐகோர்ட்டு கையில் எடுக்கும் அளவுக்கு, ஆதிச்சநல்லூர், கீழடியில் புதைந்துள்ள இரகசியங்கள் என்னென்ன?

அதற்கு விடையைச் சற்றுப் பின்னோக்கிச் சென்று அலசிவிட்டு வரலாம், வாருங்கள்,,,

'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்பது சங்க காலச் சான்றோரின் பொன்மொழி.

"ஒரு நாட்டின் நலத்தையும், வளத்தையும் அந்நாட்டு மக்களைக் கொண்டு காண்பதுதான் மரபு" - இது அந்தப் பொன்மொழி உணர்த்தும் பொருள்.

**ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே உலகுக்குப் பல நெறிகளை வகுத்து வழங்கியது நமது தமிழ் மண். ஆனால், அதன் தொன்மை இன்னும் சரிவர ஆராயப்படவில்லை என்பதே தமிழ் அறிஞர்களின் வாதம்.**

"தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம்தான் 'உலகின் நாகரிகத் தொட்டில்' என்று, 1927ஆம் ஆண்டில் சிந்து சமவெளி நாகரிகத்தை ஆய்வு செய்த பானர்ஜி என்ற ஆராய்ச்சியாளர் தெரிவித்தார். தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் சுமார் 10 ஆயிரம் ஆண்டுகள் பழமையானது. அங்கு அப்போதே எஃகு (இரும்பு) பயன்படுத்தப்பட்டுள்ளது" என்றும் அவர் கூறுகிறார்.

இதேபோல் தமிழர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நாகரிகத்துடன் வாழ்ந்ததற்கான முக்கிய ஆதாரங் கள், வைகை ஆற்றுப்படுகையில் உள்ள கீழடி அகழாய்வில் கிடைத்துள்ளன, ஒன்றா, இரண்டா,,, ஆயிரக்கணக்கான பொருள்கள் அங்கு கிடைத்துள்ளன. அவை ஒவ்வொன் றையும் பார்த்தாலே தமிழர்களின் நாகரிகப் பழமை வெளிப்பட்டுவிடும். நாட்டிலேயே பழங்கால நகர நாகரிகம் இருந்ததற்கான தடயங்களும் கீழடியில்தான் கிடைத்துள்ளன.

ஆனால், கீழடியில் கண்டெடுக்கப்பட்ட பொருள்களைப் பரிசோதிப்பதில் முரண்பாடுகள், தொல்லியல் துறை அதிகாரி அமர்நாத் ராமகிருஷ்ணன் இடமாற்றம், அடுத்தடுத்தகட்ட அகழாய்வுக்கு அனுமதி வழங்குவதில் இழுபறி, நிதி ஒதுக் கீட்டில் பாரபட்சம் என அதுகுறித்த சர்ச்சைகளும் நீண்டு கொண்டே வருகின்றன.

இந்த நிலையில்தான் மதுரை ஐகோர்ட்டில், கீழடி அகழாய்வு வழக்கு விசாரணையின் போது நீதிபதி கிருபாகரன் சில கேள்விகளை அரசின் முன் வைத்தார். "தமிழரின் பழமையை ஆராய்ச்சி செய்ய ஆர்வம் காட்டாதது ஏன்? தமிழகமும் இந்தியாவின் ஒரு பகுதி தானே? தமிழ் நாகரிகம் பழமையானது என்பது நிரூபிக்கப்பட்டால், நாட்டுக்கே பெருமை தானே? அது உலக அரங்கில் இந்தியாவைப் பெருமை கொள்ளச் செய்யும் தானே?" என்று தனது ஆதங்கத்தையும் வெளிப்படுத்தினார்.

எனவே இனியும் காலம் தாழ்த்தாமல் கீழடி, ஆதிச்ச நல்லூர் அகழாய்வு முடிவுகளை வெளியிடத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன்மூலம் தமிழர் நாகரிகத்தை உலகறியச் செய்ய வேண்டும் என்பதே ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமுதாயத்தின் வேண்டுகோளாக இருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்படுமா?

**கொடுமணல் - பொருந்தல்**

ஈரோடு மாவட்டம் கொடுமணல், திண்டுக்கல் மாவட்டம் பழனியை அடுத்த பொருந்தல், ரவிமங்கலம் ஆகிய இடங்களில் பண்டைக்காலத்தில் மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அவை சுமார் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தையவை எனக் கருதப்படுகிறது.

இதுபோலத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொல்லியல் அடையாளங்கள் கிடைத்துள்ளன. அங்கும் அகழாய்வுகளை விரைவுபடுத்திட வேண்டும் என்பதே மக்களுடைய கோரிக்கை.

**அகழாய்வுக்கு அக்கறை, முக்கியத்துவம் காட்டாதது ஏன்?**

ஆதிச்சநல்லூர், கீழடி அகழாய்வு விஷயத்தில் மத்திய அரசு சுணக்கம் காட்டுவதில் எழுந்த குற்றச்சாட்டு குறித்து, மத்திய அரசின் உதவி சொலிசிட்டர் ஜெனரல் கதிர்வேலு கூறும் போது, "தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் தொல்லியல் துறை வல்லுநர்கள் ஆய்வு செய்வதற்கு மத்திய அரசு உதவி செய்கிறது. வடமாநிலங்களாக இருந்தாலும், தென் மாநிலங்களாக இருந்தாலும் அனைத்தையும் சமமாகத் தான் மத்திய அரசு பார்க்கிறது. தமிழகத் தொல்லியல் அகழாய்வுகளுக்குத் தேவையான வசதிகளையும் செய்து கொண்டுதான் இருக்கிறது. சமீபத்தில் ஆதிச்சநல்லூரில் அகழாய்வுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இடத்தில் சுற்றுச்சுவர் எழுப்புவதற்காக ரூ.4½ கோடியை மத்திய அரசு ஒதுக்கி, அங்குப் பணிகள் நடந்து வருகின்றன. மற்ற இடங்களிலும் அகழாய்வுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது" என்று கூறினார்.

ஓய்வுபெற்ற தொல்லியல் துறை அதிகாரி தியாக சத்திய மூர்த்தி கூறும்போது, "தமிழக அகழாய்வுப் பணிகளில் மெத்தனம் காட்டுவதாக மத்திய அரசு மீது குற்றம் சுமத்த முடியாது. தொல்லியல் துறையில் பல்வேறு பணி இடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. தொடர்ச்சியாக எந்த இடத்திலும் அகழாய்வை நடத்த முடியாது. இடைவெளி விட்டுத்தான் செய்ய முடியும். ஒரு இடத்தை அகழாய்வு செய்வதற்குப் பல ஆண்டுகள் கூட ஆகலாம். இந்தக் கால தாமதத்துக்குக் குறிப்பிட்ட யாரையும் குறை கூறுவது ஏற்புடையதல்ல. ஆனால் இங்கு அகழாய்வுக்கு எண்ணற்ற இடங்கள் உள்ளன. தாமிரபரணி ஆற்றங்கரையோரங்களில் 38 இடங்களைத் தொல்லியல் துறையினர் கண்டறிந்து உள்ளனர். அங்கெல்லாம் ஏராளமான தகவல்கள் புதைந்து கிடக்கின்றன. இதேபோல வைகை ஆற்றின் கரையோரங்களிலும் பல்வேறு இடங்கள் கண்டறியப்பட்டு உள்ளன. இதில் கூடுதல் கவனம் செலுத்தி அகழாய்வு செய்யலாம்" என்றார்.

ஆதிச்சநல்லூர் அகழாய்வு குறித்து மதுரை ஐகோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தவர் எழுத்தாளர் முத்தாலங்குறிச்சி காமராஜ். அவர் கூறியது வருமாறு :

தாமிரபரணி ஆற்றங்கரை, வைகை ஆற்றங்கரை நாகரிகம் பற்றித் தொல்லியல் துறையினர் முழு வீச்சில் ஆய்வு நடத்தினாலே நமது பழமை வெளிச்சத்துக்கு வந்துவிடும். தனிஒருவரால் இது சாத்தியம் இல்லை. அதற்கு அரசுக்கு ஆர்வம் உண்டாக வேண்டும். ஆனால் அதற்கான சுவடே தெரியவில்லை.

**மத்திய அரசு சார்பில் ஆண்டுதோறும் தொல்லியல் துறைக்கு ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படுகிறது. அதில் குஜராத், மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களுக்குப் பெரும்பகுதி தொகையை ஒதுக்கிவிடுகிறார்கள். தமிழகத்துக்குப் பெயரளவில் சில இலட்ச ரூபாயை மட்டும் தருகிறார்கள். இதுதொடர்பாக ஐகோர்ட்டில் குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. இதைத் தொல்லியல் அறிஞர்களும் உறுதிப்படுத்துகிறார்கள்.**

கீழடியில் எடுக்கப்பட்ட 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருள்களை அங்கேயே அருங்காட்சியகம் அமைத்துக் காட்சிப்படுத்த வேண்டும் என்பதுதான் எங்களுடைய மற்றொரு கோரிக்கை. அதற்கும் தயக்கம் காட்டுவது ஏன்?

ஒரு மாநிலத்தின் வளர்ச்சி, ஒரு நாட்டின் வளர்ச்சி எவ்வளவு முக்கியமோ, அதுபோல வரலாறும் முக்கியம். மேலை நாடுகள் வளர்ச்சி அடைந்திருந்த போதும் ஆசியக் கண்டத்தில் உள்ள பழம்பெருமைகளையும், அவற்றின் பாரம்பரியம், பண்பாடுகளையும் அறிந்து ஆச்சரியப்படுகின்றனர். ஆனால் நம் மதிப்பு நமக்கே தெரியவில்லை. இதை எல்லாம் பார்க்கும் போது ஆதிச்சநல்லூர், கீழடி நாகரிகங்களை அறிய எந்த அக்கறையும் காட்டவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**ஆதிச்சநல்லூர்**

* தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் அருகே தாமிரபரணி ஆற்றங்கரையில் ஆதிச்சநல்லூர் அமைந்துள்ளது. அங்குள்ள மண் திரடாகக் காட்சி அளிக்கும் பகுதியில் கடந்த 1876ஆம் ஆண்டு செர்மனி நாட்டைச் சேர்ந்த ஜகோர் என்பவர் முதன்முதலில் அகழ்வாராய்ச்சி செய்தார். அப்போது அவர், இங்கு கிடைத்த முது மக்கள் தாழிகள், இரும்பாலான ஆயுதங்கள் போன்றவற்றை

சேகரித்துத் தனது நாட்டின் தலைநகரான பெர்லினில் கண்காட்சியாக வைத்தார்.

* 1889-ஆம் ஆண்டு முதல் 1905ஆம் ஆண்டு வரையிலும் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த அலெக்சாண்டர் ரியா என்பவர் ஆதிச்சநல்லூரில் அகழ்வாராய்ச்சி செய்தார். அப்போது அவர் இங்கு முதுமக்கள் தாழிகளுடன் தங்கம், வெண்கலம், இரும்பு போன்றவற்றால் செய்யப்பட்ட ஆபரணங்கள், ஆயுதங்கள் போன்ற 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரியவகைப் பொருள்களைச் சேகரித்தார். அவை கி.மு.1800-ஆம் ஆண்டு முதல் கி.மு.1600-ஆம் ஆண்டு வரையிலும் தமிழர்கள் பயன்படுத்திய பொருள்கள் என்பது தெரியவந்தது. அந்தச் சான்றுகள் தமிழர்கள் சுமார் 3800 ஆண்டுகளுக்கு முன்னரே நாகரிகத்தில் சிறந்து விளங்கினர் என்பதை உலகிற்குப் பறைசாற்றின.

**கடந்த 2004ஆம் ஆண்டு தொல்லியல் துறை ஆராய்ச்சியாளர் தியாக சத்தியமூர்த்தி தலைமையிலான குழுவினர் ஆதிச்சநல்லூரில் 114 ஏக்கர் பரப்பளவில் அகழ்வாராய்ச்சி செய்தனர். அப்போது இங்குக் கண்டறியப்பட்ட அரியவகைப் பொருட்களைச் சேகரித்து சென்னை அருங்காட்சியகத்தில் வைத்துள்ளனர். அதன் ஆய்வறிக்கை இன்னும் வெளியிடப் படவில்லை.**

* ஆதிச்சநல்லூர் அருகில் புளியங்குளத்தில் முதுமக்கள் தாழிகள் தகவல் மையக் கட்டடம் உள்ளது. ஆதிச்சநல்லூரில் சேகரிக்கப்பட்ட மண்பாண்ட பாகங்கள் மட்டும் அங்கு வைக்கப்பட்டு உள்ளன. அந்தக் கட்டடம் முறையாகப் பராமரிக்கவில்லை என அப்பகுதி மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

### கீழடி

* சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே கீழடி கிராமம் உள்ளது. அந்த ஊரின் பூமிக்கடியில் பெரும் நகரமே புதைந்துள்ளதாகக் காலங்காலமாக வாய்மொழியாக அப்பகுதி மக்கள் கூறி வந்தனர். அதன் காரணமாக அந்த ஊருக்கு வந்த பெயர்தான் கீழடி.

* கடந்த 2014-ஆம் ஆண்டு கீழடியில் விவசாயிகள் தென்னை மரக்கன்றுகளை நடுவதற்காகக் குழிதோண்டிய போது பழங்கால மண்பாண்ட பொருள்கள் வெளி வந்தன. அதுவும் ஒன்றிரண்டு அல்ல; ஆயிரக்கணக்கில் கிடைத்தன. இதனால் அங்கு அகழ்வாராய்ச்சி மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை வலுத்தது.

* 2015-ஆம் ஆண்டு முதற்கட்ட அகழ்வாராய்ச்சிப் பணிகள், மத்திய தொல்லியல் துறை சார்பில் தொடங்கப்பட்டது. 2016-ஆம் ஆண்டில் 2-ஆவது கட்டமாகவும், 2017-ஆம் ஆண்டில் 3-ஆவது கட்டமாகவும், கடந்த ஆண்டில் தமிழக அரசின் ஏற்பாட்டில் 4-ஆவது கட்டமாகவும் அகழாய்வுப் பணிகள் நடைபெற்றன.

* சங்க காலத் தமிழர் வாழ்வு முறைக்கான தொல்லியல் சான்றுகள், தமிழ் பிராமி எழுத்துகள் பொறித்த மண் பானை ஓடுகள் ஏராளம் கிடைத்தன. அதில் உதிலன், ஆதன், சிசன் ஆகிய பெயர்கள் அந்த காலத்திலேயே பயன்படுத்தியது தெரியவந்தது. மேலும் தங்கத்தால் செய்யப்பட்ட சில பொருட்களும் எடுக்கப்பட்டன. தமிழர்களுக்கும், ரோமானியர்களுக்கும் உள்ள வாணிபத் தொடர்பை உறுதிப்படுத்தும் வகையில் ரோமானியப் பானை ஓடுகளும் அங்குக் கிடைத்தன.

* சுமார் 2,300 ஆண்டுகளுக்கு முன்பே ஒவ்வொரு வீட்டிற்கும் இடையே 5 அடி இடைவெளி விட்டு, நகர மைப்பு இருந்தது அகழ்வாராய்ச்சியில் தெரியவந்தது. அங்குக் கிடைத்த செங்கற்கள், பழங்கால கட்டடக் கலையையும், நாகரிகத்தையும் விளக்கும் உன்னதச் சான்றாகும்.

### அமெரிக்காவில்தான் பரிசோதிக்க வேண்டுமா?

1949ஆம் ஆண்டில் வில்லியர்ட் லிபி என்ற இரசாயனத்துறைப் பேராசிரியர் ஒரு கண்டுபிடிப்பை உருவாக்கினார். அதாவது, பழமையான பொருள்களின் வயதை அறிய உதவும் 'ரேடியோ கார்பன் டேட்டிங்' என்பதுதான் அந்தக் கண்டுபிடிப்பு!

முதலில் அதை அறிவியல் உலகத்தினர் ஏற்றுக்கொள்ளவில்லை. எதிர்ப்பும் கிளம்பியது. கிட்டத்தட்ட 11 ஆண்டுகள் கழித்துத்தான் மற்ற விஞ்ஞானிகள் அதை ஏற்றனர். அதன் காரணமாக, 1960ஆம் ஆண்டில் விஞ்ஞானி வில்லியர்ட் லிபிக்கு நோபல் பரிசும் தேடி வந்தது. அவர் கண்டறிந்த 'ரேடியோ கார்பன் டேட்டிங்' தொழில்நுட்பமானது, எவ்வாறு பழங்காலப் பொருள்களின் வயதைக் கண்டறிய உதவுகிறது என்பதை இனி காண்போம்.

வானவெளியில் இருந்து 'காஸ்மிக்' எனப்படும் கதிர்கள் பூமியை நோக்கி வரும்போது அதில் உள்ள நியூட்ரான்கள் காற்று மண்டலத்தில் உள்ள நைட்ரஜனுடன் இணைகின்றன. அதன் விளைவாக நியூட்ரான்கள், நைட்ரஜன் அணுக்களில் நுழைகின்றன. இப்படி நுழைவதன் மூலம் நைட்ரஜனின் உட்கரு சற்றுப் பெரிதாகி ஒரு ரேடியோ கார்பனாக மாறுகிறது. இதற்கு 'கார்பன்-14' என்று பெயர்.

இந்த கார்பன் அணுக்கள் சூரிய வெளிச்சத்தின் உதவியோடு ஒளிச்சேர்க்கை மூலம் எல்லாத் தாவரங்களிலும் புகுந்து விடுகின்றன. ஒரு மரமோ, செடியோ உயிருடன்

இருக்கும் வரை கார்பன் அணுக்களின் அளவு சீராக இருக்கும். தாவரம் வாடி வதங்கி, மக்கிவிட்டால் அதற்குள் ரேடியோ கார்பன் புக முடியாது. இதனால் அதன் உள்ளே இருக்கும் ரேடியோ கார்பன்-14 கொஞ்சம் கொஞ்சமாய்க் குறைய ஆரம்பிக்கும். சுமார் 5 ஆயிரத்து 500 ஆண்டு களில் பாதியாகக் குறைந்துவிடும். 11 ஆயிரம் ஆண்டுகளில் 25 சதவீத கார்பன் மட்டுமே அந்த மக்கிப் போன தாவரத்தில் இருக்கும். ஒரு கட்டத்தில் ரேடியோ கார்பன் சாதாரண கார்பனாக மாறிவிடும். ஒரு ரேடியோ கார்பனின் வயது 11 ஆயிரம் ஆண்டுகள் எனக் கணக்கிடப்படுகிறது.

ஒரு மனிதன் இறக்கும் போது 100 ரேடியோ கார்பன் கள் அவரது உடலில் தங்கிவிட்டால், 11 ஆயிரம் ஆண்டுகள் கழித்துப் பார்க்கும் போது, ரேடியோ கார்பன்கள் அனைத் தும் சாதாரணக் கார்பன்களாக மாறியிருக்கும்.

மிகவும் நுண்ணிய இந்த ரேடியோ கார்பனின் அளவை வைத்துத்தான் பூமிக்கடியில் புதையுண்ட பொருள்கள் வெளி வரும்போது அது எத்தனை ஆண்டுகள் பழமையானவை என்பதை அகழாய்வு நிபுணர்கள் கண்டுபிடிக்கின்றார்கள்.

தற்போது இந்தியத் தொல்லியல் துறையினர், தாங்கள் அகழாய்வில் எடுக்கும் மாதிரிகளை ஐதராபாத் மற்றும் ஆமதாபாத்தில் உள்ள தேசிய வரலாற்று ஆய்வுக்கூடங்க ளுக்கும், இலக்னோவில் உள்ள பீர்பால் சஹானி ஆய்வுக் கூடத்திற்கும் அனுப்பிப் பரிசோதனை முடிவுகளைப் பெறு கிறார்கள். ஒவ்வொரு மாதிரிக்கும் பல்லாயிரக்கணக்கில் செலவு செய்யப்படுகிறது.

ஆனாலும், இந்தியாவில் அதிநவீன கருவிகள் இல்லாத காரணத்தால், அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள ஆய்வகங்களுக்கு இங்கிருந்து மாதிரிகளை அனுப்பி ஆய்வு முடிவுகள் பெறப்படுகிறது. இதற்குச் சில வருடங்கள் வரை காத்திருக்க வேண்டியுள்ளது.

தற்போது நவீன கார்பன் டேட்டிங் ஆய்வகத்தை, குஜராத்தில் காந்திநகர் ஐ.ஐ.டி. வளாகத்தில் அமைக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் அதிநவீன கருவிகள் இல்லாததால், ஆதிச்ச நல்லூர், கீழடி அகழாய்வில் கிடைத்த பொருள்களை அமெரிக் காவுக்கு இந்தப் பரிசோனைக்கு அனுப்பி முடிவுகளைப் பெற வேண்டியுள்ளது. முடிவுகள் உடனே கிடைக்குமா என்றால், அதுவும் உறுதியாகக் கூறமுடியாது. ஏனெனில் மாதக்கணக்கில், சில சமயம் ஆண்டுக் கணக்கில்கூட ஆகலாம். அமெரிக்கா ஆய்வகம் அறுதியிட்டுக் கூறிய பின்புதான், தமிழர்களின் முற்காலத்தை உறுதியிட்டுக் கூறமுடியும் நிலை உள்ளது. அதற்கும் இன்னும் எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டுமோ என்று தொல்லியல் துறையினர் தெரிவித்தனர்.

(நன்றி : ‘‘தினத்தந்தி’’, 3-3-2019)

## பெரியார் அன்பர் கோ.அரங்கசாமி மறைந்தார்!

தமிழக அரசுக் கல்வித் துறையில் நீண்டகாலம் பணியாற்றியவர் பெரியார் அன்பர் கோ. அரங்கசாமி அவர்கள். அன்னார், தம் 93ஆம் அகவையில், சென் னையில் தம் இல்லத்தில் மறைவுற்றார் என்பதை வருத்தத்துடன் அறிவிக்கிறோம்.

அன்னாருடைய உடல் 12.3.2019 செவ்வாய்க் கிழமை அன்று கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அளிக்கப்பட்டது.

கோ. அரங்கசாமி அவர்களின் மறைவு கருதி, மா.பெ.பொ.க. சார்பில் மனங்கசிந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.

**வாழ்க கோ. அரங்கசாமி புகழ்!**

**- வே. ஆனைமுத்து**

## ரூ.5,000/- வளர்ச்சி நிதி

செயங்கொண்டம் மருதூரைச் சார்ந்தவரும் தற் பொழுது கரூரில் வாழ்ந்து வருபவருமான ஓய்வு பெற்ற தமிழாசிரியர் தமிழன் குமாரசாமி எஸ்தர் அவர்கள், பெரம்பலூரில், 10.3.2019 ஞாயிறு அன்று நூல் வெளியீட்டு விழாக் கூட்டத்தில், சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூபாய் 5000/- (ஐந்தாயிரம்) வழங்கினார். நன்றி.

## ரூ.1,000/- வளர்ச்சி நிதி


குளித்தலை வெ. அறிவுக்கண்ணன் அவர்கள் 10.3.2019 ஞாயிறு அன்று, பெரம்பலூரில் சிந்தனை யாளன் வளர்ச்சி நிதியாக 1000/- (ஆயிரம்) ரூபாய் அளித்தார். நன்றி.

**- வே. ஆனைமுத்து**

## இரா.சக்திவேல்-கி.கிருத்திகா

கடலூர் மாவட்டம் நந்திமங்கலம் கிராமம் இரா.இராமனுசம்-செயக்கொடி இணையரின் மகன் இரா.சக்திவேல் அவர்களுக்கும் பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டம் முருக்கன்குடி கிராமம் சி.கிருஷ்ண மூர்த்தி-செல்வராணி இணையரின் மகள் கி.கிருத்திகா அவர்களுக்கும் திருமணவிழா 24.03.2019 ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு சு.ஆடுதுறை ஏ.கே.ஜி. திருமண மண்டபத்தில் திருமணம் இனிதே நடை பெற்றது. மணமகள் கிருத்திகா மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் வே.ஆனைமுத்து அவர்களின் உறவினர் ஆவார்.

# நூல் மதிப்புரை பெரம்பலூர் மாவட்டத்தில் பெரியார் முழக்கம்




தொகுப்பாசிரியர் : **கு.வரதராசன்**

ஆசியர், தலைவர், திருவள்ளுவர் உழவர் மன்றம், பூலாம்பாடி.

நூலாக்கம்: பேராசிரியர் **முனைவர் சா.தங்கப்பிரகாசம்**

தலைவர், பெரம்பலூர் மாவட்டப் பகுத்தறிவார் கழகம்.

வெளியீடு : **கவிமாறன் பதிப்பகம்,**36, முதன்மைச் சாலை, பூலாம்பாடி -621110.

பக்கம் : 160 ★ விலை ரூ.100.00

பெரியார் ஈ.வெ.இராமசாமி அவர்கள் 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் தன்மானத்தையும் பகுத்தறிவையும் பரப்பி மூடநம்பிக்கை ஒழித்தலைத் தம் கடமையாகக் கொண்டு ஈரோட்டுச் சிங்கமாய் உலாவந்து செயலாற்றிய சிறப்புக்குரியவர்; கடவுளை மற; மனிதனை நினை, என மனிதம் வர முதன்மை தந்தவர். பக்தி தனிச் சொத்து; ஒழுக்கம் பொதுச் சொத்து என்று மக்களிடையே ஒழுக்கத்துக்கு முதன்மை தந்து தம் கொள்கையைப் பின்பற்றி வாழ்ந்து காட்டியவர்; கல்லடிக்கும் சொல்லடிக்கும் கலங்காமல் எதிர்ப்புக்கிடையே வாழ்நாளெல்லாம் இவ்வையத்தை வலம் வந்து கொள்கைகளை வலியுறுத்தியவர்; நான் சொல்வதை உன் அறிவைக் கொண்டு சிந்தித்துப் பார்த்து சரி என்றால் ஏற்றுக் கொள், என்று சிந்தனைக்கு உரிமை தந்தவர்; பொதுவுடைமை மலர வேண்டும் என விழைந்தவர்.

பெரியார் கண்ட பேரறிஞர் வே.ஆனைமுத்து, திருச்சி சிந்தனையார் கழகத்தின் வழி பெரியாரிடம் ஒப்புதல் பெற்று, அவர் தம் கருத்துக்களைத் தொகுத்து மூன்று தொகுதிகளாக வெளியிட்டவர்; பெரியார் புகழுடம்பு அடைந்தபின் மேலும் விடுபட்ட வற்றையும் சேர்த்து 20 தொகுதிகளாக 2010 இல் அண்ணா அறிவாலயத்தில் கலைஞரைக் கொண்டு வெளியிட்டவர். அப்போதைய திருச்சி மாவட்டத்தில் இருந்த பெரம்பலூர் வட்டம், உடையார்பாளையம் வட்டம் என்ற இரு பகுதிகளிலும் தந்தை பெரியாருடன் பயணித்துக் கொள்கை பரப்பில் முதன்மை பெற்றவர் ஆனைமுத்து. இவரது படைப்புகள் திருச்சி வே.ஆனைமுத்து கருத்துக் கருவூலம் என்ற தலைப்பில் 20 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. தொகுப் பாசிரியர் கு.வரதராசன் அவர்களும் தந்தை பெரியார் கலந்துகொள்ளும் கூட்டங்களில் பங்கேற்றும், தனியே கூட்டங்களுக்கு ஆவன செய்தும் தொண்டு செய்தவர். அப்போதைய பெரம்பலூர் வட்டமே தற்போது பெரம்பலூர் மாவட்டம் ஆகியுள்ளது. ஆசிரியர் கு.வரதராசன் அரிதின் முயன்று பெரம்பலூர் மாவட்டத்தில் பெரியார் கலந்து கொண்ட பரப்புரை செய்த ஊர்களையும் பங்கு பெற்றவர் களையும் பட்டியலிட்டு இந்நூலில் ஆவணமாக்கியுள்ளார். அப்போதைய ‘‘விடுதலை’’ ஏடுகளைத் தேடிப் பிடித்து அவற்றில் வெளிவந்த செய்திகளையும் ஆவணமாக்கி யுள்ளார். எந்தெந்த நாள்களில், எந்தெந்த ஊர்களில் பெரியார் கலந்து கொண்டார் என்ற செய்தி இன்றைய இளைஞர்கள் கருத்தூன்றி அறிய வேண்டிய செய்தி யாகும். இனி வரும் உலகம், பெரியாரின் இறுதி உரை இரண்டும் இந்நூலிலும் இடம் பெற்றுள்ளது தேடுவோர்க்கு எளிமை தருவதாகும். பெரியாரின் வண்ண நிழற் படங்கள் இடம் பெற்றுள்ளன. நூலின் பின் அட்டையில் பெரம்பலூரில் ஓவியர் முகுந்தன், எழில் நகரில் அமைத் துள்ள பெரியார் சிலை அணி செய்கிறது. 27 ஊர்களில் பெரியார் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளின் ஊர்ப்பெயர்கள் அகர வரிசையில் இடம் பெற்றுள்ளன. பெரம்பலூர் மாவட்டப் பெரியார் தொண்டர்கள் என்ற தலைப்பில் 153 பெயர்களைப் பட்டியலிட்டிருக்கிறார். பெயர் விடுபட்டிருப்பின் மறுபதிப்பில் இணைக்கிறோம் எனத் தொகுப்பாசிரியர் தெரிவித்துள்ளார்.

இப்பட்டியலில் இலந்தங்குழி ஆ.செ.தங்கவேலு பெயர் விடுபட்டுள்ளது. இவர் தந்தை பெரியாரின் தன்மான நெறியாளராக வாழ்நாள் முழுதும் வாழ்ந்தவர்; ஆனைமுத்து அவர்களின் வலதுகரமாக இருந்தவர். 1957 இல் நடைபெற்ற சட்ட எரிப்புப் போராட்டத்தின்போது நான் கூடலூர் உயர்நிலைத் தொடக்கப் பள்ளியில் தலைமை ஆசிரிய ராகப் பணியாற்றினேன். அப்போராட்டத்தை நேரில் அறிந்தவன். நான் குடியிருந்த வீட்டு உரிமையார் கூடலூர் பொ.கருப்பையா போராட்டத்தில் கலந்து கொண்டு ஒன்றரையாண்டு சிறைத்தண்டனை பெற்றவர். அவர் பெயர் இடம் பெற வேண்டும். பெரம்பலூர் மாவட்டத்தைச் சார்ந்த கல்லூரி மாணவர்கள் இந்நூலைத் துணையாகக் கொண்டு தொண்டர்களின் நிழற்படங் களையும் தன்விவரக் குறிப்புகளையும் சேர்த்து வெளியிட்டால் மிகச் சிறந்த வரலாற்று ஆவணமாக அமையும் என்ற வேண்டுகோளையும் இளைய தலை முறையினருக்கு முன்வைக்கிறேன். தொகுப்பாசிரியரும், நூலாக்கத்துக்கு உரியவரும் பாராட்டுக்கு உரியவர்கள். நூல்களுக்குச் செலவிடுவது அறிவு வளர்ச்சி எனக் கருதி தொகுப்பாசிரியருக்குத் துணைநிற்க வேண்டுகிறேன்.

முனைவர் **அ. ஆறுமுகம்**

தலைவர், திருமழபாடித் தமிழ்ச்சங்கம்.

# கொள்கைவேள்-நாத்திகச்செம்மல்
# தோழர் குத்தூசி குருசாமி

மரு.க.சோமாஸ்கந்தன்

அந்த நாள்களில், தொண்டை மண்டல முதலியார் சமூகத்தினரை ஒன்றரைப் பிராமணர்கள் என்றே மக்கள் எண்ணுவர்; அழைப்பர். அவர்கள் வைதிக, சாதி, மத, சம்பிரதாய ஆசாரங்களைப், பிராமணர்களைவிட அரை மடங்கு அதிகமாகக் கடைப்பிடித்தார்கள் என்பதால் அவ்விதம் எண்ணப்பட்டனர்; அழைக்கப்பட்டனர்.

அத்தகைய சைவமரபில் தோன்றிய ஒருவர், சிறுவயது முதல் சைவத் திருமேனியாகத் தலையில் கட்டுக்குடுமியுடனும், நெற்றியில் திரு நீற்றுப்பட்டையுடனும், கழுத்தில் உருத்திராட்சக் கொட்டையுடனும் தோற்றமளித்தார். சைவத் தமிழ் கற்று, சைவமும் தமிழும் இணைந்து வளர்ந்தவர், கல்லூரியில் கால் பதித்தபோதும் அதே சைவக் கோலத்தோடும் கையில் தேவார, திருவாசக ஏடுகளுடனும் காட்சியளித்தார். பழுத்த வைதிக ராகவும், கதர் அணியும் காந்தியவாதியாகவும் கல்லூரி மாணவப் பருவத்தைத் தொடங்கிய அந்த இளைஞர், மெல்ல மெல்லப் பகுத்தறிவாளராக, சுயமரியாதை இயக்கத்தின்மீது பற்றுக் கொண்டவராகக் கல்லூரியைவிட்டு வெளியேறினார். அந்த இளைஞர் யார்?அவர்தான் தோழர் குத்தூசி சா.குருசாமி. அந்த மறக்கப்பட்ட சுயமரியாதைச் சுடரின் வரலாறு இது.

### பிறந்த மண்

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டத்திலுள்ள, குருவிக்கரம்பை என்னும் சிற்றூரில், சாமிநாத முதலியார், குப்பு அம்மாள் இணையருக்கு, 1906 ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாள் குருசாமி பிறந்தார்.

குருவிக்கரம்பையில், சிவன் கோயில் ஒன்றும், மாரியம்மன் கோயில் ஒன்றும் இருந்தன; இன்றும் இருக்கின்றன. கூரைவேய்ந்த ஒரு ஆரம்பப்பள்ளி ஒன்றும் இருந்தது.

தந்தை சாமிநாத முதலியார், பழுத்த சைவர். அவர் அவ்வூரின் கர்ணமாக இருந்தவர். ஊர்ப் பொதுக் காரியங்களை முன்னின்று நடத்துபவர். அவர் தமிழில் நல்ல புலமை பெற்றவராகவும், சைவத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கினார். அவர் ஊர்மக்களின் ஒத்துழைப்போடு சைவமடம் ஒன்றினை 1912 ஆம் ஆண்டில் கட்டிமுடித்தார். அந்த மடத்தில் எந்நாளும் தேவார-திருவாசகப் பாடல்கள் இசைக்கப்பட்டன.

இத்தகைய சூழலில் பிறந்த குருசாமி சைவக் குழந்தை யாக, தேவார-திருவாசகப் பாடல்களை இசைப்பவராக வளர்ந்து வந்தார். 1911 ஆம் ஆண்டு அகவை ஐந்தில் தொடக்கப்பள்ளியில் சேர்ந்தார். அவரின் ஆசிரியர் தாச்சியப்பன்-சிறந்த தமிழறிஞர். கடவுள், மதம், சாதி சம்பிரதாயங்கள் மூடப்பழக்க வழக்கங்களைச் சித்திரிக்கும் கதைகளே அன்றைய பாடத்திட்டங்களாக அமைந்திருந்தன. சிறுவன் குருசாமிக்கு இனிமையான குரல்-நன்றாகப் பாடுவான். ஆகையால் தேவார இசைக்குழுவில் இணைந்து பாடுவான்.



### நாகை-திருவாரூர் வாசம்

நாகப்பட்டினத்திற்கருகில் குறிச்சி என்ற சிற்றூரில் 20 ஏக்கர் நஞ்சை நிலம், குருசாமியின் தந்தையார் சாமிநாதமுதலியார்க்கு உரித்தாயிருந்தது. தந்தையாரின் நெருங்கிய உறவினர் ஒருவர் மேற்பார்வையில் அந்த நிலங்கள் இருந்தன. நெருங்கிய உறவினர், என்ற போதும், நிலத்திலிருந்து பெற்ற வருவாயை ஒழுங்காகக் கொடுப்பதில்லை. எனவே, சாமிநாதமுதலியார் தானே நிலத்தின் பொறுப்பை ஏற்று, உழவுத் தொழிலில் ஈடுபடவும், தன் ஒரே மகன் குருசாமி, மகள்கள் சவுந்தரவல்லி, சுப்புரத்தினம் ஆகியோரின் படிப்பு கருதியும் நாகப்பட்டினத்தை வாழ்விடமாகக் கொண்டார். ஆனால், குருசாமியின் தந்தை சில திங்களில் நோயுற்று, மண்ணுலகை நீத்தார். அவர் மனைவி யும், சிறுவன் குருசாமியும், தங்கையர் இருவரும் செய்வதறியாது திகைத்து நின்றனர். இந்நிலையில் அவர்களது அத்தை மங்களம் அம்மையார், அவர்களை வளர்க்கும் பொறுப்பை ஏற்று, திருவாரூருக்கு அழைத்துச் சென்றார். அவர்கள் திருவாரூரில் தொடக்கப் பள்ளியில் கல்வியைத் தொடர்ந்தனர். பின் குருசாமி உயர்நிலைப் படிப்பை திருவாரூர் கழக உயர் நிலைப் பள்ளியில் தொடர்ந்தார். (அந்தப் பள்ளி இன்று வடபாதிமங்கலம் சோம சுந்தரம் உயர்நிலைப்பள்ளி என்று பெயர் மாற்றம் செய்யப் பட்டுள்ளது. (அந்தக் கழக உயர்நிலைப்பள்ளியில் தான் இக்கட்டு ரையாளர் பயின்றுள்ளார். கட்டுரையாளரின் தந்தையார் கமலத் தியாகராஜனும், குருசாமியும் அதே பள்ளியில் பயின்றுள்ளனர். இருவரும் நெருங்கிய நண்பர்களாய் இருந்துள்ளனர்.) எட்டாம் வகுப்பில் குருசாமி படித்துக் கொண்டிருக்கும் போது அன்னையை இழந்தார். அத்தை மங்களம் அம்மையார், குருசாமிக்குத் தாயும் தந்தையுமானார்.

திருவாரூர் சைவத் திருத்தலம்; ஆதலால் அவ்வூரில் நாள் தவறாமல் பன்னிருதிருமுறைச் சொற்பொழிவுகள் நடைபெற்ற

வண்ணமிருக்கும்; தேவாரப் பண்கள் இசைக்கப்பட்ட வண்ண மிருக்கும். தேவார இசைக்குழுவில் குருசாமியும் கலந்து கொண்டு தேவாரப் பண்களை இசைப்பார். ஆதலால் குருசாமி யின் உள்ளத்தில் சைவசமயக் கோட்பாடுகள் ஆழமாக வேர் விட்டுப் பதிந்திருந்தன. திருவாரூரில் எண்கண் வெங்கடாசல முதலியார் என்பவர் கம்பராமாயணத்தில் ஆழங்காற்பட்ட புலமை மிக்கவர்; கம்பராமாயண இசைச் சொற்பொழிவுகள் அடிக்கடி நிகழ்த்துவார். அந்த உரைகளைக் கேட்டு, குருசாமியும் கம்பராமாயணத்தில் நன்கு தேர்ச்சி பெற்றார்.

**கல்லூரி வாழ்க்கை**

திருவாரூர் உயர் நிலைப் பள்ளிப் படிப்பு முடிவுற்றதும், 1924 ஆம் ஆண்டு, திருச்சி தேசியக் கல்லூரியில் இடை நிலை வகுப்பில் சேர்ந்து பயின்றார். கல்லூரியிலும் அவர் சைவத்திருக் கோலத்துடன் வாழ்ந்தார்.

திருச்சி தேசியக் கல்லூரியில் பயின்ற காலம், காங்கிரஸ் இயக்கம் ஆங்கில அரசை எதிர்த்துப் போரிட்டகாலம்; வைக்கம் போராட்டம் நிகழ்ந்த காலம் ஆகும். அந்த வரலாற்று நிகழ்வுகள் குருசாமியின் உள்ளத்தில் புதிய சிந்தனைகளை ஊட்டின; வைதிக குருசாமியைக் காந்தியவாதியாக மாற்றின. குருசாமி மாணவர் தேசிய இயக்கத்தில் இணைந்தார். காந்தியடிகள், பெரியார், திரு.வி.க. போன்றோரின் சொற்பொழிவுகளும், திரு.வி.க.வின் எழுத்து நடையும் குருசாமியின் கருத்தைக் கவர்ந்தன, அதே போன்று மேட்டூர் அணை கட்டுதற்குத் தக்க இடத்தைத் தேர்ந் தெடுத்துக் கொடுத்த பொறியியல் அறிஞர் பா.வே. மாணிக்க நாயக்கர் பேச்சும் எழுத்தும் அவரை மிகவும் கவர்ந்தன.

**கல்லூரியில் காந்தியடிகளுக்கு வரவேற்பு**

1925 ஆம் ஆண்டு காந்தியடிகள், தமிழ் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். குருசாமி மேற்கொண்ட முயற்சியின் பயனாய் காந்தியடிகள் தேசியக் கல்லூரிக்கு வந்துற்றார். கல்லூரி நிருவாகத்தின் சார்பில் வரவேற்பளிக் கப்பட்டது. வரவேற்புரை சமஸ்கிருதத்தில் அமைந்திருந்தது. காந்தியடிகள் ஏற்புரை வழங்கியபோது, தனக்குச் சமஸ்கிருதத்தில் வரவேற்புரை வழங்கியதை வன்மையாகக் கண்டித்தார். எனக்குப் படித்த வரவேற்புரையை எத்தனை பேர் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்? கை தூக்குங்கள். பார்க்கலாம்! என்றார். அந்த வரவேற்புரையை எழுதிக் கொடுத்த சமஸ்கிருதப் பண்டிதர் ஒருவரே கை தூக்கினார். அதைக் கண்ட காந்தியடிகள், உங்களுக்கு வெட்கமாக இல்லை? உங்கள் தாய்மொழி தமிழில் ஏன் வரவேற்புரையை அளித்திருக்கக் கூடாது? என்று கேட்டார். அருகில் அமர்ந்திருந்த குருசாமி ஹியர், ஹியர் என்று உரக்கக் கத்தினார். காந்தியடிகள் சினத்துடன் குருசாமியை நோக்கி, இது அதைவிட மோசமானது,என்று புகன்றார். இந்நிகழ்வு, குருசாமி யின் துணிவிற்கும், மொழி உணர்வுக்கும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

இந்தக் காலத்தில், தமிழ் நாட்டுக் காங்கிரசு இயக்கத்தில் பிராமணர், பிராமணரல்லாதார் என்ற உணர்வு தலை தூக்கியிருந்தது. அதற்குக் காரணமாகக் காங்கிரசில் அந்நாளில் பிராமணர் ஆதிக்கமே நிலை கொண்டிருந்தது. இந்நிலையினைப் பெரியார் கடுமையாக எதிர்த்து வந்துள்ளார். சேரன்மாதேவி குருகுலத்தில் வ.வே.சு.ஐயர் வர்ண வேறுபாட்டிற்குத் துணை யாக, ஆதரவாக இருந்துள்ளார். குருகுலத்தின் வருணாசிரம ஆதரவுப் போக்கினைப் பெரியார் வன்மையாக எதிர்த்தார்.

இவற்றின் விளைவாக 1925, நவம்பர் திங்களில் காஞ்சி புரத்தில் நடைபெற்ற மாநாட்டில் பெரும் பிளவு ஏற்பட்டது. பெரியார், எஸ். இராமநாதன் ஆகிய இருவருடன் பலர் காங்கிரசை விட்டு விலகினர்.

**சுயமரியாதைச் சங்கம் தோற்றம்**

பெரியாரும், எஸ்.இராமநாதனும், தமிழரின் வளர்ச்சிக்காகப் போராடுவது, சமுதாயச் சீர்திருத்தம் செய்வது, சாதி-மத வேறுபாட்டை நீக்குவது, மூடப்பழக்க வழக்கங்களை ஒழிப்பது போன்ற பல கொள்கைகளைக் கொண்ட சுயமரியாதைச் சங்கத்தைத் தோற்றுவித்தனர். இந்தக் கொள்கைகளைப் பரப்புதற்கென்று குடி அரசு இதழைத் தொடங்கினார் பெரியார்.

கல்லூரி மாணவர் குருசாமி, தமிழகத்தின் அரசியல், சமுதாய நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனிக்கலானார். குடி அரசு இதழின் தொடர் வாசகரானார். வைதிகக் குருசாமி மெல்ல மெல்ல பகுத் தறிவாளர் குருசாமியாக மாறினார். பூவாளூர் பொன்னம்பல னாரின் நட்பும் கிட்டியது. குருசாமி சுயமரியாதை இயக்கத்தில் இணைந்தார்.

**பெரியார் சந்திப்பு**

1928 மே பிற்பகுதியில், பூவாளூர் பொன்னம்பலனார், குருசாமியை, ஈரோட்டில் பெரியாருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

பெரியார் : வாங்க. (இளைஞனாக உள்ள தன்னை வாஎன்று ஒருமையில் அழைக்காமல் வாங்க என்று மரியா தையுடன் அழைத்த பெரியாரின் பண்பு, குருசாமி யின் உள்ளத்தை மிகவும் கவர்ந்து விட்டது)

பெரியார் : நீங்க எதுவரை படிச்சிருக்கீங்க?

குருசாமி : பி.ஏபொருளாதாரம்; இறுதித்தேர்வு எழுதியுள்ளேன்.

பெரியார் : இப்போ என்ன செய்றீங்க?

குருசாமி : சும்மாதான் இருக்கேன்.

பெரியார் : அப்பா அம்மா என்ன செய்றாங்க?

குருசாமி : இருவரும் இல்லை. பல ஆண்டுகளுக்கு முன்பே காலமாகிவிட்டார்கள்.

பெரியார் : அப்போ எப்படிப் படிச்சிங்க?

குருசாமி : அத்தை படிக்க வச்சாங்க.

பெரியார் : குடி அரசு எவ்வளவு நாளா படிக்கிறீங்க?

குருசாமி : ஆரம்பத்திலிருந்தே படிக்கிறேன்.

பெரியார் : கொள்கை பிடிச்சிருக்குங்களா?

குருசாமி : பிடிச்சிருக்குங்க.

பெரியார் : இங்கேயே தங்கி நம்ப வேலையைக் கவனிக் கிறிங்களா?

குருசாமி : கவனிக்கிறேங்க.

இதன்பின் குருசாமி ஈரோட்டில் தங்கி இயக்கப் பணிகளில் ஈடுபடத் தொடங்கினார். பெரியாரைச் சந்தித்தது குறித்துக் குருசாமி பிற்காலத்தில், பாஸ்வெல் ஜான்சனைச் சந்தித்தபோது, பாஸ்வெல்லுக்கு ஏற்பட்ட உணர்வு தனக்கும் ஏற்பட்டது, என்று கூறியுள்ளார். குடி அரசு அலுவலகத்தில் பணியாற்றும் போது அலுவலக ஊழியர்கள், அனைவரும் குருசாமியிடம் அன்பு பாராட்டினார்கள்; தலைவர்கள், தொண்டர்கள் அனைவரின் நட்பையும் அன்பையும் பெற்றார். அன்னை நாகம்மையாரின் அன்புக்கு உரியவரானார். குடி அரசில் தொடர்ந்து கட்டுரைகளும் தலையங்கங்களும் எழுதினார்.

**ரிவோல்ட் ஆங்கில இதழ் தொடக்கம்**

ஆங்கில வார ஏடு தேவை என எஸ்.இராமநாதனும், குருசாமியும் எண்ணினர்; பெரியாரிடம் தங்கள் எண்ணத்தைத் தெரிவித்தனர்; பெரியாரும் ஒப்புதல் தந்தார். 1928, நவம்பர் 7ஆம் நாள் ரிவோல்ட் ஈரோட்டிலிருந்து வெளியாயிற்று. பெரியாரும்,இராமநாதனும் ஆசிரியர்கள், குருசாமி துணை ஆசிரியர். முழுப்பொறுப்பும் குருசாமியிடமே இருந்தது. 16-6-1929 முதல் குடி அரசும் ரிவோல்ட்டும் சென்னையிலிருந்து வெளியாயிற்று. அதற்கான ஏற்பாடுகளைச் செய்தவர் குருசாமி.

டபிள்யு.பி.ஏ.சௌந்திரபாண்டியன் தலைமையில், செங்கல்பட்டில் முதல் சுயமரியாதை மாநாடு 1929 பிப்ரவரி 17, 18 தேதிகளில் நடைபெற்றது. அம்மா நாட்டில் குருசாமி ஆற்றிய உரை அவையோர் உள்ளத்து உணர்வுகளைத் தட்டியெழுப்பிச் செயல்படச் செய்திடும் ஆற்றல் மிக்கதாய் அமைந்திருந்தது.

**ஈரோட்டில் ஆதித் திரவிடத் தோழர்கள் கோயில் நுழைவு**

ஈரோடு ஈஸ்வரன் கோயில் தேவஸ்தானக் கமிட்டியின் தலைவராகப் பெரியார் இருந்தார். 1929 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4ஆம் நாள் ஈஸ்வரன் கோயிலுக்குள் ஆதித் திராவிடத் தோழர்களையும் அனுமதிக்க, ஆலய தேவஸ்தானக் கமிட்டி முடிவெடுத்தது. இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியவர் பெரியாரே.

தீர்மானம் நிறைவேற்றிய மறு நாளே பெரியார் கோயம்புத்தூர் சென்றுவிட்டார். தான் திரும்பிவரும் வரை இத்தீர்மானத்தின் மீது நடவடிக்கை வேண்டாமென்று தோழர் குருசாமியிடம் கூறிவிட்டே சென்றார்.

பெரியார் கோவை சென்ற அன்று மாலையே, குருசாமியும், மாயவரம் நடராஜனும் இணைந்து, குடிஅரசு அலுவலகத்தில் பணிபுரிந்துவந்த ஆதித்திராவிடத் தோழர்கள் பசுபதி, கருப்பன் ஆகியோரை அழைத்துக்கொண்டு கோயிலில் வழிபாடு செய்வோர் போன்று கோயிலுக்குள் நுழைந்துவிட்டனர். இவர்கள் கோயிலில் கலகம் விளைவிக்க ஊடுருவியுள்ளனர் என்று சந்தேகங்கொண்டு, கோயில் ஊழியர்கள் கோயில் கதவுகளைத் தாளிட்டுவிட்டனர். இரண்டு தினங்கள் கோயிலில் குருசாமியும் தோழர்களும் அடைபட்டுக்கிடந்தனர். அன்னை நாகம்மையார் அவர்களுக்கு உணவினைக் கோயில் சுற்றுச் சுவர் வழியாக அனுப்பிவைத்தார். பெரியார் வந்தபின்னரே கதவுகள் திறக்கப்பட்டுத் தோழர்கள் விடுவிக்கப்பட்டனர். இதன் விளைவாக அந்நாள்களில், தமிழகத்தில், எந்த ஊரில் சுயமரியாதை இயக்கத்தின் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றாலும், அவ்வூர் கோயில் கதவுகள் தாளிடப்பட்டிருக்கும். கூட்டம் நிறைவுற்ற பின்னர், சு.ம இயக்கத் தோழர்கள் ஊரைவிட்டு வெளியேறிய பின்னரே கோயில் நடை திறக்கப்படும். கோயில் நிர்வாகிகளுக்குச் சு.ம.இயக்கத் தோழர்கள் ஆதி திராவிடத் தோழர்களை கோயிலுக்குள் அழைத்துச் சென்றுவிடுவர் என்ற ஐயம், அச்சம் இருந்ததே அதற்குக் காரணமாகும்.

பட்டுக்கோட்டையில் முதல் சுயமரியாதைத் தொண்டர்கள் மாநாடு 1929 ஆம் ஆண்டு மே-25 இல் தோழர் குருசாமியின் தலைமையில் நடைபெற்றது. பெரியார், மாநாட்டுத் தலைவராகத் தோழர் குருசாமியின் பெயரை முன்மொழிந்து பேசியபொழுது,எண்ணத்தில், எழுத்தில், பேச்சில் செய்கையில், எல்லாவற்றிலும் ஒரேமாதிரியான கொள்கையுள்ள ஒரு பெரியார் நமக்குக் கிடைத்தது, நமது இயக்கத்தின் முற்போக்கிற்கு ஒரு நல்ல அறிகுறியும், தொண்டர்களுக்கு வழிகாட்டியுமாகும், என்று கூறினார். (குடியரசு-2-6-1929) மிகுந்த இடைவிடாத கையொலி களுக்கிடையே, அகவை 23 நிரம்பிய இளைஞர்-பெரியாரால் பெரியார் என்றழைக்கப்பட்ட பெருஞ்சிறப்பினைப் பெற்ற குருசாமி, தன் தலைமை உரையை நிகழ்த்தினார்.

சுயமரியாதை இயக்கம் எதிர்ப்புகளுக்கிடையே வளர்ந்து பீடு நடைபோட்டது. பிராமணர்களும், பிராமணரல்லாத உயர் ஜாதி இந்துக்களும் சுயமரியாதை இயக்கத்தை எதிர்த்து வந்தனர். அவர்களுக்குத் துணைபுரிபவர்களாகத் தமிழ்ப் புலவர்களும் சேர்ந்து கொண்டனர்.

சுயமரியாதைக் கருத்துகள் தமிழை அழித்துவிடும் என்று பொய்யான பரப்புரையில் தமிழ்ப் புலவர்கள் ஈடுபட்டனர். தோழர் குருசாமி வெகுண்டு குடி அரசு 1929, ஜுலை 7 இதழில் தமிழ் மொழி வளர்ச்சியைக் கெடுப்பவர்கள் தமிழ்ப் பண்டிதர்களே, என்று நெடிய கட்டுரை எழுதினார். அந்தக் கட்டுரைக்குப் பின்னர் தமிழ்ப் புலவர்கள் பலர் சுயமரியாதை இயக்கத்தை நோக்கி வரத் தொடங்கினர். உண்மையான தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடவும் முனைந்தனர்.

**கலப்புத் திருமணம்**

1929, சூலை 20, 21 தேதிகளில் நடைபெற்ற நெல்லை மாவட்ட இரண்டாவது சுயமரியாதை மாநாட்டில், மதம்,கடவுள், ஆகியவற்றை எதிர்த்து நாத்திகப் பரப்புரை நிகழ்த்தத் தீர்மானிக்கப் பெற்றது.

அந்த நெல்லை மாவட்ட இரண்டாவது சுயமரியாதை மாநாட்டில் பேசிய தோழர் குருசாமி, சாதியை ஒழிப்பதற்குக் கலப்புத் திருமணம் ஒன்றுதான் வழி என்றும், கலப்புத் திருமணத்தைத் தவிர வேறு எந்த முறையினாலும் சாதி ஒழியாது என்றும் உரைத்தார். சாதிக்கொடுமையை எதிர்த்துப் போராடும் சமூகச் சீர்திருத்தவாதியே அரசியல்வாதியைவிட ஆயிரம் பங்கு துணிச்சல் உள்ளவர், என்றும் பேசினார்.

**பேசிவிட்டுப், பேசிய பேச்சினை அடுத்த விநாடியே மறந்துவிடும் மனிதரல்லர் தோழர் குருசாமி. கலப்புத் திருமணம் என்பது அவருக்கு உயிர்க் கோட்பாடாயிற்று, அக்கொள்கையில் உறுதியாய் நின்றார்.**

உற்றார் உறவினர்கள் கலப்புத் திருமணம் வேண்டா மென்று வலியுறுத்தினார்கள்; தடுத்தார்கள்; பயமுறுத்தினார்கள் எனினும் தோழர் குருசாமி கலப்புத் திருமணம் புரிந்து கொள்வதில் உறுதியாக இருந்தார்.

இதனை அறிந்த மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், சென்னை ஜியார்ஜ் டவுனில் வசித்துவந்த (ஃபிடில்) வயலின் இசைக் கலைஞர், திருவாரூர் டி.சுப்ரமணியபிள்ளையின் முதல் மகள் குஞ்சிதத்தைத், தோழர் குருசாமிக்கு மணமுடிக்கலாம் என்று பெரியாரிடம் தெரிவித்தார். அப்பொழுது தோழர் குஞ்சிதம் இராணிமேரி கல்லூரியில் இளங்கலை பட்டப்படிப்பு படித்துக் கொண்டிருந்தார்.

பின்னர், 1929 டிசம்பர் 8ஆம் நாள் ஈரோட்டில் பெரியார் இல்லத்தில் குருசாமி-குஞ்சிதம் கலப்புத் திருமணம் நடைபெற்றது.

**இந்தத் திருமணத்தைத் தடுத்து நிறுத்திட விரும்பிய குருசாமியின் இரண்டாவது தங்கை-சுப்புரத்தினத்தின் கணவர், திருச்சியிலிருந்து தந்தி அனுப்பினார். தந்தியில், குருசாமியின் தங்கை கிணற்றில் விழுந்து இறந்து விட்டார் என்று கண்டிருந்தது. பெரியாரும் மற்றவர் களும் அதிர்ச்சியுற்றனர்.**

தோழர் குருசாமி, என் இருதங்கைகளில் இந்தத் தங்கை தான் நல்ல திடமனம் படைத்தவர், நிச்சயம் அவர் உயிருடன் இருப்பார், என்று மிக நிதானமாகக் கூறினார். தோழரின் கூற்றே உண்மையாயிற்று.

### பெட்ரண்டு ரஸ்ஸல் கணவன்-மனைவி குறித்து

குஞ்சிதம்-குருசாமி இருவரும் கற்றறிந்தவர்கள்; மன தாலும் கொள்கையாலும் ஒன்றுபட்டவர்கள். பகுத்தறிவாளர் பெட்ரண்டு ரஸ்ஸல், கணவன் மனைவி உறவு பற்றிக் கூறியதற்கிணாங்க இவ்விருவரும் செம்மையுடன் வாழ்ந்தனர்.

இருவருக்குமிடையே முழுமையான சமத்துவ உணர்ச்சி யிருக்கவேண்டும். ஒருவர் உரிமையில் ஒருவர் தலையிடக் கூடாது. அப்பழுக்கில்லாத நெருக்கமும், உள்ள ஒருமைப்பாடும் இருக்கவேண்டும். வாழ்க்கையில் ஒரேதன்மைத்தான குறிக்கோள் இருக்கவேண்டும். இத்தன்மைத்தானதுதான் குஞ்சிதம்-குருசாமி வாழ்வியல் அறம்.

குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை, என்ற முதுமொழியை அறிந்துணர்ந்திருந்த தோழர் குருசாமி, தன்னை எதிர்த்துச் சுடுசொற்களை வீசிய சுற்றத்தார் இல்லங்களுக்கு, மனைவியுடன் சென்றுவந்தார்; சுற்றம் தழுவி நின்றார்.

### சிந்தனைச் சிற்பி சிங்காரவேலருடன் நட்பு

இந்தியாவின் முதல் பொதுவுடைமை இயக்கத்தோழர், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர். 1923 இல் சென்னையில் விவசாயத் தொழிலாளர் இயக்கத்தைத் தோற்றுவித்து, முதன்முறையாக மேநாளைக் கொண்டாடியபோது, இளைஞர் குருசாமியும் அதில் பங்கேற்றார். 1928 இல் சிங்காரவேலர் தலைமையில் தென்னிந்தியத் தொடர்வண்டித் தொழிலாளர் பொதுவேலை நிறுத்தம் நடைபெற்றது. சிங்காரவேலர் சிறைத் தண்டனை பெற்றார். விடுதலை பெற்றுவந்த பின்னர், குருசாமியுடன் அவர் நெருங்கியதொடர்பு கொண்டார். அவரின் தோழமையால் குருசாமியின்பால் மார்க்சியப் பொதுவுடைமை கருத்துகள் ஆக்கம் பெற்றன. குடி அரசு இதழ்களில் சிங்கார வேலரின் கட்டுரைகள் குருசாமியால் தொடர்ந்து வெளியிடப் பட்டன; அவரின் கட்டுரைகள் சுயமரியாதை இயக்கக் கொள்கை களுக்கு உரம் ஊட்டின; வளம்சேர்த்தன. குஞ்சிதம்-குருசாமி இருவரும்,சிங்காரவேலரின் இல்லத்தில் அமைந்திருந்த மார்க்ஸிஸ்டு-லெனினிஸ்ட்நூலகத்தை முழுமையாகப் பயன் படுத்திக் கொண்டனர். அவ்விருவர் மீதும், மிகுந்த பற்றும் பாசமும் கொண்டிருந்தார் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்;1935 ஆம் ஆண்டுகுருசாமி முன்மொழிந்த தமிழ் மொழி எழுத்துச் சீர்திருத்தத்தை மிகவும் வரவேற்றுப் பாராட்டினார்.

### புதுவை முரசும் புரட்சிப்பாவேந்தர் நட்பும்

புதுவை நோயல் என்ற புதுவை சுயமரியாதை இயக்கத் தோழர், 1930 ஆம் ஆண்டு குத்தூசி குருசாமியை ஆசிரியராகக் கொண்டு புதுவை முரசு என்ற வார இதழைத் தொடங்கினார், பெரியார் புதுவை முரசிற்கும் அதன் ஆசிரியர் குத்தூசி அவர்களுக்கும் தன் வாழ்த்தினைத் தெரிவித்தார்.

1931, ஆகஸ்டு மாத இதழ் ஒன்றில் ஆசிரியர் குத்தூசி எழுதிய "அறிவிருக்கிறதா?" என்ற தலையங்கத்தில் கிறித்துவப் பாதிரிமார்களின் குற்றங்குறைகளைச் சுட்டிக் காட்டிக் கண்டித்து எழுதியிருந்தார். அதனால் வெகுண்ட பாதிரிமார்கள், பதிப்பாசிரியர் நோயல் மீது அவதூறு வழக்குத் தொடர்ந்தனர். 1934 மார்ச் 4ஆம் நாள், புதுவை கீழ்மை நீதிமன்றம், பதிப்பா சிரியர் நோயலுக்கு உருபாய் ஐநூறு அபராதமும், ஒரு மாதச் சிறைத்தண்டனையும் விதித்துத் தீர்ப்பு வழங்கியது இத்தீர்ப் பினை எதிர்த்து பாரிசிலுள்ள உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. வழக்கு சம்பந்தப்பட்ட குருசாமியின் கட்டுரைகள் ஃபிரஞ்சுமொழியில் மொழிபெயர்க்கப்பட்டு பாரிஸ் வழக்காடு மன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. பாரிஸ் மேலமை நீதிமன்றம், புதுவை தீர்ப்பு முறையற்றது என்று, நோயலுக்கு வழங்கிய தண்டனையையும் அபராதத் தொகையையும் நீக்கி நீதி வழங்கியது.

புதுவை முரசில், புரட்சிப்பாவேந்தர் பாரதிதாசன், கவிதை கள், கட்டுரைகள் தொடர்ந்து எழுதி வந்துள்ளார். இதனால் குருசாமியும் பாவேந்தரும் நெருங்கிய நண்பர்களாயினர். குருசாமியின் கொள்கை உறுதியையும், அறிவாற்றலையும் அறிந்திருந்த பாவேந்தர் 1930 இல் சுயமரியாதைச்சுடர் என்ற ஒரு சிறு கவிதை நூலை எழுதி வெளியிட்டார். அச்சிறு நூலை, புதுவை முரசு ஆசிரியர் திரு.எஸ்.குருசாமி, பி.ஏ., அவர்களுக்குச் சமர்ப்பணம் என்று காணிக்கையாக்கினார். பாரதிதாசனுடனான ஆழ்ந்த நட்பின் விளைவாக அவரின் முதல் கவிதைத் தொகுதியைப் பதிப்பிக்கும் பொறுப்பைக் குருசாமி ஏற்றார். குருசாமியின் மனைவி குஞ்சிதம் அம்மையார், முதல் கவிதைத் தொகுப்பினை 1938 சனவரி 1ஆம் நாள் வெளியிட்டார்.

### சூத்திரன் என்றால் ஆத்திரம் கொண்டு அடி

சோ.இலட்சிமிதரன் பாரதியார் முயற்சியில் இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் தாலுகாவில் 1930 இல் சுயமரியாதை

மாநாடு நடைபெற்றது. மாநாடு நடைபெறும் நகரம் முழுதும் வரவேற்பு வளைவுகள் நிறுவப்பட்டிருந்தன. பல வளைவுகளில், சூத்திரன் என்றால் ஆத்திரம் கொண்டு அடி என்று எழுதப் பட்டிருந்தது. இந்த வாசகங்கள் கலகத்திற்கு வழிவகுக்கும் என்று அச்சமுற்ற காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர், துணைக் குற்றவியல் நீதிபதியிடம், மாநாட்டிற்குத் தடை விதிக்குமாறு வேண்டினார். துணைக் குற்றவியல் நீதிபதி மாநாடு நடைபெறும் இடத்திற்கே நேரில் வந்தாய்வு செய்தார்.

நீதிபதி, துணைக் கண்காணிப்பாளரை நோக்கி, மாநாடு அமைதியாகத்தானே நடைபெறுகின்றது? இதற்கு ஏன் தடை யாணை வேண்டும் என்று கேட்கின்றீர்கள்? என்று கேட்டார்.

கண்காணிப்பாளர், ''சூத்திரன் என்றால் ஆத்திரம் கொண்டு'' அடி என்று எழுதியுள்ளனர். அதனால் கலகம் விளையும், என்றார். அதற்கு குருசாமி, ஆமாம். அதில் தவறென்ன? நீங்கள் சூத்திரன் என்று சொல்ல விரும்புகிறீர்களா? என்று கேட்டார். கண்காணிப்பாளர், இல்லை,என்றார். குருசாமி, அப்படியென்றால் உங்களை எவரும் அடிக்கமாட்டார்கள். தமிழர்களைப் பார்த்து, சூத்திரன் என்று சொல்பவர்கள் எவரா னாலும் அடிக்கப்படுவார்கள், என்று கூறினார்

நீதிபதியிடம், சோ.இலட்சுமிதரன் பாரதியாரும், தோழர் குருசாமியும் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை விளக்கிப் பேசிய பின்னர், நீதிபதி புன்னகைத்தபடி ஏதும் கூறாது சென்றுவிட்டார்.

சுயமரியாதை இயக்கத்தைக் கடுமையாகத் தாக்கிப்பேசி வந்த சத்தியமூர்த்தியைக் கண்டித்து, 1932 இல் குடிஅரசு இதழில் ஒரு கட்டுரை எழுதினார். அழுகிய முட்டை அரை அணாவுக்கு ஆறு" என முட்டையால் அடிப்பதால் மனிதன் செத்துவிடம ாட்டான். அதற்காக இயக்கத்தவர்கள் எவரையும் முட்டையால் அடித்துவிட வேண்டாம். நான் சொன்னால் நீங்கள் கேட்கவா செய்வீர்கள்? நீங்கள் செய்வீர்களாச்சே? சத்திய மூர்த்தி இயக்க வளர்ச்சியைக் கண்டு பயத்தில் ஏதோ உளறுகிறார், பாவம் அவர், அவரை ஏதும் செய்துவிடாதீர்கள்" என்று எழுதினார்.

அடுத்த இரண்டு நாள்களிலேயே புதுக்கோட்டையில் சத்தியமூர்த்தி பேசும்போது இயக்கத்தவர்கள் அழுகிய முட்டை யால் அடித்தேவிட்டார்கள் ஐயரை. செய்தி அறிந்த குருசாமி அண்ணா முதுகு எப்படி இருக்கிறது?" என்று மீண்டும் கிண்டலாக ஒரு கட்டுரையை வெளியிட்டார்.

### கத்தோலிக்கர்களின் ஆவேசம்

சென்னை செயிண்ட் மேரிஸ் அரங்கில் கத்தோலிக்கர்களின் மாநாடு 1933 ஆம் ஆண்டு ஏப்ரல் 17ஆம் நாள் சுயமரியாதை இயக்கத்தைத் தாக்குவதற்கென்றேநடைபெற்றது. சென்னை ஆர்ச் பிசப் தலைமை தாங்கினார். பெரியாரையும் குடிஅரசு பத்திரிகை யையும் கடுமையாகத் தாக்கிக் கண்டனத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இதனைக் கண்டித்து 1933 ஏப்ரல் 30 ஆம்நாள் குடி அரசு இதழில் கத்தோலிக்கர்களின் ஆவேசம்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை வெளியிட்டார். அதில், சுயமரியாதை இயக்கத்திற்கு ஒரு குறிப்பிட்ட மதத்திடமோ அல்லது ஒரு தனி நபரிடமோ எவ்விதமான விரோதமும் கிடையாது. கத்தோலிக்கர்களிடமும் எவ்விதமான சச்சரவும் கிடையாது. ஆனால் சமீபகாலமாகக் கத்தோலிக்கர்கள் மாத்திரம் எங்கு பார்த்தாலும் ஆவேசம் கொண்டு கிளம்புகிறார்களே! அதற்குக் காரணம் என்னவென் றால் அவர்களுடைய மதத்திலுள்ள ஊழல்கள் வெளிப்பட்டு விடும் என்ற பயம்தான். சரக்கு நல்ல சரக்காக இருந்தால் செட்டியா ருக்குக் கோபம் வரக்காரணமில்லை". என்றும் மேலும் தோழர் பெட்ரண்ட் ரஸ்ஸல் ''நான் ஏன் கிறித்துவனல்ல" என்று ஒரு சிறு புத்தகம் எழுதி இருக்கிறார். நமது கிறித்துவத் தோழர்கள் முக்கியமாகக் கத்தோலிக்கத் தோழர்கள், தாங்களே மேதாவிகள் என்பதை மறந்து, இந்த நூலை ஒரு தரமாவது புரட்டிப் பார்க்கும் படி வேண்டுகிறேன். அதில் ஒரு இடத்தில் அவர் கூறுகிறார்:

''அறிவியலிலாகட்டும், ஒழுக்கத்திலாகட்டும் கிறிஸ்துவை விட புத்தரும், சாக்ரடீசும் எத்தனையோ மடங்கு மேம்பட்டவர்கள் என்பது என் அபிப்பிராயம். சரித்திர சம்பந்தமாகப் பார்க்கப் போனால், கிறிஸ்து என்ற ஒருவர் இருந்தாரா? என்பது முழுச் சந்தேகமாக இருக்கிறது. உலக முன்னேற்றத்திற்கு முக்கியத் தடையாக இருப்பது கிறிஸ்து மதம்தான் என்பதை நிச்சயமாகக் கூறுவேன்" எனக் குறிப்பிட்டுள்ளார், ரஸ்ஸல்

''இன்று நடைமுறையில் இருக்கும் கத்தோலிக்க மதம் எத்தகையது என்று சுருங்கக் கூற வேண்டுமானால் இந்து மதத்திலுள்ள ஊழல்களும் கிறித்து மதத்திலுள்ள ஊழல்களும் சேர்த்துத் திரட்டிய பிண்டமே கத்தோலிக்க மதம் என்று சொல்லலாம்" என்றார்.

### பொது உடைமைக் கட்சிக்குத் தடை

பொது உடைமைக் கட்சி, (கம்யூனிஸ்டு கட்சி) 1949 இல் இந்தியத் துணைக்கண்டத்தில் இயங்கத் தடைசெய்யப்பட்டது. அந்நிலையில்பொது உடைமைக் கட்சித் தலைவர்கள் பலர் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர். பொது உடைமைக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டிருந்த தோழர் குருசாமி. பல கம்யூனிஸ்டு இயக்கத் தலைவர்களுக்குத் தன் இல்லத்தில் மறைந்து வாழ வாய்ப்பளித்துள்ளார். கைதான தலைவர்களைச் சிறைக்கே சென்று சந்தித்து வேண்டும் உதவிகள் நல்கியுள்ளார். அதற்காக அவர்கள் நன்றி தெரிவித்துக் கடிதங்கள் எழுதியுள்ளனர்.

### முதல் பொதுத் தேர்தல்

1951, அக்டோபர் திங்கள் 21 ஆம் நாள் ஐக்கிய முற்போக்கு முன்னணி என்ற பொது உடைமைக் கூட்டணி உருவாயிற்று. அந்தத் தேர்தலில் திராவிடர் கழகம், அந்தப் பொது உடைமைக் கூட்டணியினர் வெற்றிபெறவும் காங்கிரஸ் தோல்வியினைத் தழுவிடவுமான சூழலைத் தங்களின் கடுமையான பரப்புரை யின் மூலம் தோற்றுவித்தனர். காங்கிரஸ் தேர்தலில் வீழ்ச்சி யுற்றபோதும், சிறு சிறு அரசியல் அமைப்புகளின் துணை கொண்டு இராஜாஜி ஆட்சிப்பொறுப்பை ஏற்றார். இதனைக் கண்டித்து கொல்லைப்புற வழியில் ஆச்சாரியார் என்று கடுமையான விமர்சனத்தை விடுதலையில் குருசாமி எழுதினார். **தேர்தலைச் சந்திக்காமல் முதல்வர் பொறுப்பினை ஏற்றிடும் அரசியல் வாதிகளைச் சாடிடும் சொல்லாட்சி யாக கொல்லைப்புற வழி என்ற சொற்கள் பிற்காலத்தில் வழங்கலாயிற்று.**

**சலவைத் தொழிலாளர் மாநாடு**

சென்னை, திருவான் மியூரில் 1952 ஆம் ஆண்டு சூன் 29 அன்று நடைபெற்றது. சிறப்பு விருந்தினர் முதல்வர் இராஜாஜி உரையாற்றும்போது, ''அவரவர் சாதித் தொழிலை அவரவர் செய்துவரவேண்டும்! எல்லா மக்களுமே படிப்பது என்றால் இத்தனை பேருக்கு உத்தியோகம் எங்கே இருக்கிறது? ஆதலால் சாதி முறை நல்லதுதான்'', என்று வருணாசிரம விஷத்தைக் கக்கினார். குத்தூசி குருசாமி, ஆச்சாரியாரின் இந்தப் பேச்சை எதிர்த்துக் கடுமையாக விடுதலையில் எழுதியதோடு, அவரின் அந்தப் பேச்சினை விடுதலையில் கட்டம் கட்டி நாள்தோறும் வெளியிட்டு வந்தார். ஆச்சாரியார் பேச்சோடு நிற்கவில்லை. 1953 கல்வியாண்டில் செயல்படுத்தத் தொடங்கினார். பள்ளிக்குழந் தைகள் அரை நாள் பள்ளியில் கற்கவும், மீதி அரை நாள் தகப்பனின் தொழிலைக் கற்கவும் வேண்டும் என்பதே இராஜாஜியின் கல்வித் திட்டமாகும்.

**குலக்கல்வித் திட்டம்**

**இந்தக் குலக் கல்வித் திட்டம் நடைமுறைக்கு வந்தவுடன், ஆத்தூரில் 1953 இல் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டில், கழகத் தோழர்களே கத்திவைத்துக் கொள்ளுங்கள் என்று பெரியார் சீற்றத்துடன் கூறினார். விருதுநகர் பொதுக்கூட்டத்தில் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் காமராஜர், பைத்தியக்கார உத்தரவு என்று குலக்கல்வித் திட்டத்தைக் கண்டித்தார். தமிழ்நாட்டி லுள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும், குலக் கல்வித் திட்டத்தை எதிர்த்தன. ஆச்சாரியார், மேலும் அந்தக் கல்வியாண்டில்,பிராமண மாணவர்க்குச் சாதகமாக பொறியியல், மருத்துவக்கல்லூரிகள் சேர்க்கைக்கான நேர்முகத் தேர்வின் மதிப்பெண்களைக் குறைத்தார்.**

இதனையறிந்த குருசாமி, பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்துள்ள பிராமண மாணவர்களின் எண் ணிக்கையைக் கணக்கெடுத்தார். குருசாமி எந்த நோக்கத்தோடு புள்ளிவிவரங்களைச் சேகரித்தாரோ, அதே நோக்கத்தோடு காமராஜரும், குருசாமிக்கு முன்பே புள்ளிவிவரங்களைச் சேகரித்திருந்தார். அதனையறிந்த குருசாமி, காமராஜரிடம் நெருக்கமான நட்புறவு பாராட்டினார். அந்தக் கல்வியாண்டோடு, குலக்கல்வித் திட்டடத்தைக் கைவிடும்படி இராஜாஜியிடம் காமராஜர் கூறினார்.ஆனால் ஆச்சாரியார் பிடிவாதத்துடன் குலக்கல்வித் திட்டத்தைத் தொடர்ந்தார்.

**சாதி ஒழிப்பு மாநாடு**

இந்தச் சூழலில் 1953 ஆம்ஆண்டு மார்ச் திங்கள் 22ஆம் நாள்சென்னைசெயிண்ட்மேரிஸ்அரங்கில் சாதிஒழிப்புமாநாடு" நடத்திடஏற்பாடுசெய்தார் குருசாமி. அந்த மாநாட்டில் கலந்து கொள்ளுகிறவர்கள் சாதி ஒழிப்பில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர்களாக இருக்கவேண்டும் என்றும் கருதினார். தனது மகளைக் காந்தியார் மகனுக்குக் கலப்பு மணம் செய்து கொடுத்த இராசாஜி அவர்களை மாநாட்டுக்குத் தலைமை தாங்கக் கோரிக் கடிதம் எழுதினார். குருசாமியின் அரசியல் நோக்கத்தைப் புரிந்துகொண்ட ஆச்சாரியார் ''மாநாட்டில் கலந்துகொள்ள இயலவில்லை" என்று பதில் அனுப்பினார். தோழர் குருசாமி உடனே காமராசர் அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மாநாட்டுக்குத் தலைமை தாங்கக் கோரினார். காமராசரும் ஒப்புதல் தந்தார்; மாநாட்டைத் தலைமை தாங்கி நடத்தித் தந்தார். அந்த மாநாட்டிற்குப் பிறகு குருசாமி காமராசர் இடையே நட்பு மிகவும் நெருக்கம் அடைந்ததோடு குருசாமியின் கருத்துகளைக் காமராசர் முழுக்க முழுக்க ஆதரிக்கவும் செய்தார். ஆச்சாரியரின் குலக்கல்வித் திட்டத்தைக் காமராசர் எதிர்த்து அதன்மூலம் முதலமைச்சர் ஆனதற்குப் பெரிதும் காரணமாக இருந்தவர் தோழர் குருசாமி அவர்களே. 1954 இல் இராஜாஜி முதல்வர் பதவியிலிருந்து விலகிக் கொண்டார்

**1952 முதல் 1960 வரை திராவிடர்கழகம் மேற் கொண்ட போராட்டங்களில் குருசாமி கலந்து கொண் டார்; 13 முறைகள் சிறைத் தண்டனையும் பெற்றார்.**

**தோழர் குருசாமியின் எண்ணத்தோடும் உணர் வோடும் ஒட்டி உறவாடிய அவரது வாழ்க்கைத்துணை, தோழர் குஞ்சிதம் அம்மையார் 30-7-1961 பகல் 12 மணியளவில் சென்னை பொதுமருத்துவமனையில் காலமானார். தோழர் குருசாமி சிறகொடிந்த பறவை யன்ன முடங்கிக் கிடந்தார்; உளம் நொந்து வாடினார்; ஆயினும் கொள்கை மறந்தாரில்லை.**

தோழர் குருசாமிக்கு, பெரியாரிடமிருந்து05-10-1961 அன்று கடிதம் ஒன்று வந்தது. குருசாமி வகித்து வந்த, மத்திய திராவிடர்கழகத் தலைவர் பதவியையும், பெரியார் சுயமரியாதை இயக்கப் பிரச்சார நிறுவன அறங்காவலர் (டிரஸ்டி) பதவியையும் ராஜினாமா செய்யக் கோரியிருந்தார். தலைவர் பெரியாரின் ஆணையை ஏற்று, 6-10-1961 அன்று இரண்டு பதவிகளையும் துறந்தார் தோழர் குருசாமி.

சென்னை பெரியார் திடலில், 1962, சனவரித் திங்களில் வாக்காளர் மாநாடு நடைபெறுதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தோழர்குருசாமி, முன்னின்று செய்து கொண்டிருந்தார். தோழர்குருசாமி, காதல் மனைவியை இழந்து நெஞ்சம் நிறைய கவலை கொண்டிருந்த போதும், உற்சாகத்துடன் மாநாட்டுப் பணிகளைக் குறையேதுமின்றி செவ்வனே செய்துமுடித்தார். இம்மாநாடுதான் பெரியாரும், தோழர் குருசாமியும் இணைந்து கலந்து கொண்ட கடைசி மாநாடாகும்.

இம்மாநாட்டில், பொதுத் தேர்தலில், காங்கிரஸ் கட்சியை ஆதரிப்பது என்று முடிவாகியது. ஆதலால், தோழர் குருசாமி காங்கிரஸை ஆதரித்துப் பேசியும் எழுதியும் பரப்புரை செய்தார்.

இதே தேர்தலில், தோழர் ஈ.வெ.கி.சம்பத், தி.மு.க.விலிருந்து விலகித், தமிழ் தேசியக் கட்சி என்ற புதியக்கட்சியைத் தோற்று வித்துத் தென்சென்னை வேட்பாளராகப் போட்டியிட்டார்.

விடுதலையில், ஆசிரியர் குருசாமி தென்சென்னை காங்கிரஸ் வேட்பாளர் டி.டி.கிருஷ்ணமாச்சாரியாரை ஆதரித்துத் தலையங்கம் எழுதினார்.

விடுதலை அலுவலக நிர்வாகி, ஈ.வெ.கி.சம்பத்தின் மைத்துனர். அவர் ஆசிரியர் எழுதிய தலையங்கம், சம்பத்தின் வெற்றியைப் பாதிக்கும் என்று கருதி அத்தலையங்கத்தை வெளியிடாதவாறு தடுத்துவிட்டார். அன்று மாலை இதனை யறிந்த ஆசிரியர் குருசாமி அதிர்ச்சியடைந்தார். உடன் தலைவர் பெரியாருக்குக் கடிதம் எழுதினார்.

**நான் 16 ஆண்டுகளாக விடுதலையில் எழுதி வந்துள்ளேன். இது நாள் வரை தாங்கள் உட்பட எவரும் குறுக்கீடு செய்ததில்லை. இன்று நான் எழுதிய தலையங்கத்தை வெளியிடாமல், ஒரு அலுவலக நிர்வாகி தடுத்துவிட்டார். இது எனக்குப் பெருத்த அவமான மாகும். ஆகவே நான் இன்றிலிருந்து விடுதலையில் எழுதுவதை நிறுத்திக் கொள்கிறேன். இதற்குப்பின் ஆசிரியர் குருசாமி விடுதலையில் எழுதுவதில்லை.**

விடுதலையிலிருந்து குருசாமி விலகிய செய்தியை உறுதிப் படுத்திக் கொண்ட கருமுத்து தியாகராசச் செட்டியார், தமது தமிழ் நாடு இதழில் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். ஆனால் ஆசிரியர் குருசாமி அவருடைய கோரிக்கையை ஏற்காமல், பெரியாருக்காக பெரியாரின் கொள்கைகளை எழுதிய கை வேறு எவர்க்காகவும் எழுதாது, என்று மறுத்துவிட்டார்.

1962 அக்டோபர் திங்களில் ''குத்தூசி'' என்ற இலக்கிய மாத இதழைத் தொடங்கி நடத்திவந்த குருசாமி அவர்கள் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைப் பரப்பிட ''அறிவுப்பாதை'' என்ற வார இதழையும் 1964 ஆம்ஆண்டு மே தினத்தன்று தொடங்கி நடத்தினார்.

**குத்தூசி குருசாமி அவர்கள் திராவிடர் கழகத்தி லிருந்து வெளியேறி சுயமரியாதை இயக்கம் என்ற புதிய இயக்கத்தை 1963 மே 19ஆம் நாளன்று தோற்று வித்தார். திருச்சி தி.பொ. வேதாசலம் தலைவராகவும், குருசாமி பொதுச் செயலாளராகவும் தேர்வு செய்யப் பட்டனர்.**

சாதியற்ற,மதமற்ற, கடவுள் நம்பிக்கையற்ற, சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் பொருட்டு, பகுத்தறிவை அடிப் படையாகக் கொண்டு, சமத்துவம், சகோதரத்துவம் என்ற அடிப்படையில் தமிழ் நாட்டில் இடைவிடாத பரப்புரையாற்றுதல் என்பதைக் கொள்கையாகக் கொண்டு சுயமரியாதை இயக்கம் என்ற பழைய பெயரினால் இயக்கம் தொடங்கப்பட்டிருக்கிறது. இது தொடங்கப்பட்டிருக்கிறது என்பதைவிட தொடர்ந்து பணியாற்றப் புறப்பட்டிருக்கிறது என்பதே சரியானதாகும்.

**துணிவு என்பதுதான் பகுத்தறிவியக்கத்தின் கொடி; நேர்மை என்பதுதான் இயக்கத்தின் சட்டை; எங்கும் என்றும் பரப்புரை என்பதுதான் பகுத்தறிவியக்கத்தின் படைக்கருவி. இக்கொள்கைகளைக் கொண்டு, புதிய இயக்கம் தமிழ் நாடெங்கிலும் செயல்படலாயிற்று.**

1963 ஆம்ஆண்டுசூன் 28 ஆம்நாள் மதுரை கோயில் குடமுழுக்கு விழாவில் குடிஅரசுத் தலைவர் இராதாகிருஷ்ணன் கலந்துகொள்ள இருந்தார். இதனைக் கண்டித்து ''குடியரசுத் தலைவர் நாட்டின் முதல் குடிமகன். நாட்டின் அத்தனை மக்களுக்கும் பொதுவானதொரு ஆட்சித் தலைவர் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலின் குடமுழுக்குத் திருப்பணிக்காக வருவது ஏற்புடையது அன்று. இந்து மத நம்பிக்கை இல்லாத முஸ்லிம்கள், கிறித்துவர்கள், பவுத்தர்கள், சமணர்கள், சீக்கியர்கள், பகுத்தறிவாளர்கள், நாத்திகர்கள்ஆகியோர் மக்கள் தொகையில் சரிபாதி ஆவர். அம்மக்கள்வேதனைப்படுவர்; அவர்கள் மனம்புண்படும்" என்று சென்னை உயர்நீதி மன்றத் தில் நீதிப் பேராணை விண்ணப்பம் (ரிட்மனு) தாக்கல் செய்தார். அதோடு அதனை மீறிக் குடியரசுத் தலைவர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டால் சுயமரியாதை இயக்கத்தினர் மறியலில் ஈடுபடுவர், என்று குடியரசுத் தலைவருக்குக் கடிதம் எழுதினார் குருசாமி. குருசாமியின் கடிதம் கண்டவுடன் குடியரசுத் தலைவர் மதுரைக்கு வருவதை விலக்கிக் கொண்டார்.

**மீண்டும் இந்தி**

1965 ஆம் ஆண்டு மீண்டும் தில்லியரசு இந்திமொழியைத் திணிக்க முற்பட்டது. இந்தித் திணிப்பு நாட்டின் ஒற்றுமைக்குக் கேடு விளைவிக்கும் என்று மொழியும் மதமும் என்ற தலைப்பில், நாட்டின் மீது அக்கறை கொண்ட சான்றோர்கள் சிந்தனையைத் தூண்டும் வகையில் குருசாமி எழுதினார்.

திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் ஈடுபட்டது. மாணவர்கள் தன்னெழுச்சியுடன் இந்தி எதிர்ப்பில் நேரடியாகக் களத்தில் குதித்தனர். மொழிப்போர் வன்முறையில் முடிந்தது. இந்திஎதிர்ப்புப் போரில் பலர் களப் பலியாயினர். தமிழர் கொந்தளிப்பு என்ற தலைப்பில் குருசாமி கண்ணீரால் கண்டனம் தெரிவித்தார்.

1965 ஏப்ரல் 23 அன்று குருசாமியின் அறுபதாவது பிறந்த நாள். அன்று பெரியாரின் பெருந்தொண்டு என்று அறிவுப் பாதையில் தலையங்கம் எழுதினார். அந்தத் தலையங்கம், அவர் தனது தலைவரின் மீதும் அவரின் கொள்கைகளின் மீதும் கொண்டிருந்த பற்றினை விளக்குவதாக அமைந்திருந்தது. சுய மரியாதை இயக்கத்தின் தலைவர் அறிஞர் தி.பொ. வேதாசலனார் தலைமையில் 1965 சூலை 11 இல் 6-வது மாநில சுயமரியாதை மாநாடு, கும்பகோணம் மூர்த்தி அரங்கில் நடை பெற்றது. ஆந்திர நாத்திகச் சங்கத் தலைவர் கோரா மாநாட்டுத் திறப்பாளர். சோவியத் நாட்டைச் சேர்ந்த சுயங்காவ் பொதுவுடைமையும் நாத்திகமும் என்ற தலைப்பில் உரையாற்றினார். கேரளத்தைச் சேர்ந்த எடமருகு கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். அவரது மலையாளச் சொற்பொழிவைத் தோழர் குருசாமி மொழிபெயர்த் தார். குத்தூசியாரின் பேச்சு கழகத் தோழர்களுக்கு எழுச்சியும் புத்துணர்வும் ஊட்டியது. காவிரிக் கரையில் நாத்திக மணங் கமழும் மாநாடாக அந்த மாநாடு அமைந்திருந்தது.

**மறைவு**

இயக்கத்தின் வருங்கால வேலைத் திட்டங்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்க, 1965 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11 ஆம் நாள்கடலூரில் சுயமரியாதைக் கழக மத்தியக்குழு கூட்டத்திற்கு தோழர் குருசாமி ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்த போது, யாரும் எதிர்பாராத நிலையில் அந்தக் கொள்கை வேள் பகல் ஒருமணிக்கு, மாரடைப்பால் மரணம் எய்தினார்.

தன் வாழ் நாளில் கண்டதும், கொண்டதும் ஒரே தலைவர்-பெரியார்.அவர் காட்டிய பகுத்தறிவுப் பாதையில் தன் இறுதிவரை இணைந்து பயணித்தவர் தோழர் குத்தூசி குருசாமி ஆவார், பகுத்தறிவுக் கொள்கையை உயிரெனக் கொண்டு வாழ்ந்து மறைந்த அந்த மாத்தமிழரை என்றும் எண்ணுவோம்;அவர் காட்டிய வழியே நல்வழியென்று ஏற்போம்.

**வாழ்க கொள்கையாளர் சா.குருசாமி!** ●



**தமிழ்மொழி வளர்ப்போர்க்கும்**
**தமிழிலக்கியம்**
**வளர்ப்போர்க்கும்**
**நிரந்தரப் புரவலராக**
**விளங்கும்**

மாம்பலம்

# ஆ. சந்திரசேகர்

அவர்கள்

**2019, ஏப்பிரல் 19**
**வெள்ளி அன்று**

தம் 65ஆம் அகவையில்
அடியெடுத்து வைக்கிறார்.

அவர் நீடூழி வாழ்க!

**– ஆசிரியர் குழு, சிந்தனையாளன்**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - ஏப்பிரல்-2019

| | | |
|---|---|---|
| **தமிழன் குமாரசாமி எஸ்தர்** | கரூர் | 5000/- |
| **க.இராமசாமி** | சென்னை | 5000/- |
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **வெ.அறிவுக்கண்ணன்** | குளித்தலை | 1000/- |
| **இரா. பத்மநாபன்** | மாதவரம்-சென்னை | 700/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |
| **இரா.காந்தி** | வடக்கு மாங்குடி | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - ஏப்பிரல்-2019

| | | |
|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-50. ☎ : 9597526990

Printed by **V. ANAIMUTHU** and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, and printed at Periyar Printers & Publishers Place of Printing No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **V. ANAIMUTHU**